Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

B19

Regd. No. 2 975.

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 190

P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 100.

ஐப்பசித் திருமூல மலர்.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

குரோதிஸ்ரீ ஐப்பசிமீ 1964ஸ்ரீ அக்டோபர்மீ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் 190

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 16	1964ஞு அக்டோபர்மீ குரோதிஞு ஐப்பசிமீ	ஸஞ்சிகை 10,

திருவாய்மொழி நூற்றந்தாதி—77.

இருந்தவன் தான் வந்து இங்கிவரெண்ணமெல்லாம் *
திருந்த விவர் தந்திறத்தே செய்து—* பொருந்தக்
கலந்தினியனாயிருக்கக் கண்ட சடகோபர் *
கலந்தநெறி கட்டுரைத்தார் கண்டு.

இருந்தவன் தான்	திருக்கடித் தானத்திலிருந்த ஸர்வேச்வரனே.	பொருந்த கலந்து	ஒரு நீராய்க் கலந்து
இங்கு வந்து	—இவ்விடத்தேறவந்து	இனியன் ஆய் இருக்க கண்ட	இனிமை யோடு இருக்கும் படியை ஸேவித்த
இவர் எண்ணம் எல்லாம் திருந்த	இவ் வாழ்வாருடைய மனோரதம் முழுவதும் முற்றுப்பெற	சடகோபர்	—ஆழ்வார்
		கலந்த நெறி	—அவன் தம்மோடு ஸம்ச்லேஷித்த படியை
இவர் தம் திறத்தே செய்து	இவரிடத்தே அருள் செய்து	கண்டு	—திருவுள்ளத்தாலே கண்டு
		கட்டுரைத்தார்	—அருளிச் செய்தார்.

*** திருக்கடித்தானத்திலிருப்பைக் கீழ்த்திருவாய் மொழியான *எல்லியுங் காலையில் காட்டிக் கொடுத்த எம்பெருமான் ஆழ்வாரிருப்பிடத்தளவும் மெள்ள வந்து தன்னை முற்றூட்டாக அநுபவிக்கும்படி யாக்கி வைத்து ஒரு நீராகக்கலந்து அத்தாலே தான் இனிமை பெற்றுனாயிருக்கிற படியைக் கண்ட ஆழ்வார் அவன் தம்முடனே வந்து கலந்த படியைப் பேசினாராயிற்று*இருத்தும்வியந்தில்.

இருத்தும்வியந்தென்கிற திருவாய்மொழியில் ஆழ்வார் பேறு பெற்றுக் களிக்கும் விதம் பரம விலக்ஷணமாக உள்ளது. இவ்விஷயத்தில் இப்பதிகத் தோடொத்த பதிகம் இத்திருவாய்மொழி யாயிரத்தினுள் வேறில்லை என்னலாம். எம்பெருமானைப் பெறுவதில் ஆழ்வாருடைய விருப்பம் அதிகமா? ஆழ்வாரைப் பெறுவதில் எம்பெருமானுடைய விருப்பம் அதிகமா? என்று ஆராய்ந்து பார்க்குங்கால் எம்பெருமானுடைய, விருப்பமே அதிகமென்று தேறி நிற்கும். *ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம்* என்றும் *வாஸு தேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:* என்றும் சொல்லி வைத்திருக்கிற எம்பெருமான்படியைப் பார்த்தால், ஒரு சேதநனைப் பெறுகை எம்பெருமானுக்குப் பரம லாபமாகக் காணநின்றதன்றோ.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆகவே ஆழ்வாரைப் பெறுகையே எம்பெருமானுக்குப் பரம லாபமாகையாலும், அதற்குரிய க்ருஷியைப் பண்ணுவானும் அவனேயாகையாலும், அவன் தானும் ஆர்த்தியே செப்பேடாக வந்து உதவுமவனுகையாலும் தானே அர்த்தியாய்த் தன் பேருக வந்து கலந்தான். அதனைக் கண்ட ஆழ்வார் "அந்தோ! நம்மோடு கலப்பதற்கு எம்பெருமான் இரப்பாளனுயிருக்க, நாம் இரப்பாளராய்க் கூப்பிட்டோமே!" என்று வருந்தி 'ஒரு ஸம்ஸாரிசேதநன் பக்கலிலே ஸர்வேச்வரன் தான் செய்தருளும் விஷயீகாரம் என்னே!' என்று ஈடுபடுகிருராய்ச் செல்லுகிறது இருந்தும் வியந்து திருவாய்மொழி. ... ... (77)

ஸ்ரீராமாநுஜன் ஜீவியச் சந்தா செலுத்தியவர்.

ஸ்ரீமான் உவே. M. O. அளகசிங்கராசாரியார் M.A., BL., பக்தன் ஆசிரியர், திருவல்லிக்கேணி. இவர் நம் ஸ்ரீராமாநுஜனுக்கு ஜீவியச் சந்தாதாரராய்ச் சேர்ந்தார். ஸ்ரீராமாநுஜன் 187-ல் வெளி வந்த வைசாகோத்ஸவ உபந்யாஸ மாலையில் தாம் மிகவும் ஈடுபட்டதையே இதற்குக் காரணமாகவும் தெரிவித்தார். ஜீவியச் சந்தாதாரர்களுக்கு நூறு ரூ. விலையுள்ள புத்தகங்கள் கிடைக்குமென்று எதிர்பார்த்துத் தாம் ஜீவியச் சந்தா செலுத்தவில்லையென்றும் விசேஷமான அன்பு காட்டித் தெரிவித்துள்ளார். இவருடைய உள்ளம்நிறைந்த அன்புவாழி.

ஸாதாரணச் சந்தா செலுத்தியவர்கள்

106. ஸ்ரீ.உ.வே. P. B, சிங்கராசாரியர். அட்வகேட், சென்னை
107. ,, V. A. ஐயங்கார். மல்லேச்வரம் பெங்களூர்
108. ,, T. K. ஸ்ரீநிவாஸரங்கன். புதுடில்லி
109. ,, T. ராமாநுஜாசாரியார். அட்வகேட், திருவிந்தளூர்
110. ,, S. P. திருவேங்கடமையங்கார், அட்வொகேட் தேவகோட்டை
111. ,, R. P. ராமையங்கார், ஆழ்வார் திருநகரி
112. ,, T. S. ராகவாசாரியார், மயிலாப்பூர்.
113. ஸ்ரீ ஸ்ரீநவநீத கிருஷ்ண ராமாநுஜ ஸபா (L. B. T. ஸுப்ப ராஜுலு.) உடுமலைப் பேட்டை.
114. ஸ்ரீ K. N. S. ஸ்ரீநிவாஸன். நாலாட்டின் புத்தூர்
115. ,, M. K. ரங்க ராமாநுஜம். ஸைதா பேட்டை
116. ,, K. P. ஸுப்ரம்மண்யம். கோடம்பாக்கம்
117. ,, P. M. பெருமாள். சாலியத்தெரு காஞ்சீபுரம்
118. ,, S. உலகநாதன் அவர்கள். கீழ் புவனகிரி
119. ,, G. Chinniah Naidu. Choolai Madras.
120. ,, T. T. வெங்கடாசலம் பிள்ளை. காட்டுமன்னர் கோவில்

அன்பர்களுக்கு அறிவிப்பு:—இது 190-வது ஸஞ்சிகை. 192-ல் வருஷம் முடிவுபெறும். இவ்வருஷத்தில் இதுவரையில் 120 நபர்கள்மட்டுமே சந்தா செலுத்தியிருக்கிருர்களென்பது தெரிந்திருக்கின்றது. நாம் அனுப்புகிற பத்ரிகைகள் திரும்பிவருவதில்லை. அதனுல் அவரவர்களுக்குக் கிரமப்படி கிடைத்துவருகிறதென்பதை நிச்சயிக்கிறேம். அவரவர்கள் தங்கள் கடமையை உணரவேண்டுமென்பதை நாம் உணர்த்த வேண்டுமோ?

இங்ஙனம்,
மானேஜர்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முக்கியமானதொரு விஜ்ஞாபனம்.

சென்ற இதழில் சரணாகதி தீபிகையென்கிற தீபப்ரகாஶ ஸ்தோத்ரத்திற்கு
வியாக்கியானத்தைப் பூர்த்தி செய்து வெளியிட்டோம். 'அடுத்த இதழில்
ஸ்ரீ வரதராஜபஞ்சாஶத்தின் வியாக்கியானத்தைப் பூர்த்திசெய்து வெளியிடுவோம்'
என்றும் அதில் தெரிவித்திருந்தோம். அப்படியே அஃது அச்சாகி வருகிறது.
ஆனால் அதனைப் பத்திரிகையில் சேர்த்து வெளியிடுவதைப்பற்றி ஏற்பட்ட
ஆலோசனையைச் சிறிது தெரிவிக்கவேண்டியதாகிறது. ஸ்ரீராமாநுஜனை
அநுபவிப்பவர்களில் வடமொழிப் பயிற்சியுடையார் அதிகமாக இருக்கமாட்டார்
கள் போலும். மூல சுலோகங்களை தேவநாகரலிபியில் பார்க்கும் போதே வெறுந்
தமிழர்களுக்கு மிக வெறுப்பு விளைகின்றது. வியாக்கியானம் தமிழ்ப் பாஷையா
யிருந்தாலும் விஷயங்கள் பெரும்பாலும் ஸம்ஸ்க்ருதாநுபந்திகளாயிருப்பதனால்
தங்களுக்கு ஒன்றும் புரியவில்லையென்பதுபற்றி அதையும் வெறுக்க நேர்கின்ற
தாம். "ஸம்ஸ்க்ருத நூல்களின் உரைகளைத் தனிப் புத்தகமாக அச்சிட்டு
அபேக்ஷையுள்ளவர்களுக்கு அனுப்பலாமே" யென்று சிலர் எழுதுகிறார்கள்.
அநதிகாரிகள் கையிலே இவை அதிகமாகச் சென்று சேருவதைப்பற்றி நமக்கும்
வருத்தமுண்டாவதுண்டு. "ஶ்ருத்வா ரதம் வரித்வா ஸம்பிதம் வரிஶ்ஸ்ஹஸ்ஸீஷம் வாநஸ்ரு
விக்ருதம் தத்கும்வா ஸம்வி நீரவெள ந உநஸா ததுவஷ்யாம ஶாகயா: । ஹெ ஸஹ்ருத்! த
வெதஷெவ கூஶமும் பஸா நரெணாடிராகஸ ஸஹ்ஸாா விஜோகநவஷ்ஸ மிநா த்ஸெணீஶ
க்ருதம் நாஸ்நா ॥" என்றான் ஒரு மஹாகவி. மதிப்பறியாத குரங்கின் கையிலே
கிடைத்த ரத்னம் பாறையிலிட்டுப் பொடிபடுத்தப்படாமைக்கு உகக்கவேணு
மென்றது இந்த சுலோகத்தில். புஸ்தகம் காகித ரூபமாயிருப்பதால் விஷயம்
தங்களுக்கு உபயோகப்படவில்லையென்று காகிதங்களைக் கிழித்துப் பல் பொடி
கட்டுவது முதலான காரியங்களுக்கு விநியோகிப்பர்களோ! என்கிற வருத்தமு
முண்டாகிறது. ஆகவே இதைப்பற்றி ஆர அமர ஆலோசித்துச் செய்யவேண்டி
யிருப்பதால் இந்தஸஞ்சிகையில் ஸ்தோத்ரவ்யாக்கியானம் சேர்க்கப்படவில்லை.

இந்த ஸஞ்சிகை ஐப்பசித் திருமூலமல்ராக வெளிவருவதால் மணவாள
மாமுனிகளின் வைபவம் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மணவாளமாமுனி
களின் ஸ்தோத்ர க்ருதிகளாகப் பல் நூல்கள் மாமுனிகளின் காலத்திலேயே
அவதரித்திருந்தாலும், அஸ்மத்குல கூடஸ்தரான ப்ரதிவாதி பயங்கரர்சார்யரும்,
எறும்பியப்பாவும் ஸாதித்த வரவரமுநிசதகங்களிரண்டும் மிகவும் ஆக்யாத
மானவை. அவை யிரண்டுக்கும் மணி ஆவாள வியாக்கியான மியற்றி இவ்
வைப்பசித் திருமூலத்தில் வெளியிட்டுதவவேணு மென்று கோயிலில் வாழும் சில
பரமாப்தர்களும், விசேஷித்து, ஆப்தாக்ரேஸரரான திருமலை அனந்தாண்பிள்ளை
சதாபிஷேகாசாரியரும் உத்போதனம் செய்தபடியால், முந்துறமுன்னம் அஸ்மத்
குலகூடஸ்தாசார்ய க்ருதியான ஶதகம் வியாக்கியானிக்கப்பட்டது. பெரும்
பான்மை அச்சேற்றியுமாயிற்று. அது ஐப்பசித் திருமூல நன்னாளில் அரங்கேற்ற
மாகி வெளிவரும். அது பக்தர்களுக்குக் கிடைக்கும் விதம் பிறகு அறிவிக்கப்படும்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மணவாளமாமுனிகளின் மஹோத்ஸவ விளம்பரம்.

—(o)—

* ஜகதப்யுதயைகமூலம் * என்று அஸாதாரணமான புகழ்பெற்ற ஐப்பசித் திருமூல நன்னாளில் திருவவதரித்த மணவாளமாமுனிகளின் மஹோத்ஸவம் ஸகல திவ்ய தேசங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றாலும் ஸ்ரீ காஞ்சீ தேவப் பெருமாள் ஸன்னிதியில் நடைபெறும் க்ரமம் பரம விலக்ஷண மென்பதை அநுபவ ரஸிகர்கள் அறிந்திருப்பர்கள். நிகழும் ஐப்பசி மீ 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதலாக 8வ ஞாயிற்றுக்கிழமை திருமூல நன்னாளளவும் பத்து நாள் மஹோத்ஸவ மும், மறு நாள் இயற்பா சாத்துமுறையும் (30—40—64 to 9-11-64) நடைபெறும். அடியார்கள் குழாங்கூடி யநுபவிக்க ஆப்தம். .... *

செய்திகள்.

1. வேதவேதாந்த வர்த்திநி ஸபா. திருவல்லிக்கேணியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்த ஸபைக்கு 96 ஆம் வருஷக் கொண்டாட்டம் 4—10—64 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி திருமுன்பே வழக்கப்படி நடந்தேறியது. முன்னடி 4 நாட்கள் இதன் சார்பாக ஸ்ரீ வானமாமலை மடத்தில் வித்வான்களின் உபந்யாஸங்கள் நடந்தன. வேத, திவ்யப்ரபந்த, ஸ்தோத்ராதிகளில் பரீக்ஷிக்கப் பட்டுத் தேறின வித்யார்த்திகளுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. ஸ்ரீ. உ. வே. P. M. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி (ரிடைர்டு ஸெஷன் ஜட்ஜ்), ஸ்ரீ. உ. வே. ஆசால் சேஷாசாரியர் ஸ்வாமி (அட்வகேட்) இவ்விரு திருநாமங்களின் பொறுப்பில் இந்த ஸபையின் காரியங்கள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

2. ஸ்ரீ காஞ்சியில் வேதாந்த தேசிக மஹோத்ஸவம். கவிதார்க்கிக கேஸரியான ஸ்ரீமந் நிகமாந்த மஹாசார்யனுடைய திருவவதாரஸ்தலமான திருத்தண்காவில் ஆசார்ய ஸார்வபௌமனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பத்துநாளும் காலை மாலை தேவப்பெருமாள் மாடவீதிப் புறப்பாடுடன் மிக்க சிறப்பாய் நடந்தேறியது. காலை வேளைகளில் திருப்பல்லக்கும், மாலை வேளைகளில் வாஹனங்களும் வழக்கப்படி நடைபெற்றன. ஸ்ரீ. உ. வே. கந்தாடை ஸ்ரீராமதாசரதி ஐயங்காருடைய சிறந்த முயற்சியினால் இம் மஹோத்ஸவம் ரமணீயமாக நடைபெற்றது. ஒன்றிரண்டு வேளைகளில் வருண பகவானது உபப்லவம் சிறிது நேர்ந்தாலும் உத்ஸவத்திற்கு அதுவும் ஒரு அழகாகவே யிருந்தது முன்னே இயல் கோஷ்டி ஸ்வாமிகளும், பின்னே வேதபாராயண ஸ்வாமிகளும் தவிர வேறு ஒருவரும் அநுயாத்ரையில் கலந்து கொள்ளாதது ஒரு பெரிய குறையே. ஆசாரியர்களின் மஹோத்ஸவத்திற்கு மிக முக்கியமானவை அலங்கார திருமஞ்சனமும், ஆஸ்தானத்தில் ஸேவை சாத்துமுறைகளும். இவற்றால்தான் உத்ஸவம் விசேஷமாகப் பரிமளிக்கு மென்பதை தருமகர்த்தாக்கள் உணர்ந்திருக்கிறார்கள். .... *

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி நம்பிள்ளை மஹோத்ஸவ ப்ரகடன பத்திரிகை.

(குரோதி ஞு 1964)

ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதியின் திருமுன்பே திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் நம்பிள்ளைக்கு நாளது ஐப்பசிமீ 25வ (10-11-64) செவ்வாய்க்கிழமை உத்தராட நக்ஷத்திரத்தில் திருவவதார மஹோத்ஸவம் தொடக்கமாகி கார்த்திகைமீ 4வ (19-11-64) வியாழக்கிழமை திருக்கார்த்திகை திருநக்ஷத்திரத்தில் சாற்றுமுறையாகும். பத்து நாட்களிலும் அலங்கார திருமஞ்சனமும் இரண்டு வேளைகளிலும் திவ்யப்ரபந்த ஸேவை கோஷ்டிகளும் ததீயாராதனமும் விசேஷ வைபவமாக நடைபெறும். வித்வான்களின் உபந்யாஸங்களும் இடையிடையே நடைபெறும். ஆஸ்திகர்களனைவரும் வந்திருந்து அநுபவித்து ஆனந்திக்கவேணும். இம்மஹோத்ஸவ ஸேவார்த்தமாக வெளியூர்களிலிருந்து வரும் பக்த பாகவதோத்தமர்களுக்கு ஸ்தலவசதி முதலிய ஸௌகரியங்கள் விசேஷமாகச் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீவைஷ்ணவ பக்த சிகாமணிகள் குழாங்கூடியிருந்து அநுபவிக்கக்கூடிய மஹோத்ஸவமிது.

இரண்டாயிரம் ரூபாய் செலவில் விசேஷ வைபவங்களுடன் நடைபெற்று வருகின்ற இந்த மஹோத்ஸவத்திற்கு பக்தர்கள் உகந்து உபகரிக்கும் பொருளே மூலதனமாகும். அவரவர்கள் யதாசக்தி பொருளுதவி புரிந்து ஆசார்ய ஸார்வபௌமருடைய இம் மஹோத்ஸவத்தை மிகவும் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இங்ஙனம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்,

அண்ணங்கராசாரியர்,

(நம்பிள்ளை ஸன்னிதி காவலாளர்.)

30—10—64.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சென்ற சோபக்ருதுவூ (1963) வரவுகள்.

	ரூ.
ஸ்ரீமத் பரமஹம்ஸ காஞ்சி. அழகிய மணவாள யதீந்த்ரப்ரவண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி	10
ஸ்ரீ வேலூர் ரங்கநாத செட்டி சாரிடீஸ் மதராஸ்–5 (திருவல்லிக்கேணி)	15
ஸ்ரீ உ. வே. V. V. ஐயங்கார் ஸ்வாமி, கரியமாணிக்கம்	25
,, R. Varadarajan, New Delhi	20
,, குளித்தலை Dr. R. Srinivasan	10
,, மங்களம்பாடி ஜகந்நாதாசாரியர், திருவல்லிக்கேணி	40
,, விட்டலாபுரம் வெங்கடாசாரியர் ஸ்வாமி	10
,, A. K. Satagopan, Ambathur	15
,, கோவை C. R. ராமஸ்வாமி ஐயங்கார் B.A.,B.L.,	10
,, T. N. மகரபூஷணஸ்வாமி தென்திருப்பேரை	5
,, அகாம் மாங்காடு திருவேங்கடாசாரியர்	25
,, சென்னை A. ஸ்ரீநிவாஸய்யங்கார்	21
,, S. ஸுந்தரராஜய்யங்கார் அட்வொகேட், மதுரை	7
,, A. K. ரங்கஸாமி ஐயங்கார், T. Nagar	10
உயர்திரு. காஞ்சீபுரம் கண்ணப்ப நாயகர்	25
ஸ்ரீ உ. வே. அனக்காவூர் பண்டித கிருஷ்ணமாசாரியர்	10
,, பெருங்குளம் மிராசுதார் S. R. மாயக்கூத்தய்யங்கார்	10
,, A. ராமாநுஜாசாரி, B. A., புதுடில்லி	5
ஸ்ரீ A. கன்னைய நாயுடு, சென்னை	25
ஸ்ரீ A. Ramaswamy Iyengar K.G.F.	10
ஸ்ரீ K. N. Srinath, ,,	5
ஸ்ரீ R. Achuthan ,,	5
ஸ்ரீ R. ராமஸ்வாமி ஐயங்கார் ,,	10
ஸ்ரீமதி M. A. கிருஷ்ணம்மாள், திருவல்லிக்கேணி	25
ஆத்தூர் ஸ்ரீதரன் V. கேசவலு நாயுடுகாரு	50
சென்னை மங்களம் பத்மம்மா	25
கோனேரிகுப்பம் மரகதவல்லியம்மா	40
சென்னை M. தனகோடியம்மா	10
,, (Late) V.R. எதிராஜலுசெட்டி	11
V. C. சக்கரபாணி, சைதாப்பேட்டை	11
Sri Gopikrishana Ladha, Calcutta	5
ஸ்ரீமான்கள் விக்ரவாண்டி P.S. திருநாராயண பாகவதர் வகையரு	35
முதல் நாள் உபயம் சென்னை உப்பட்டூர் ஆழ்வார் செட்டி சாரிடி	60
சாத்துமுறை இரவு உபயம் ஊரா ஸ்ரீராமுலு செட்டி சாரிடி	125

இப்படிக்கு,

P. B. ANNANGARACHARYA,

29, South Mada St., L. Kancheepuram.

ஸ்ரீ வேங்கடேச்வரா பிரஸ், காஞ்சீபுரம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆப்தர்களுக்கு
அடியேனுடைய சில விண்ணப்பங்கள் P.B.A.

அடியேனுடைய உடல் நிலையில் ஜிஜ்ஞாஸையுள்ள பல ஆப்தர்களின் ஸ்ரீமுகங்கள் அடிக்கடி கிடைத்து வருகின்றன. சில பெரியார்கட்கு மட்டும் பதில் எழுதமுடிகிறது. அனைவருமறிய வேண்டி இவ்விண்ணப்பம் எழுதலாகிறது. அடியேனுக்கு அஸ்வாஸ்த்யம் ஏற்பட்ட நாள் 21—2—64 தேதி யென்று பலருடைய நினைவிலுமிருக்கும். அடியேனும் தினப்படி யெண்ணிக்கொண்டிருக்கிறேன். 21-10-64 ஆகிய இன்று இந்த விண்ணப்ப மெழுதுகிறேன். ஏற்றத் தாழ்வின்றி எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. நேரில் விசாரிப்பவர்களுக்கு 'குணம்' என்று அடியேன் சொல்லுவதுண்டு. அவ்வளவையே கொண்டு ஸந்துஷ்டர்களாய்ப் போவாருமுண்டு. சிலர் விவரித்துக் கேட்கவிரும்பினால் அவர்களுக்கு "ரோகஸ்ய ஸமதா குண:" என்பதையெடுத்துரைத்து விவரிப்பேன். இதைப் பற்றிச் சிறிது விவரிக்கிறேனிங்கு. ஈடு முதலான நம் ஆசாரியர்களின் திவ்யக்ரந்தங்களில் "ஸாத்மிக்க ஸாத்மிக்க" என்றும் "ஸாத்ம்யபோகப்ரதானம்" என்றும் திவ்யஸூக்திகளை ஸேவிக்கும்போது, நாம் அதிகமாகப்பழகின - பழகுகிற ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களில் எதிலும் இந்த ஸாத்ம்ய பதம் காணப்படவில்லையே; ஈட்டிலும் பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானங்களிலுமே இந்த ஸாத்ம்ய பதப்ரயோகம் மலிந்து காண்கிறது; இதையநுஸரித்து வேதாந்ததேசிகன்தாமும் த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்னாவளி, ஸாரம், ஸ்தோத்ரபாஷ்யம் இவற்றில் ப்ரயோகிக்கக்காண்கிறோம். ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களில் காணப்படாத இந்த ப்ரயோகத்திற்கு எது மூலம்? என்று அடியேன் பிரபலமாக விமர்சிக்கத்தொடங்கினே னிளமையில் சில பெரியார்கள் "ஸாத்ம்யபோகப்ரதாநாத்" என்கிற ப்ரயோகம் அச்சுப் பிழையென்றும், "ஸ்வாத்ம போகப்ரதாநாத்" என்பதே ஸமீசீநபாடமென்றும் சொன்ன வளவோடு நில்லாமல் எழுதியச்சிட்டும் போந்தார்கள். [வைகுண்டவாஸியான, ஸ்ரீமத் பரமஹம்ஸ, கோழியாலம் ஸ்வாமியின் க்ருதியொன்றில் இதை ஸ்பஷ்டமாகக் காணலாம்.] அப்படி திருத்துவது மிக்கஸாஹஸமென்று அடியேன் விஸ்தரித்து நிரூபித்திருப்பதையும் பெரும்பாலோர் கண்டிருப்பர்கள். அக்காலத்தில் இந்த ஸாத்ம்யபதத்திற்கு ஆகரம் கண்டறியவேணுமென்று மிக முயன்றேன். வைத்யக்ரந்தங்களில் சரகம் ஸுச்ருதம் என்று ப்ரஸித்தமான க்ரந்தங்களுண்டே, அவற்றிலுள்ளதாகக் கேட்டு சரகஸம்ஹிதையை ஆராய்கையில் அதில் இந்த ப்ரயோகம் மலிந்திருப்பதைக் கண்டுகளித்தேன். அப்போதே 'ரோகஸ்ய ஸமதா குண:" என்பதையும் அதில் காணநேர்ந்தது. நாற்பது வருஷங்களுக்கு மேலாக இந்த வசனம் எனது நெஞ்சில் ஊறிக்கிடக்கின்றது. ஆனால் இந்த வசனம் நினைவுக்கு வருவதற்கு 21—2—64-க்கு முன்வரையில் ப்ரஸக்தியே யுண்டாகவில்லை; உண்மையில் ரோகவார்த்தைக்கே இடமில்லாமலிருந்தபடியால். இப்போதும் உடலில் ரோகமென்பது ஏதுமில்லை. ஏதோ அஸ்வாஸ்த்யம் விளைந்திருப்பதை ரோகமென்று வழங்கினால் வழங்கலாம். அதன் தற்கால நிலைமை எப்படிப்பட்டதென்று கேட்டால் குணம் என்னத் தட்டில்லை. உண்டான அஸ்வாஸ்த்யம் ஏறுமலும் இறங்காமலும் ஸமநிலையில் இருப்பதால் "ரோகஸ்ய ஸமதா குண:" என்று கீழே காட்டிய சரக வசனப்படி குணமென்று அடியேன் கொண்டிருக்கிறேன்.

பரமாப்த மணியான ஸ்ரீ உ வே சித்ரகூடம். வித்வான் அ. வேங்கடாசாரியர் ஸ்வாமி இவ்விடமெழுந்தருளி அளவளாவுகையில் 'இதில் இதற்கு மேல் குணபாகம் எதிர்பார்க்க முடியாது; இந்த அளவிலே நின்றிருப்பதையே மிகவும் அனுகூலமாகக் கொள்ளத்தகும்'

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என்று ஸாதித்தார். அந்த ஸ்வாமியோ டொத்த ஆப்தராக க்வாளியர்நகரத்தில் விளங்கும் ஸ்ரீ. உவே. S. ஸத்யமூர்த்தி ஸ்வாமிக்கு இதை ஒரு விண்ணப்பத்தில் எழுதினேன்: இப்படியொரு வைத்யர் சொல்லுகிறுரென்று விஜ்ஞாபித்திருந்தேன். அதை அடியேன் எழுதும்போது "உன்மனத்தால் என்னினைந்திருந்தா யென்னும்படி மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன் நினைவு எத்தகைத்தோ அறியேன்" என்று எழுதிமுடிக்க நினைத்திருந்தும் அது எழுதப்பெறுமல் போயிற்று. அந்த ஸ்வாமியிடமிருந்து மூன்றுநாளிலேயே கிடைத்த பதில் ஸ்ரீ முகத்தில் "வைத்யர் சொன்னதாக தேவரீர் எழுதியிருப்பது ஸரி; மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன் நினைவையறிந்து சொல்லவல்ல மருத்துவர்களுளரோ ?" என்றிருக்கக்கண்டேன். கண்டதும் "உரோம கூபங்களாய்க் கண்ண நீர்கள் துள்ளஞ்சோர" என்னும் நிலைமையெய்தினேன். *நிர்வாணம் பேஷஜம் பிஷக்* *என்றும் மருந்தும் பொருளுமமுதமுந்தானே* என்றும் கூறப்பட்ட நாராயணஹரி வைத்யர் ஏதோ நன்மை யாகவே திருவுள்ளம்பற்றியிருக்கிறுர் போலும் என்று நெஞ்சு உணர்ந்தது எதனுல்? அடியேனுக்குத் தோற்றின தோற்றமே ஸ்ரீ ஸத்யமூர்த்திஸ்வாமியின் நெஞ்சிலும் தோன்றினபடியால்.

மதுரையில் எழுந்தருளியிருக்கும் ஆப்ததமரான ஸ்ரீ உ வே. S. ஸுந்தர ராஜய்யங்காரென்கிற அட்வகேட் ஸ்வாமி சில வாரங்களுக்குமுன்பு ஒரு ஸ்ரீமுகம் ஸாதித்தார். "திருமலையாத்திரை போயிருந்து காஞ்சீபுரத்திற்கு வந்து தேவரீரையும் ஸேவித்து ஆழ்வார் திருநகரிக்குப் போகிற சில ஸ்ரீவைஷ்ணவர்கள் இவ்விடம் தங்கி யிருந்து போனுர்கள். தேவரீருடைய திருமேனி பாங்கைப்பற்றி அவர்களை விசாரித்ததில் கவலைக்கிடமாகச் சொன்னுர்கள்; ஸ்வாமி ஒருவரோடும் பேசமுடிகிறதில்லை; புறப்பாடு கோஷ்டிகளுக்கும் போவதில்லை; நித்யப்ரபாத திருவீதிகோஷ்டி அறவே நின்றுவிட்டது - இத்தியாதிகள் சொன்னுர்கள்; உண்மையை உடனே தெரிவிக்க வேணும்" என்று அந்த ஸ்வாமிக்கு உடனே சுருக்கமாக பதில் விஜ்ஞாபித்தேன். இங்குச் சிறிது விரிவாகவே யெழுதுகிறேன், கீழ்க்கண்ட ப்ரவாதம் திருநாராயணபுரப் பிராந்தங்களிலும் இதே விதமாய்ப் பரவியிருப்பதாகத் தெரிகிறபடியால் சிறிது விவரித் தெழுதவேண்டியதாகிறது.

ஒருவரோடும் பேசமுடிகிறதில்லை யென்பது தவறு பகவத் பாகவதக்ருபையினுல் அந்நிலை சிறிதும் ஏற்படவில்லை. சென்னையில் வாரந்தோறும் சனி ஞாயிறுகளில் நடைபெற்றுவந்த உபந்யாஸம் நிறுத்தப்பட்டிருக்கிறதென்பது வாஸ்தவம் நிர்பந்த மூலமாக அவசியமாய் ஏற்படுகிற ப்ரவசனங்களை நிறுத்துவதில்லை அது மாதந்தோறும் ஏதோ நிமித்த விசேஷமடியாக அனேகமாய் ப்ராப்தமாகும் இதற்கு மாருக டாக்டர் களின் நிபந்தனைகள் தீவிரமாகவுண்டு. எனினும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க அடியேனுல் முடியாதென்பதை உலகமறிந்துள்ளது. 'த்ரிகரணங்களுக்கும் பரிபூர்ணமாக ஓய்வு கொடுத்துச் சில மாதங்களிருந்தால் பிறகு பரிபூர்ண சக்தியுடன் பரிபூர்ணநுபவம் பண்ணப்ராப்தமாகுமே' என்று ஹிதபரர்கள் பலர் தெரிவிப்பதுண்டு; அதற்குக் கைகூப்புவது தவிர வேறொன்றும் நானறியேன். "புறப்பாடு கோஷ்டிக்குப் போவதில்லை" என்கிற வார்த்தையும் தவறு; கடந்த எட்டுமாதங்களில் அடியேன் தேவப்பெருமாளுடைய இயல் கோஷ்டியில் அந்வயிக்கப்பெருத நாள் நாலைந்து தேறினுல் அதிகம். வைசாக ப்ரஹ்மோத்ஸவத்தில் பெரிய காஞ்சீ கோஷ்டிக்குப்போக முடியாமலிருந்ததேயல்லது. நித்ய நைமித்திகாத்யுத்ஸவ கோஷ்டிகளை இழக்கும்படியான அசக்தியை இதுகாறும் பேரருளாளன் ஸங்கல்பிக்கவில்லை. ஆங்கிலத்தில் ஆப்ஸன்டு. லேட் என்பர்களே, அவ்விரண்டுக்கும் அவகாசலேசமுமின்றியே அந்வயித்து வருகிறேன்.

நித்யப்ரபாத திருவீதிகோஷ்டி நின்றுவிட்டதென்பதும் அபத்தம். இது செவ்வனே நடைபெற்று வருகிறது. உத்ஸவாதி விசேஷமடியாகச் சில நாட்களில் நின்றுபோ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யிருக்கலாம். 46 ஸம்வத்ஸரமாக அவிச்சின்னமாய் நடந்துவருகிற இந்த நித்யப்ரபாத
கோஷ்டி பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவருளாலும், ஆழ்வாரெம்பெருமானார்
ஜீயர்கடாக்ஷ விசேஷத்தாலும் நீடூழி நடைபெற்றுவருமாக இதில் ஒரு துக்கம் தெரிவிக்க
வேண்டியதுண்டு; (அதாவது) இந்த நித்யகோஷ்டியானது நித்யஸ்மரணீய கீர்த்தி
மூர்த்தியான ஸ்ரீ மாம்பள்ளம் ஸ்வாமியின் *சுபேந மநஸா த்யானத்துடன் 1919
(ஸித்தார்த்தி௵) கார்த்திகை மாதத்து சித்திரா நக்ஷத்ரத்தில் தொடங்கப்பட்டதிலிருந்து
அடியேன் காஞ்சியில் வாழும் நாட்களில் ஒருநாளும் ஒருக்ஷணமும் விடாமல்
அநுபவித்துவந்தவன். மநுஷ்ய சரீரபாகையாலே ஸாதாரணமான ஜ்வராதிகள்
ஏற்பட்டாலுங்கூட, சென்னை முதலான விடங்களிலிருந்து இரவு 1, 2, 3, மணிக்குமேல்
ஊர் வந்துசேர நேர்ந்தாலுங்கூட இந்த நித்யகோஷ்டியை இழந்தவனல்லேனென்று
சபதபூர்வமாகச் சொல்லுவேன். அடியேனுக்கு இது பெரிய இறுமாப்புமாகும். சில
ஆப்தர்களிடத்தில் விநோதமாகச் சொல்லிக்கொண்டிருந்தவொரு வார்த்தையையும்
உதாஹரிக்கிறேன். - 'என்றைக்காவதொருநாள் ப்ராணோத்க்ரமணமாகுமே; அது நிசியில்
ஏற்பட்டுத் தங்கியிருக்க நேர்ந்ததானால் அன்றைக்கும் ப்ரபாத கோஷ்டியில் அந்வயித்துத்
தான் தீருவேன்' என்று. "ஒழிவில் காலமெல்லா" மென்கிற பாசுரத்திற்கு கீழ்க்கழிந்த
காலத்தையுமிழுத்து அதிலும் கைங்கரியம் செய்யப்பாரிக்கிருராழ்வார் என்று சிலருடைய
நிர்வாஹமாக நம்பிள்ளை காட்டியருளுகிற முறையில் இதுவும் சேரட்டும். உள்ளபடி
அடியேனுடைய ஹ்ருதயஸ்திதியைத் தெரிவித்தபடி. அப்படி உறுதிகொண்டிருந்த
அடியேன் எட்டு மாதமாக இந்த கோஷ்டியில் அந்வயிக்கப்பெறுமலிருப்பதுண்டே.
இஃதொன்றுதான் சோசநீயமான தௌர்பாக்யம். சென்ற ஆனியாடியில் இரண்டு
மூன்று வாரங்கள் பிடிவாதமாக இந்த கோஷ்டியில் அந்வயித்ததுமுண்டு; அசக்தி
அதிகரித்ததனால் இருந்தவிடத்திலிருந்தே ச்ரவணாநந்த மநுபவித்து வருகிறேன். ஆக
இவ்வளவால் தெரிவித்தது, அடியேன் ஒருவரோடும் பேசமுடியாமலிருக்கிறேனென்றது
அந்ருதம்; தேவப்பெருமாளுடைய இயல் கோஷ்டிக்குப் போகமுடியாமலிருக்கிறே
னென்றதும் அபத்தம்; நித்யப்ரதக்ஷிணகோஷ்டி நின்றுவிட்டதென்பதும் அஸத்யம் -
என்று விஜ்ஞாபித்ததாயிற்று இவை ஸங்கடம் கலசின ஸந்தோஷமேயொழிய
பரிபூர்ணாநந்தமாகத் தெரிவிக்குமதன்று. பரிபூர்ணாநந்த ஸந்தானமொன்றைத்
தெரிவிக்கிறேன். ஏற்கெனவே தெரிவித்திருப்பதை நினைப்பூட்டுகிறேன்.

அடியேனுடைய பாஷாசதுஷ்டய பத்திரிகைகளும் புஸ்தகங்களும் இடையறுது
வெளிவந்துகொண்டிருப்பதை சாலிநீந்யாயேந உலகமெல்லாமறிந்துளது. இதில் சில
வருஷங்களாக முக்கியமாய் நடைபெற்றுவருவதுநாலாயிரதிவ்யப்ரபந்த ஸம்ஸ்க்ருத ஹிந்தீ
ஆந்த்ர வ்யாக்யான லேகனப்ரகாசனங்கள். இவை 21—2—64 தேதிக்குப்பிறகு நடந்து
வருகிற க்ரமத்தை நோக்குங்கால் 'இந்தகாரியம் விரைவாக நடைபெறுவதற்காகவே
எம்பெருமான் நமக்கு அந்யபரதையைப்போக்க இவ்வசக்தியைத்தந்தருளினனோ? என்று
கூட நினைக்கவேண்டியதாகிறது. ஸாதாரணமான நினைவன்று, உறுதியாகவே நினைக்கி
றேன். எம்பெருமான் உண்டாக்கின அசக்தியானது எழுதுகிற விஷயத்திலும்
வியாபித்திருக்குமானால் மிகமிக வருந்தவேண்டியதாகவேயிருக்கும். அதில் மட்டும்
முன்னிலும் அதிகமான சக்தியை எம்பெருமான் அருள்செய்திருப்பதனால் அவனுடைய
திருவருளுக்கு மிகவும் உகக்கவேண்டியதாகவே யிருக்கின்றது. திவ்யப்ரபந்தஸம்ஸ்க்ருத
வியாக்யான லேகனத்தில் திருவாய்மொழி வியாக்கியான லேகனம் நடைபெற்றுவருகிறது.
தமிழில் அடியேனெழுதியுள்ள திவ்யார்த்த தீபிகையிற்காட்டிலும் சிறிது விரிவாகவே
யெழுதியாகிறது அடியேன் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதிவருவதும், அதை அடியே
னுடைய ஜ்யேஷ்ட ஜாமாதா ஸ்ரீ உ.வே. நியாயவேதாந்த வித்வான் அக்காரக்கனி
ஸம்பத்குமாராசாரியர் உடனுக்குடனே அந்யூநாநதிரிக்தமாக அதிஸரள ஹிந்தியில்
மொழிபெயர்த்துவருவதும், இவை அன்றுடம் அச்சாகிவருவதும் விலக்ஷணபகவத்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸங்கல்பத்தினுல் ஆச்சரியமாக நடந்துவருகின்றது. இன்று இதில் மூன்றும்பத்து முடிவுபெற்று நான்காம்பத்து ஆரம்பமாயிற்று.

திருவெவ்வுளூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. உவே. பழவேரி கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அடியேனுக்குப் பலவாண்டுகளாகப் பரமஸௌஹ்ருந்மணி. ஆழ்வார் கடாக்ஷத்திற்கு இந்த ஸ்வாமி தனிப்பட்ட லக்ஷ்ய பூதரென்று அடியேனுக்கு இவரிடத்தில் விசேஷப்ரீதியுண்டு. சிலவாரங்களுக்கு முன் இந்த ஸ்வாமி ஸ்ரீ வீரராகவனுடைய திவ்ய ப்ரஸாத ஸநாதராய் அடியேனைக் கடாக்ஷிக்க இவ்விடமெழுந்தருளியிருந்தார். அப்போது அடியேன் திருவாய்மொழி மூன்றும் பத்தில் (9.)* சொன்னுல் விரோதப்பதிகத்திற்கு விரிவான அவதாரிகையையெழுதிமுடிக்குந் தருணம். அந்த அவதாரிகையைஅந்த ஸ்வாமி திருச்செவி சாத்தும்படி வாசித்துக்காட்ட விருப்பமுண்டாகி, அசக்தியையும் நோக்காது மிகுந்த உத்ஸாஹத்துடன் அரைமணிகாலம் வாசித்துக்காட்டினேன். பரமரஸிகாக்ரேஸரரும் அருளிச்செயல் ப்ராவண்யைக நிருபணீயருமான அந்த ஸ்வாமி திருச்செவிசாத்தி ஸாதித்த வார்த்தைகள் :- "ஸம்ஸ்க்ருதத்திலுள்ள இதனை அடியேன் நன்ருகப் புரிந்துகொள்ளும்படியான பாண்டித்யமுடையவனல்லேன் ; ஆகிலும் அதிஸரளமாக அமைந்திருக்கிற சைலியினுல் அடியேனுக்கும் நன்ருகப்புரிந்துவிட்டதென்று சொல்லத்தட்டில்லை. இது வடநாட்டுவித்வான்களின் ஸௌகரியத்திற்காக எழுதப்படுகிறதெனினும், தென்னுட்டு வித்வான்களும் இதைக்கொண்டு விசேஷலாபமடைய முடியுமென்று அடியேன் கருதுகிறேன். தமிழ் நாட்டில் பிறந்து விட்டாலுங்கூட, ஈடுமுதலான மஹாக்ரந்தங்களில் எளிதில் அவகாஹிக்க முடிகிறதில்லையே வித்வான்களுக்கும். அன்னவர்களுக்கு இந்த ஸம்ஸ்க்ருத வியாக்கியானம் மிகமிகப்பயன்படுமென்று தோன்றுவதால் இது வடநாட்டினர்க்கேயென்று ஒதுக்கப்படவேண்டாமென்று அடியேன் கருதுகிறேன். தவிர ஒரு முக்கியமான ப்ரார்த்தனை ; இந்த உபகாரம் உலகுக்கு மிகவும் அபூர்வமானது. இதுவரை இரண்டாயிரம் பாசுரங்களுக்கே இந்த ஸம்ஸ்க்ருதடீகை வெளிவந்திருப்பதாக ஸாதிக்கிறபடியால் இன்னும் பாதிபாகம் சேஷித்திருக்கிறதே ; பக்ஷிகாநிரஸநமும் மதுபானமும் கலசி நடந்துவருவதால் இதில் தாமதமேற்படுவதாக நினைக்கிறேன். மதுபானமொன்றையே விரதமாகக் கைக்கொண்டால் இது விரைவில் தலைக்கட்டுமென்று தோன்றி மிகவும் பிரார்த்திக்கிறேன். திருவுள்ளம் பற்றியருளவேணும்." இத்யாதிகளை ப்ரேம பரவசராயுரைத்தார். அவருடைய அபிஸந்தியை யறிந்துகொண்டேன். இந்த மஹத்தான காரியம் விரைவில் முடிவுபெறவேணுமென்று பல ஆப்தர்கள் ஆசம்ஸிப்பதால் எம்பெருமானுடையவும் பரமாசாரியர்களுடையவும் திருவருள் இதற்கு அநுகூலமாகவேயிருக்குமென்று நம்பி நிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மி.

ப்ரஸங்காத் ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். அடியேன் திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை எழுதஆரம்பித்தபோது முதலில் ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி. வானமாமலை, சின்னகலியன்ஸ்வாமி ஸன்னிதிக்கு ஒரு பகுதியை யனுப்பியிருந்தேன். அதை ஸ்வாமி கடாக்ஷித்தருளி சிறிது சீற்றத்தோடு ஸ்ரீமுகம் ஸாதிக்க நேர்ந்தது ; பூர்வாசாரியர்கள் பரம கருணையோடு வியாக்கியானங்கள் ஸாதித்தாலும் பலபல அர்த்தங்களை கோப்யமாகவே வைத்திருக்கிறார்கள் ; அதையெல்லாம் நீர் வெட்டவெளிச்சமாக்குவதில் அத்ருப்தியே உண்டாகிறது என்று ஸ்ரீமுகம் ஸாதித்தருளியிருந்தார். பிறகு ஆறுமாதம் கழித்து ஸ்வாமிதாமே பரமகிருபையுடன் "இக்காலத்துக்கு ஏற்றபடி உம்முடைய திவ்யார்த்த தீபிகை மஹோபகாரக மென்றே அபிப்ராயப்படுகிறேன்" என்று திருவுள்ளங்கனிந்து ஸ்ரீமுகம் ஸாதித்தருள ப்ராப்தமாயிற்று. இப்போதைய ஸம்ஸ்க்ருத வியாக்கியானத்தை அந்தஸ்வாமி கடாக்ஷித்தருள நேர்ந்திருந்தால்................மேலே தலைக்கட்டுவது தெரியாமல் நிற்கிறேன். ... ...

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

விசதவாக் சிகாமணிகளான

மணவாள மாமுனிகள்

வைபவம்

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் தொகுத்தது

ஸ்ரீராமாநுஜன் வெளியீடு

கிடைக்குமிடம்:

P. B. ANNANGARACHARYA
GRANTHAMALA OFFICE, L. KANCHEEPURAM

விலை 75 nP.

குரோதி௵ ஐப்பசித் திருமூலம்

8—11—1964

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளை விளக்கியும், அவற்றின் மாதுர்ய காம்பீர்யாதிகளை விவரித்தும், அவற்றிலுள்ள அர்த்தவிசேஷங்களைத் திரட்டியும் அடியேன் எழுதி வெளியிட்டுள்ள நூல்களின்

அகராதியட்டவணை

1 ஸ்ரீசைலேசதயாபாத்ரவுரை
2 ஸ்ரீசைலேச மந்த்ரப்ரபாவம்
3 ஸ்ரீசைலேசாஷ்டக வியாக்கியானம்
4 வரவரமுநிதண்டகம் (உரையுடன்)
5 ஸ்ரீவரவரமுநி ஸ்தோத்ரங்கள் 12 உரையுடன்
6 ஸ்ரீவசநபூஷண தாத்பர்யஸாரம்
7 ஸ்ரீவைஷ்ணவஸௌபாக்யம்
8 அழகுதிகழ்ந்திடுமைப் பசியில் திருமூலம்
9 ஆசார்யஹ்ருதயப் பதவுரை
10 ஆசார்யஹ்ருதயப் பெருமையநுபவம்
11 ஆசார்யஹ்ருதய பாட பரிஷ்காரம்
12 ஆசார்யஹ்ருதயஸாரம்
13 அச்சான்பிள்ளையஷ்டாத்யாயி
14 ஆர்த்திப்பிரபந்தவுரை
15 உத்தரதிநசர்யையுரை
16 உபதேசரத்தினமாலையுரை
17 ஐப்பசித்திருமூல மலர்
18 ஐப்பசித்திருமூல நன்னாட்சிறப்பு
19 ஒரு மிதுனமே உத்தேச்யம்
20 சிங்கப்பெருமாள் திருவாக்குவெற்றி 6 மலர்கள்
21 ஜகதப்யுதயைகமூலம்
22 ஜகதாசார்ய ஸூக்தி ஸுதாநிதி
23 தத்வத்ரயஸாரம்
24 திருமந்த்ரார்த்தஸாரம்
25 திருவாய்மொழி நூற்றந்தாதி உரை
26 தென்னாசார்யஸம்பிரதாயம்
27 தேவராஜமங்களம் உரை
28 நான்கு தூதுகளின் மருமம்
29 பரந்தரஹஸ்யம் பிறந்தரஹஸ்யம்
30 புநர்வஸூபரீக்ஷணம்
31 "பூமிஷ்டாம்தே நமஉக்திம்"
32 பூர்வதிநசர்யை யுரை
33 மணவாளமாமுனிகள் வைபவம்
34 மாமுனிவனருள்விளக்கு
35 மாமுனிவன் மேற்கோள்விளக்கு
36 மாமுனிவன் வாத்ஸல்யவிவரணம்
37 முமுக்ஷுப்படி ஸாரார்த்ததீபிகை
38 யதிராஜவிம்சதி வியாக்கியானம்
39 யுஷ்மத்பாதாரவிந்தயுகளம்
40 யுஷ்மத்ஸூக்திஸௌரபம்
41 வரதன்ஸன்னிதி வரலாறு
42 வரவரமுநிசதக வியாக்கியானம்
43 விசதவாக்சிகாமணி வாக்வைசத்யம்
44 ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரன்
45 ஸத்ஸம்ப்ரதாயார்த்தஸாரநிதி
46 ஸதாசார்ய ஸூக்திரக்ஷா
47 ஸமஸ்யமாநோக்திஸௌஷ்டவ விமர்சம்
48 ஸர்வஜ்ஞலோககுரு ஸூக்தி ஸர்வஸ்வம்
49 ஸாதுஸாத்விகஸம்வாதம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

மணவாள மாமுனிகள் வைபவம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய தாஸன் தொகுத்தது.

"மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை—உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்".

ப்ரவேசம்.

உபய விபூதி நாதனான எம்பெருமானுடைய லீலா விபூதியாகிய இவ்வுலகம் ஞானிகளால் இருள் தருமா ஞாலமெனப்பட்டது. இருளைப் போக்குதற்குரிய அக்நி ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜஸ் பதார்த்தங்கள் பல பல இருந்தும் அவற்றால் போக்க வொண்ணாத அஜ்ஞாநாந்தகாரமே இங்கு இருள் எனப்பட்டது. அத்தகைய இருளைப் போக்குவதற்கு *புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச, ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:* என்றபடி எம்பெருமானாராகிற விலக்ஷணஸூர்யன் இவ்வுலகில் திருவவதரித்து "கடலளவாய திசையெட்டினுள்ளுங் கலியிருளே, மிடைதரு காலத்திராமாநுசன்—மிக்க நான்மறையின் சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரையுடையவன் நாரணனென்று அறிவாரில்லை யுற்றுணர்ந்தே" என்ற அமுதனாருளிச் செயலின்படியே மஹோபகாரம் செய்தருளும்படியாயிற்று. "தற்கச்சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ் சடையோன், சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும், நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனர் நீணிலத்தே, பொற்கற்பகம் எம்மிராமானுசமுனி போந்த பின்னே" என்கிறபடியே ஸம்ஸ்க்ருத வேத பாஹ்யகுத்ருஷ்டிகளை யெல்லாம் தம் ஸூக்தி சரங்களாலே நிரஸித்தருளி, "வான் திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்னும்படியாக ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் ப்ரவர்த்திப்பித்தருளி, திவ்யதேசங்களையும் உத்தரிப்பித்து ஒருவாறு அவதார க்ருத்யத்தைத் தலைக்கட்டிக்கொண்டு சுடரொளிச் சோதிக்கு எழுந்தருளின பின், சிலகாலம் கடந்த பிறகு, அவ்வவதாரத்தில் சிதைந்தொழிந்த ஸம்ஸ்க்ருத வேத பாஹ்ய குத்ருஷ்டிகள் தாமே மீண்டும் த்ராவிட வேத பாஹ்ய குத்ருஷ்டிகளாக ஜனித்து இவ்வுலகை நலிய, அந்த எம்பெருமானார் தாமே மீண்டும் வைகுந்தநாதனுடைய திருவாணையினால் இந்நிலவுலகில் திருவவதரித்து மணவாள மாமுனிகளென்கிற திருநாமத்துடனே விளங்கி, முன்னவதாரத்திற் செய்தருளின மஹோபகாரங்களிற்காட்டிலும் பன்மடங்கு அதிசயித்த சேமங்களைச் செய்தருளி இவ்விருள் தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாகத் திருத்திப் பணிகொண்டார். அவ்வாசார்ய சிகாமணியின் எண்ணில் பல்குணங்களைக் கூறுதற்கு அவர் தம்முடைய நிஜரூபமான ஆதிசேஷனும் அசக்தன் என்கிற விது அதிசயோக்தியன்று.

'பூர்வாசார்யர்' என்று இற்றைக்கும் நாம் வழங்கி வருமாறு பல பல மஹாசார்யர்களின் திருவவதாரத்தினால் புனிதமாய இவ்வுலகில், அவ்வாசாரிய பரம்பரை மணவாள மாமுனிகளோடு முடிவு பெற்றிருக்கின்றது. மாமுனிகளுக்குப் பிறகும் பல பல மஹான்கள் திருவவதரித்தாலும் 'பூர்வாசார்யர்கள்' என்கிற வ்யபதேசம் மாமுனிகளளவிலே விச்ராந்தமாயிருக்குமத்தனை. *மதுரேண ஸமாபயேத்* என்பது ந்யாயமாதலால் மாதுர்யமே வடிவெடுத்த மாமுனிகளோடு பூர்வாசார்ய பரம்பரையை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எம்பெருமான் ஸமாபநம் செய்தது மிகப் பொருந்தும். மதுரம் என்கிற வடசொல்லானது, 'மகாரத்தை முன்னேயுடையது' என்னும் பொருளையுமுடைத்தாதலால் மகாராதியான திருநாமமணிந்த மணவாள மாமுனிகளோடே பூர்வாசார்ய பரம்பரையை ஸமாபநம் செய்தருளின பகவான் ஸுஸமர்த்தனே.

எம்பெருமான் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகச் செய்தருளின விபவாவதாரங்களுள் இராமபிரானைத் திருவவதரித்த காலத்தில் பல பேர்களிடத்திலே தான் பணிவுகாட்டிப் போந்தான். விச்வாமித்ர முனிவன், ஸுக்ரீவ மஹாராஜர், ஸமுத்ர ராஜன் என்றிப்படிப் பல வ்யக்திகள் பக்கலிலே வணங்கி நின்றான். முதலில் விச்வாமித்ரருடைய சரித்திரங்களை உணராமல் 'இவர் ஒரு மஹர்ஷி' என்கிற ப்ரதிபத்தி மாத்ரமே கொண்டு *இமௌ ஸ்ம முநிசார்த்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம்* என்று அவர்க்குச் சேவகனாய் நின்றான். பிறகு அஹல்யா சாபவிமோசனம் செய்தபின் சதாநந்தர் வாயிலாக அம்முனிவருடைய சரிதைகளை விரிவாகக் கேட்டபின் இங்ஙனே ராஜஸரும் தாமஸருமான இவரையோ நாம் ஆசார்யனாகக் கொள்ளப்பெற்றது! என்று திருவுள்ளக் குறையுற்றிருந்தான் போலும். பிறகு ஒருகால் *ஸுக்ரீவம் சரணம் கத:* என்னும்படியாக ஒரு குரக்கினத்தரசன் காலிலே விழும்படியாயிற்று. அவன் திறத்து ப்ரீதியும் நிலைநின்றிருந்ததில்லை; இளையோனை யனுப்பி *மா வாலிபதமந்வகா:* இத்யாதிகளாலே நிக்ரஹப்ரகாசனம் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு *ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்து மர்ஹதி* என்ற விபீஷண வசனத்தின்படியே கடலரசன்பாடே சரணம் புகுந்து கிடந்தான். அங்கும் அப்ரீதியோடே தலைக்கட்டிற்று; *கோபமாஹாரயத் தீவ்ரம்—ஸாகரம் சோஷயிஷ்யாமி* இத்யாதிகள் காண்க.

பிறகு க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபநி பக்கலிலே சரணம் புகுந்து வித்யா க்ரஹணம் பண்ணினான்; அங்கு குரு தக்ஷிணை ஸமர்ப்பிக்க விரும்பி 'என்ன அபேக்ஷிதம்?' என்று அவரைக் கேட்டபோது *ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும் உனக்குமுன் தந்தவந்தணனொருவன்; காதலென்மகன் புகலிடங்காணேன் கண்டு நீ தருவாய் எனக்கென்று கோதில் வாய்மையினான் உனை வேண்டிய குறை முடித்து அவன் சிறுவனைக் கொடுத்தாய்* என்னும்படியாக அந்த ஸாந்தீபநி என்றைக்கோ மறிகடல்வாய் மாண்டுபோன தன்புதல்வனைக் கொணர்ந்து கொடுக்குமாறு வேண்டினார். இங்ஙனம் லௌகிகமான பலனை விரும்புகின்ற இவரை ஆசாரியனாகக் கொள்ளப்பெற்றோமே! யென்று அவரிடத்திலும் எம்பிரானது நெஞ்சம் அப்ரீதிகொண்டிருந்தது போலும்.

ஆக; விபவாவதாரங்களில் தான் தலைமடுத்த விடமெல்லாம் தடுமாறிப் போகவே, பெருங்குறைவாளனான பகவான் அர்ச்சாவதாரத்திலாவது குறை தீர ஒரு ஸதாசார்ய ஸமாச்ரயணம் பெற்று வாழ்வோமென விரும்பி, *மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிற லயோத்தி யெம்மரசாயும் *கோவலனாய் வெண்ணெயுண்டவாயனுயுமுள்ள அழகிய மணவாளனான திருக்கோலத்தில், ஆசார்யத்வ பூர்த்தியுள்ள மணவாள மாமுனிகள் பக்கலிலே சிஷ்யவ்ருத்தியை வஹித்து க்ருதார்த்தனானான். இத்தகைய ஒப்புயர்வற்ற பெருமை வாய்ந்த மாமுனிகளின் வைபவம் ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்கெல்லாம் ஜீவாதுவாகையாலே ஸாரஸம்க்ஷேபமாக இங்கு விஜ்ஞாபிக்கப்படுகிறது. ப்ரவேசம் முற்றிற்று.

இனி திவ்யசரித்திரத் தொடக்கம்.

ஸ்வாமியின் திருவவதாரம்.

எம்பெருமானாருடைய திருவடிகளில் நூற்றுக்கணக்கான முதலிகள் ஆச்ரயித்திருந்தாலும் நம்முடைய ஓராண்வழியான குருபரம்பரையிலே எம்பெருமானார்க்கு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அடுத்தபடியாக எம்பார் ஆசார்ய பதம் வஹித்தார். அவருடைய ஸிஷ்யர் (கூரத்தாழ்வான் திருக்குமாரரான) ஸ்ரீபராசரபட்டர்; அவருடைய ஸிஷ்யர் நஞ்சீயர்; அவருடைய ஸிஷ்யர் நம்பிள்ளை; அவருடைய ஸிஷ்யர் வடக்குத் திருவீதிப்பிள்ளை; அவருடைய ஸிஷ்யர் பிள்ளைலோகாசாரியர்; அவருடைய ஸிஷ்யர் திருவாய்மொழிப் பிள்ளை; அவருடைய ஸிஷ்யர் மணவாள மாமுனிகள்—என்றிப்படி நம்முடைய குரு பரம்பரையின் அடைவு உள்ளது.

*தொல்லை வாதியர்களின் வாழ்வு அறவும், மறையவர் தம் தாழ்வு அறவும், தாரணி தவம் பெறவும், தத்துவ நூல்கள் கூறவும் இந்நில வுலகத்திலே திருவவதரிக்கத் திருவுள்ளம்பற்றிய திருவனந்தாழ்வான் நல்லார் நவில் குருகூரென்கிற ஆழ்வார்திருநகரியில் திருநாவீறுடையபிரான் தாஸரண்ணர் என்கிற மஹாசார்யனை *பிதரம் ரோசயாமாஸ* என்கிற கணக்கிலே தந்தையாகவுகந்து அவருடைய திருக்குமாரராய் (கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான) ஸாதாரண வருடத்தில் ஐப்பசி மாதத்தில் திருமூலத் திருநக்ஷத்திரத்தில் அந்தத் திருநகரியில் திருவவதரித்தருளினான். அந்த நன்னாளின் சிறப்பை

" செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர் செய்தருள்நற்கலை தேசுபொலிந்திடுநாள்
மந்தமதிப்புவிமானிடர் தங்களை வானிலுயர்த்திடுநாள்
மாசறுஞானியர்சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்தமலர்ப்பொழில் சூழ்குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர்மேனியரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர்மணவாள முனிப்பரனவதாரம் செயுநாள்
அழகுதிகழ்ந்திடுமைப்பசியில் திருமூலமதெனுநாளே "

என்று பாசுரமாகவும், *யந்மூலமாச்வயுஜமாஸி* *யதவதரண மூலம்* இத்யாதி ச்லோகங்களாகவும் பின்புள்ள முதலிகள் அநுஸந்தித்தார்கள். இங்ஙனே உலகுக்கெல்லாம் ஓருயிராய்த் திருவவதரித்தருளின திவ்ய மூர்த்திக்கு ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமத்தைச் சாத்த விரும்பிய பெரியார் 'அழகிய மணவாளன்' என்று திருப்பெயரிட்டனர். அழகிய மணவாள நாயனார் என்று சிறப்புத் திருநாமமாக வழங்கி வந்தது. அந்நப்ராசந சௌளோபநயநாதிகளான வர்ணோசித ஸம்ஸ்காரங்களும் அடைவே நடைபெற்றன.

ஸ்வாமியின் வித்யாப்யாஸம்.

துக்தோதந்வத்தவள மதுரம் சுத்த ஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதி தராம் யம் பணீந்த்ராவதாரம் (வரவரமுநிசதகே) என்கிறபடியே ஸாக்ஷாத் திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமாகிய ஸ்வாமி *ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி* என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே ஸ்வதஃ ஞானக்கடலாயிருக்கச்செய்தேயும், ஸ்ரீராமக்ருஷ்ணாதிகளும் வஸிஷ்ட விச்வாமித்ர ஸாந்தீபநிப்ரப்ருதிகள் பக்கலிலே வித்யைகளை அதிகரித்தவாறாக லௌகிகப்ரக்ரியைக்கு இணங்க வேதங்களையும் வேதாங்கங்களையும் மற்றுமுள்ள ஸகலசாஸ்த்ரங்களையும் திருத்தகப்பனார் முதலானார் திருவடி வாரத்திலே பணிந்திருந்து அதிகரித்து "சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவுந் தெரிந்தவன்'' என்னும்படியாகவே விளங்கினார். உசிதகாலத்தில் க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்தருளி "மறந்திகழும் மனமொழித்து வஞ்சமாற்றி வன்புலன்களடக்கி இடர்ப்பாரத் துன்பந்துறந்து, இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்'' என்ற ஸ்ரீகுலசேகரப் பெருமாளருளிச் செய்தபடியே பஞ்சகால பராயண ஸ்ரீவைஷ்ணவ சிகாமணியாய் வாழ்ந்து போருகிற காலத்திலே;

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்வாமி ஆசார்ய ஆச்ரயணம் செய்தது.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளிலே நெடுநாள் பணிந்திருந்து ஸகலசாஸ்த்ர
ரஹஸ்ய ஸாரார்த்தங்களனைத்தையும் அதிகரித்தவராயும், ஆழ்வார்களுடைய ஈரச்
சொற்களிலே அப்ரதிமமான அபிநிவேசம் காரணமாகத் திருவாய் மொழிப்பிள்ளை
யென்று நிரூபக நாமத்தைப் பெற்றவராயும் * நம: ஸ்ரீ சைலநாதாய குந்தீநகர
ஜந்மநே, ப்ரஸாத லப்த பரமப்ராப்ய கைங்கர்யசாலிநே* என்று நிச்சலும் மூவுலகும்
தொழுதேத்த நிற்பவராயுமிரா நின்ற திருமலையாழ்வார் என்கிற மஹாசார்யர், இனி
இந்த ஸ்ரீவைஷ்ணவ தர்சநத்தை நிர்வஹிக்க வல்லவர் யாவர்? என்று சிந்தித்திருப்
பாராய் அதிகாரியைத் தேடியிருக்கையில், யாத்ருச்சிகமாக ஸ்வாமி அவர் திருவடி
களிலே சென்று தெண்டன் ஸமர்ப்பித்து, 'பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி
யடிமை கொள்ளவேணும்' என்று ப்ரார்த்தித்து நிற்க, அவரும் இவருடைய அற்புத
மான ஜ்ஞான பக்தி விரக்தி ஸம்பத் ஸம்ருத்தியைக் கண்டறிந்து அலப்ய லாபம்
பெற்றதாக நினைத்து ஆனந்தக் கடலில் அமிழ்ந்து வாரியணைத்து, இவரைத் தமக்கு
மிகவும் அணுக்கராக அங்கீகரித்தருளி ஸதாசார்ய பரம்பரா ப்ராப்தமான ஸகல
விசேஷார்த்த நிதியையும் பரம க்ருபையுடனே இவர்க்கு அநுக்ரஹித்தருளி, ஒரு
நாள் இங்ஙனே நியமிக்கலானார்:

ஸ்வாமிக்குக் கிடைத்த ஆசார்ய நியமநம்.

வாரீர்! அழகிய மணவாளப் பெருமாளே! நீர் ஸர்வதோமுகமான ஜ்ஞானம்
பெற்றிரா நின்றீர்; எம்பெருமானாரை அவதார புருஷரென்று சிக்கன அறிந்
திருந்தும் பெரிய நம்பி, திருமாலை யாண்டான் முதலானார் அவர்க்கு ஆசார்யராக
அமைய நேர்ந்தாப்போல ஏதோ விதிவசமாக நானும் உமக்கு ஆசார்யனாக நின்
றேன். என்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தனம் உமக்கு அவர்ஜநீயம் என்பதை நான்
விரித்துரைக்கவேண்டாவே; ஆழ்வான் பட்டர் நம்பிள்ளை முதலான நம் பூருவர்கள்
ஸகல சாஸ்த்ர ப்ரவீணர்களா யிருக்கச் செய்தேயும் ஆழ்வார்களின் ஈரச் சொற்
களின் அநுபவத்திலேயே பெரும்பாலும் ஊன்றியிருந்து அவற்றைப் பிரவசனஞ்
செய்வதையே முக்கிய கைங்கர்யமாகக் கொண்டு வாழ்ந்தார்களென்பது உமக்குத்
தெரியாமையில்லை. "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும்
அதிகரித்து, பரபக்ஷப்ரதி க்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளும் அதிகரித்து,
போது போக்கும் அருளிச்செயலிலே யாம் நம் பிள்ளையைப்போலே"[1] என்று
பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்திருப்பது அறிவீரே. நீரும் அப்படியே நம்
பூருவாசாரியர்களை அடியொற்றி அருளிச்செயல்களின் ப்ரவசனங்களிலே அதி
மாத்ரம் நிஷ்ணாதராயிருக்கக் கடவீர். இந்த என்னுடைய கோரிக்கையை நீர்
ஹ்ருதயபூர்வமாக அங்கீகரித்தீரென்பதை நானறிந்து கவலை தீர்ந்தேனும்படி செய்ய
வேணும்" என்று நியமிக்க, உடனே அழகிய மணவாள நாயனார் (மாமுனிகள்)
"ராகப்ராப்தமானது தானே வைதமானால் கடுகப் பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்கு
மிறே" என்கிற பிள்ளை லோகாசார்யருடைய திவ்யஸூக்தியை ஸ்மரித்துப் பரமா
நந்தங்கொண்டு பால்குடிக்கக் கால் பிடிக்குமாபோலே இப்படியும் ஒரு நிர்ப்பந்தம்
வேணுமோ? ஸ்வாமி திருவடிகள் ஸாக்ஷியாக இந்தக் கைங்கரியத்தை அடியேன்
சிரமேற்கொள்ளக் காத்திருக்கிறேன்; இதற்கு ஸர்வாத்மநா யோக்யதையற்ற
அடியேனை யோக்யனாம்படி திருத்திப் பணிகொண்டருள வேணும்" என்று விண்
ணப்பித்துத் திருவடிகளிலே வேரற்ற மரம்போல் விழுந்து கிடக்க; திருமலை யாழ்
வாரும் வாரிப் பிடித்தெடுத்துத் தழுவி "ஆழுதல்வனிவன்" என்று குளிரக் கடா
க்ஷித்தருளி அன்று முதலாகத் தம் திருவடி வாரத்திலே நிழலும் அடிதாறும்[2]

[1] இந்த வாக்கியம் பெரிய திருமொழியில் 5-8-7. ஒதுவாய்மையுமென்கிற பாசுரத்தின்
வியாக்கியானத்திலுள்ளது.

[2] அடிதாறு - பாதரேகை.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

போலே இவ்வரை வைத்துக் கொண்டிருந்த தம்முடைய சேமவைப்பான ஸகலார்த்த விசேஷங்களையும் க்ரமேண அநுக்ரஹித்தருளினர். ஸ்வாமியும் க்ருதார்த்தராய்,

"அன்னையுமத்தனுமாசாரியனுமனைத் துறவும்
மன்னியபேறுமுபாயமுந் தெய்வமும் மற்றுமெலாம்
என்னையளித்ததிருவாய்மொழிப்பிள்ளை யென்றுநெஞ்சே!
உன்னியுவந்து திகழ்ந்து சதிர்த்தினியுய்ந்திடவே"

என்று அநுஸந்தித்து அவரையன்றி வேறொரு தெய்வ மறியாதே அவருடைய திருவடிகளில் அத்தாணிச் சேவகமும் அவருடைய ஆஜ்ஞாபரிபாலனமுமே போது போக்காக இருந்துவந்தார்.

ஸ்வாமி யதீந்த்ரப்ரவண ரென்கிற திருநாமம் பெறுதல்.

திருவாய் மொழிப்பிள்ளை ஒரு நாள் எம்பெருமானாருடைய குணாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில் "மாறனடிபணிந்துய்ந்தவிராமானுசன்" என்றும், "உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர் குருவும் வெறிதரு பூமகள் நாதனும், மாறன் விளங்கியசீர் நெறிதருஞ்செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர் அறிதர நின்ற விராமானுசன்" என்றும் "பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமானுச முனிவேழம்" என்றுமுள்ள பாசுரங்களைச் சிந்தைசெய்து, ஆழ்வார் திருவடிகளிலும் அருளிச்செயல் திறத்திலும் எம்பெருமானார்க்கு ப்ரஸித்தமாயிருந்த அதிமாத்ர ப்ராவண்யத்திற்குத் தகுதியாக இத்திருநகரியிலே அவர்க்கொரு தனிக்கோயில் அமைக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி சிஷ்யர்களுக்கு நியமித்து உடையவர் ஸந்நிதியையும் அதைச் சுற்றி ஸ்ரீராமாநுஜ சதுர்வேதிமங்கலம் என்கிற திருவீதியையும் ப்ரதிஷ்டிப்பித்து, இராமானுசனைத் தொழும் பெரியோரையும் அங்கே நித்யவாஸம் செய்ய நியமித்தருளி அந்த நற்செல்வமனைத்தையும் ஸ்வாமிக்கு அதீனமாக்கியருளினர்; ஸ்வாமியும் அந்த உடையவர் திருவடிகளிலே மிகவும் பரிவராயிருந்து அங்குத்தைக்கு உரிய கைங்கர்யங்களை யெல்லாம் குறையற நடத்திக்கொண்டு போருமது கண்டு திருவுள்ள முவந்த திருவாய் மொழிப்பிள்ளை "யதீந்த்ரப்ரவணர்" என்று நாயனாரை அழைக்கத் தொடங்கினர். இந்தத் திருநாமமே அப்போது எங்கும் ப்ரஸித்தமாயிற்று.

ஸ்வாமி யதிராஜவிம்சதி அருளிச்செய்தல்.

அந்த உடையவர் திருவடிகளிலே ஒரு ஸ்தோத்ரம் விஜ்ஞாபிக்கவேணுமென்று ஆசார்ய நியமனமாக, யதிராஜவிம்சதி யென்னும் ஸ்துதியை யதீந்த்ர ப்ரவணர் விஜ்ஞாபித்து, அதில் *ஸ்ரீமந் யதீந்த்ர! தவ திவ்யபதாப்ஜ ஸேவாம்* என்கிற ச்லோகத்தினுல் ஸ்வாசார்ய விஷயத்தில் உபகார ஸ்ம்ருதியையும் ப்ரகாசிப்பித்தருளினர். அப்போது அருகேயிருந்த முதலிகள்,

"வல்லார்கள் வாழ்த்தும் குருகேசர் தம்மை மனத்துவைத்துச்
சொல்லாரவாழ்த்தும் மணவாளநாயனர் தொண்டர்குழாம்
எல்லாந்தழைக்க எதிராசவிம்சதியின் றளித்தோன்
புல்லாரவிந்தத் திருத்தாளிரண்டையும் போற்றுநெஞ்சே"

என்ற பாசுரத்தை விஜ்ஞாபித்தனர்.

இந்த யதிராஜவிம்சதியின் மாதுர்யம் லாலித்யம் முதலிய குண விசேஷங்களைப் பற்றி அண்ணா வரவர முனிசதகத்தில் அருளிச்செய்துள்ள ச்லோகங்கள் இங்கே அநுஸந்தேயம். எம்பெருமானாருடைய அப்ராவதார பூதரான மாமுனிகள் தம்மைத் தாமே துதிப்பது போல இந்த ஸ்தோத்ரம் அருளிச் செய்யலாமோ? அதிலும் அளவுகடந்தவாறாகத் தம்முடைய நைச்சியத்தைப் பேசியிருக்கிறாரே, இக

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூடுமோ? என்று சிலர் சங்கிப்பர்கள். *வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே* என்கிறபடியே ஸ்ரீராமபிரான் ஸாக்ஷாத் நாராயணாவதாரமாயிருக்கச் செய்தேயும் *ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்* இத்யாதிப்படியே நாராயணனைத் தொழுதது, ஸ்ரீரங்கநாதனை அத்திருமூர்த்தியைத் திருவாராதனஞ் செய்து கொண்டிருந்தது முதலியன போல் இவையும் அவதாரங்களுக்குப் பொருந்தியவைகளே என்று பெரியோர் கூறுவர்.

ஸ்வாமிக்குத் திருக்குமாரர் திருவவதரித்தல்.

ஸ்வாமி இங்ஙனே ஆசார்ய பரதந்திரராய் வாழ்ந்தருளா நிற்க, க்ஷீரார்ணவத்தில் சந்திரன் போலே ஒரு திருக்குமாரர் திருவவதரித்தார். அவர்க்கு இராமானுசப் பிள்ளை என்று திருநாமமிடும்படி ஆசார்ய நியமனத்தை யடியொற்றி நியமித்தருளினர். அவருடைய திருக்குமாரரே ஜீயர்நயினரென்றும் ஆசார்ய பௌத்ரரென்றும் ப்ரஸித்தராய் மஹா பண்டிதோத்தமராய் விளங்கினர்.

திருவாய்மொழிப்பிள்ளை திருநாடலங்கரித்தல்.

அப்ரதிம சிஷ்ய ஸம்பத்தோடே வாழ்ந்தருளா நின்ற திருவாய் மொழிப் பிள்ளை திருமேனி தளர்ந்து திருநாட்டுக் கெழுந்தருளுகையிலே விருப்பமுடையராய்

" உத்தமனேயுலகாரியனே! மற்றெப்பாரையில்லா
வித்தகனே நல்லவேதியனே! வண்முடும்பைமன்னு!
சுத்தநன்ஞானியர் நற்றுணையே சுத்தசத்துவனே!
எத்தனைகாலமிருந்துழல்வே னிவ்வுடம்புகொண்டே".

என்று அநுஸந்தித்துக் கொண்டிருக்க, ஒருநாள் கனவிலே பிள்ளைலோகாசாரியர் ஸேவை ஸாதித்தருளி "நலமந்தமில்லதோர் நாடுபுகுவீர்" என்று பணிக்க, பிள்ளையுந் தேறி யெழுந்து நித்ய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு முதலிகளெல்லோரையும் வரவழைத்து "இன்று விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான் விதிவகையே" "வானேற வழிதந்த வாட்டாற்றான் பணிவகையே, நானேறப் பெறுகின்றேன் நரகத்தை நகுநெஞ்சே!" என்ற பாசுரங்களைப் பரக்க வுபந்யஸித்தருளி, "முதலிகாள்! இன்று எம்பெருமான் நம்மை ஆசாரியன் திருவடி வாரத்திற்கு அழைத்துக் கொள்வதாகத் திருவுள்ளம் பற்றியிரா நின்றான்; இனி நீங்களனைவரும் நம் அழகிய மணவாள நாயனாரை (மாமுனிகளை) ஸாமாந்யமாக ப்ரதிபத்தி பண்ணியிராமல் நம்மிராமானுசனுடைய அபராவதாரமே யிவர் என்று ப்ரதிபத்தி பண்ணி இவருடைய அபிமானத்திலே யொதுங்கி வாழ்வீராக" என்று நியமித்தருளி, நாயனாரையும் ஆசார்யபீடத்திலே எழுந்தருளச்செய்து "வாரீர் குலக்கொழுந்தே! *ஜநகாநாம் குலே கீர்த்திம் ஆஹரிஷ்யதி மே ஸுதா, ஸீதா பர்த்தாரமாஸாத்ய ராமம் தசரதாத்மஜம்* என்று ஜநக சக்ரவர்த்தி பாரித்தாப்போலே நானும் உம்மை அண்டை கொண்டு கனக்கப் பாரியாநின்றேன். நம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸந்தானம் உம்மாலே பரம விலக்ஷணமான பெருமையையும் புகழையும் பெறக்கடவது. *ச்ரேயாம்ஸி ஸர்வாணி அதிஜக்முஷஸ் தே* என்றாப்போலே ஒன்றிலுங் குறை யில்லாத வுமக்கு இனி நாம் ஆசாஸிக்கவேண்டுவதொன்றில்லை. என் உள்ளத்திலே கிடந்த குறையைப் பண்டே உமக்குப் பேசி நின்றேன்; அக்குறை தீர இன்றுகாறும் நீர் நடந்து வந்தது போலவே இனியும் நம் பூர்வாசார்ய திவ்ய க்ரந்த ப்ரவசநாநுபவங்களே போதுபோக்காக இருந்து வரக்கடவீர். ஆழ்வார்களும் ஆசார்யர்களும் ஒருமிடறாக மண்டியிருந்து தர்சந நிர்வாஹம் செய்தருளின விடம் திருவரங்கம் பெரிய கோவிலாதலால் நீரும் அவ்விடத்தேறச்சென்று முந்தின அவதாரத்திற் போலவே *அறுசமயச் செடியதனை யடியறுத்துச் செறுகலியைச் சிறிது மறத் தீர்த்துவிட்டுத் தென்னரங்கர்செல்வமுற்றுந் திருத்தி வைத்து மறையதனிற்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

செய்த தமிழ்மறை வளர்த்து இந்த
பொருளனைத்தும் வாய்மொழிந்து மாறனுரை போரக்கடவீர்" என்று
லீலாவிபூதியை நித்யவிபூதியாகவே ஆக்கிக் கொண்டு ஸந்நிதிக்கெழுந்தருளிப் பொலிந்து
நாயனாரை நோக்கி நியமித்தருளி, அநந்தரம் செய்தருளி முதலிகளெல்லாரை
நின்ற பிரானையும் ஆழ்வாரையும் மங்களாசாஸநம் திருமாளிகையேற வெழுந்தருளிப்
யும் நாயனார் திருக்கையிலே காட்டிக்கொடுத்துத் திருநாட்டுக் கெழுந்தருளி
பிள்ளை யுலகாசிரியர் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே திருவத்யயநாந்த
னார். நாயனார் தொடக்கமான முதலிகளெல்லாரும் அவர்க்குத்
மான சரம கைங்கர்யங்களைப் பெருக்க நடத்தினார்கள்.

ஸ்வாமிதிருவடிகளில் ஸ்ரீ வானமாமலை ஸ்வாமி ஆச்ரயித்தல்.

பிறகு ஸ்வாமி ஸ்வாசார்ய நியமநத்தை சிரஸாவஹித்துக்கொண்டு பூர்வா
சார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை யெல்லாம் கண்ட பாடஞ் செய்து வாசோவிதேய
மாக்கிக்கொண்டு ப்ரஸித்தப்ரபாவராய்த் திருநகரியில் எழுந்தருளியிருக்கு மதிசயம்
கேட்டுப் பலதிசைகளிலிருந்தும் பலமஹான்கள் வந்து ஸ்வாமி திருவடிகளிலே
ஆச்ரயிக்கப்புகுந்தார்கள். முந்துற முன்னம், வானமா மலையிலே மஹாஜ்ஞாநாதி
கரா யெழுந்தருளியிருந்த அழகிய வரதர் பரம விரக்தியினாலே ஆச்ரமஸ்வீகாரஞ்
செய்து ஸ்ரீராமாநுஜஜீயர் என்று திருநாமம் பெற்று ஸ்வாமிதிருவடிகட்கு நிழலு
மடிதாறும் போலே மிகவு மணுக்கராய் வந்து சேர்ந்து வாழ்ந்தார். இவர்க்குப்
பொன்னடிக்கால்ஜீயர் என்றும் திருநாமம் வழங்கிவந்தது.

ஸ்வாமி நம்பெருமாள்ஸந்நிதிக்கெழுந்தருள நியமனம் பெறுதல்.

ஸ்வாமி இவ்வனமே பற்பல சிஷ்யர்களோடே கூடி வாழ்ந்தருளா நிற்கையில்
ஒரு திருவாதிரைத் திருநாளில் கத்யத்ரயம் அநுஸந்தானம் நடைபெறு மளவில்
* யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ* என்கிற ஸ்ரீ ஸூக்தி ப்ரகர
ணத்திலே ஸ்வாசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையின் நியமநத்தை ஸ்மரித்தருளி
* ஆராமஞ் சூழ்ந்த அரங்கத்திலே நித்யவாஸஞ் செய்து கொண்டு பெரிய பெருமாளு
டைய மங்களா சாஸநமே போதுபோக்காக வாழ்வதிலே திருவுள்ளம் சென்று,
ஆழ்வார் திருமுன்பே விடைகொண்டு தொழுது 'நாயினேன், நம்பெருமாள் ஸந்நி
திக்கு விடை கொண்டு அங்கே வர்த்திக்க ஆசார்ய நியமனமாகையாலும், "வான்
திகழுஞ்சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்" என்
கிறபடியே தேவரீருடைய அருளிச் செயல்களுக்கு ப்ரதாந ப்ரமேய பூதரான பெரிய
பெருமாளுடைய திருவடி வாரத்திலே வாழ்வது அடியேனுக்கும் ருசித்திருக்கை
யாலும் அங்கே சென்று வர்த்திக்க நியமனம் தந்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க,
ஆழ்வாரும் 'செங்கயல்பாய் நீர்த் திருவரங்கத்தே சென்று முகில்வண்ணனடியை
யடைந்து அருள் சூடி யுய்யக்கடவீர்' என்று அநுக்ரஹித்து நியமனம் தந்தருளினார்.

ஸ்வாமி ஸ்ரீரங்கயாத்திரை புறப்படுதல்.

ஆழ்வாருடைய அருள் பொலிந்த நியமனம்பெற்ற நாயனார் 'தென்னரங்கர்
சீருளுக்கு இலக்காகப் பெற்றோம்' என்று திருவுள்ளம் பூரித்து முதலிகளும் தாமு
மாகப் புறப்பட்டருளி * மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூ
ருறைவான்றன் பொன்னடி காண்பதோராசையினால் அங்கே யெழுந்தருளி வட
பெருங் கோயிலுடையானையும் பெரியாழ்வாரையும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
யையும் ஸேவித்து, அங்குள்ளாருடைய வேண்டுகோளுக்கிரங்கிச் சிலநாள் அங்கே
யெழுந்தருளியிருந்து, அடிபணிந்த அன்பர்கட்கு நல்வார்த்தைகள் பலவுமருளிச்
செய்து அங்கு நின்றும் புறப்பட்டு * மாலிருஞ்சோலை மேயமைந்தனை வணங்கத்
திருவுள்ளமாய் அங்கேற எழுந்தருளி * சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ்
சீர்ச்சிலம்பாற்றிலே நீராடி அழகரை மங்களாசாஸனஞ் செய்து அங்கு ஆழ்வான்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எழுந்தருளியிருந்த விடத்திலேயிருந்து ஸ்ரீஸுந்தரபாஹு ஸ்தவத்தின் ஆழ்
பொருள்களை அடியவர்க்கு உபதேசித்தருளி, அங்கு நின்றும் புறப்பட்டு "வன்பெரு
வானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல
அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந் தொண்டர் வாழ அன்பொடு தென்
திசை நோக்கிப் பள்ளிகொள்ளு மணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவுகண்டு யானுமிசைந்துடனே யென்று கொலோ இருக்கும்
நாளே" என்று இது முதலான பல பாசுரங்களையும் *கதாஹம் காவேரீ தடபரிஸரே*
என்பது முதலான ச்லோகங்களையும் இனிமையாக அநுஸந்தித்துக்கொண்டே
யெழுந்தருளிப் பயணகதியிலே, *எண்டிசைக்கணங்களு மிறைஞ்சியாடு தீர்த்த நீர்
வண்டிரைத்த சோலை வேலிமன்னு சீரரங்கந்தன்னில் * கங்கையிற் புனிதமாய
காவிரியையும் "வண்டினமுரலுஞ்சோலை மயிலினமாலுஞ்சோலை கொண்டல்
மீதணவுஞ்சோலை குயிலினங் கூவுஞ்சோலை அண்டர் கோனமருஞ் சோலையையும்
அணுகி *தென் திருவரங்கம் கோயில் கொண்ட தெய்வ சிகாமணியின் திருவடிவாரம்
சேரப் பெற்றோமென்று திருவுள்ளமுவந்து நித்ய கர்மானுஷ்டானங்களை நிறை
வேற்றிக்கொண்டு,

" மாடமாளிகைசூழ் திருவீதியும் மன்னுசேர் திரிவிக்ரமன் வீதியும்
ஆடல்மாறனகளங்கன் வீதியும் ஆலிநாடனமர்ந்துறை வீதியும்
கூடல்வாழ் குலசேகரன் வீதியும் குலவுராசமகேந்திரன் வீதியும்
தேடுதன்மவன்மாவவன் வீதியும் தென்னரங்கர் திருவாவரணமே"

என்று சொல்லப்படுகிற திருவீதிகளை யெல்லாம் கண்ணாரக் கண்டு களித்துக்கொண்டு
உள்ளே யெழுந்தருளினார்.

அக்காலத்தில் அங்கு அண்ணர் என்கிற ஒரு மஹான் ப்ரஸித்தராக எழுந்
தருளி யிருந்தார்; ஸ்வாமி அவருடைய திருமாளிகையேற எழுந்தருளி நிற்க, அவரும்
இவருடைய வைபவங்களைப் பண்டே கேட்டிருந்தவராகையாலே இவரை நிதிகண்
டாற்போலே கண்டு பல்வகை யுபசாரங்களும் செய்து சிறிது வார்த்தை யாடின
வளவிலே இவருடைய ஸர்வஜ்ஞத்வத்தையுணர்ந்து வியந்து அவதார விசேஷ
மென்று ப்ரதிபத்தி பண்ணி இவர்க்குப் பெருமாள் ஸந்நிதியில் பல சிறப்புக்களும்
செய்விக்கக்கருதி, அப்போது ஸந்நிதிக்கு நிர்வாஹகராயிருந்த திருமாலைதந்தபெரு
மாள் பட்டர் என்கிற மஹநீயர்க்குச் செய்தியறிவிக்க, அவரும் நாயனார் திருவடி
களிலே வந்து ஸேவித்துச் சில நல்வார்த்தைகள் கேட்கப் பெற்றவளவிலே,
"ஸ்ரீமாந் ஸ்ரீபாஷ்யகாரோஸௌ பூதலே புநருத்தித:, இதி நிச்சித்ய ஸந்துஷ்ய
ப்ராவண்ய மதுலம் ததே". என்கிறபடியே நாயனாரை எம்பெருமானாருடைய புநரவ
தாரமாகவே அறுதியிட்டு, பரிஜந பரிபர்ஹபரிச்சத புரஸ்கார விசேஷங்களுடனே
ஸந்நிதியில் மங்களாசாஸநம் நடைபெறுமாறு ஸம்விதாநம் செய்துவைத்தார்.

கோயில் மங்களாசாஸனம்

பலபல பரிவாரங்களுடன் ஸந்நிதி மங்களாசாஸனத்திற்கு எழுந்தருளின
நாயனார் மூந்துறமுன்னம் எம்பெருமானார் ஸந்நிதியிலே விடைகொண்டு ஸேவித்து
உடையவர் திருக்கோலத்திலே மிகவும் ஈடுபட்டு,

இவ்வுலகந் தன்னி லெதிராசர் கொண்டருளும்
எவ்வுருவும் யான்சென் றிறைஞ்சினக்கால்—அவ்வுருவம்
எல்லா மினிதேனு மிவ்வரங்கத் திற்போல
நில்லாதென் னெஞ்சில் நிறைந்து.

என்கிற பாசுரத்தை அங்கு விண்ணப்பஞ்செய்து, பிறகு ஸபரிவாரரான பெரிய
பெருமாளை அடைவே மங்களாசாஸனஞ் செய்து திருமாலை, அமலனாதிபிரான்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முதலான திவ்யப்ரபந்தங்களையும் ஸ்ரீரங்க ராஜஸ்தவம் முதலான ஸ்தோத்ரங்களையும் அநுஸந்தித்துக்கொண்டு நம்பெருமாள் திருமுன்பே நிற்க, பெருமாளும் நாயனாரைக் குளிரக் கடாக்ஷித் தருளி 'நமக்காவாரை நாமே தேடிக்கொண்டோம்; நம்முடைய அவாப்த ஸமஸ்த காமத்வம் இன்றே குறையற்ற தாய்த்து' என்றருளிச் செய்து ஸகல வரிசைகளும் ப்ரஸாதித்தருள, நாயனாரும் பெற்று க்ருதார்த்தராய், "பெரியார்க் காட்பட்டக்கால் பெறுத பயன் பெறுமாறு" என்று அண்ணர் விஷயத்திலும் பட்டர் விஷயத்திலும் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் பண்ணிப் பேருவகையோடே திருமாளிகைக் கெழுந்தருளினார்.

பின்பு பிள்ளையுலகாசிரியர் திருமாளிகையை நோக்கி யெழுந்தருளி வாசலிலே தெண்டன் ஸமர்ப்பித்து "ரஹஸ்யம் விளைந்தமண்" என்று அவ்விடத்து மண் பற்றை மிகவும் ஆதரித்து, நாடோறும் அங்கேற வெழுந்தருளி ரஹஸ்யக்ரந்த ப்ரவசநாதிகள் செய்து கொண்டு, * ஸமயாநாநந்தமயாந் கமயாமாஸைஷ ரங்கிணம்ஸமயா* என்கிறபடியே ஆனந்த மயமாகப் பொழுது போக்கிவந்தார்.

ஸ்வாமி திவ்யதேச யாத்திரை யெழுந்தருளல்.

இங்ஙனே சில நாள் சென்றவாறே, சோழநாடு நடுநாடு தொண்டை நாடுகளிலுள்ள திருப்பதிகளெல்லாவற்றையும் ஸேவிக்கத் திருவுள்ளம்பற்றின நாயனார் பெரியபெருமாள் பாடே சென்று நியமனம் பெற்றுக்கொண்டு சிஷ்யவர்க்கங்களுடனே புறப்பட்டருளினார். வழியடைவிலே ஸகல திவ்ய தேசங்களையும் ஸேவித்துக்கொண்டு வருமளவிலே திருமலையில் திருவேங்கடமுடையானுக்குப் புரட்டாசித் திருநாள் அணித்தென்றறிந்து அங்கேற வெழுந்தருளித் திருமலையப்பனுடைய ஒப்புயர்வற்ற ஸத்காரங்களையும் லபித்து அங்கு நின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினார். [பெருமாள் கோயில், ஸ்ரீகாஞ்சீ.]

பேரருளாளன் மங்களாசாஸநம்

பிறகு பெருமாள் கோயிலிலுள்ள ஸகல திவ்ய தேசங்களையும் அடைவே ஸேவித்து, பெருந்தேவி மணவாளனை பேரருளாளனது வடிவழகிலே மிகவு மீடுபட்டு ஸ்ரீதேவராஜ மங்களம் என்கிற மங்களஸ்துதியை அடியவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அருளிச்செய்தார். அன்றியும் பெருமாள் கோயிலிலுள்ள ஸகல திவ்யதேசத் தெம்பெருமான்களையும் சேர அநுஸந்தித்து இரண்டு ச்லோகமருளிச் செய்ததாகவும் பெரியோர் வழங்குவர்.

ஸ்வாமீ ஸ்ரீபாஷ்ய மதிகரித்தல்

ஸ்வாமி தாம் அவதார விசேஷ ப்ரயுக்தமான ஸர்வஜ்ஞத்வ பூர்த்தியை யுடையவராயிருக்கச் செய்தேயும் இந்நிலவுலகின் கட்டளைக் கிணங்கவும், ஸ்வாசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையின் நியமனத்திற்குச் சேரவும் ஓர் ஆசார்ய ஸகாசத்திலே ஸ்ரீபாஷ்யத்தை அதிகரிக்கத் திருவுள்ளம்பற்றி அப்போது, பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்தவரும் ஸத்ஸம்ப்ரதாய சுத்தி வாய்ந்தவருமான கிடாம்பி நாயனார் என்கிற ஸ்வாமியின் ஸந்நிதியிலே [முந்தின அவதாரத்திலே தாமே அருளிச்செய்ததான] ஸ்ரீபாஷ்யத்தை ஸேவிக்க எம்பெருமானாருடைய நியமனம் பெற விரும்பி, ஒரு திருநன்னாளில் ஸ்ரீபெரும்பூதூர்க்கு எழுந்தருளினார். அங்கே விடுதியாகப் பல பாசுரங்கள் அருளிச்செய்தவையுண்டு; அவற்றுள் சில வருமாறு :—

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

" இதுவோ பெரும்பூதூர் இங்கே பிறந்தோ
எதிராச ரெம்மிடரைத் தீர்த்தார்—இதுவோதான்
தேங்கும் பொருநல் திருநகரிக் கொப்பான
ஓங்கு புகழுடைய வூர்,"

" எந்தை யெதிராசர் எம்மை யெடுத்தளிக்க
வந்தபெரும் பூதூரில் வந்தோமோ—சிந்தை
மருளோ தெருளோ மகிழ்மாலை மார்வ
னருளோ விப்பேற்றுக் கடி."

—இத்யாதிகள்.

அங்கே எம்பெருமானுரைத் திருவடி தொழுது விடைபெற்று மீண்டும் கச்சிப்பதியேற வெழுந்தருளிக் கிடாம்பி நாயனர் பக்கல் ஸ்ரீபாஷ்யம் ஸேவித்துத் தலைக் கட்டின வளவிலே, சில மஹான்கள் ஸ்வாமி திருவடிகளிலே ஸ்ரீபாஷ்யம் ஸேவிக்க விருப்பங்கொண்டு மிகவும்ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் திருவுள்ளமுகந்தருளி ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமான் ஸந்நிதியிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்தருளினர். இதுபற்றியே திருவெஃகாவில் மணவாள மாமுனிகள் வியாக்கியான முத்திரையோடு ஸேவை ஸாதித்தருளும்படியென்று பெரியார் பணிப்பது.

ஸ்வாமியினுடைய ஸகல சாஸ்த்ர பாரங்கதத்வம்

ஸ்வாமி தாம் ஸ்ரீபாஷ்யம் அதிகரிக்கிற காலத்திலும் சிஷ்யர்களுக்கு அதை ப்ரவசனம் செய்தருளும் காலத்திலும் தம்முடைய ந்யாயமீமாம்ஸாதி ஸகல சாஸ்த்ர பாராவார பாரீணத்வத்தைப் பல முகமாக ப்ரகாசிப்பித்தருளினர். தர்க்க மீமாம்ஸாதிகளில் பாண்டித்யம் பெற்றவர்கள் மற்றும் பல ஆசிரியர்கள் உளரெனினும் ஸ்வாமிதமக்கு அமைந்திருந்த பாண்டித்ய ப்ரகர்ஷம் பரம விலக்ஷணமென்பது ஸ்வாமி யிட்டருளின வியாக்யானங்களில் அக்ஷரந்தோறும் அதிஸ்புடமாக விளங்கும். ஒவ்வொரு ஸ்ரீஸூக்தியும் சாஸ்த்ரார்த்த ஸாரமே வடிவெடுத்ததென்னலாம்படியும், "அம்பரமே தண்ணீரே சோறே யறஞ் செய்யும்" என்கிற விடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளுகிற கணக்கிலே 'இஃது ஒன்றேயோ இவர் கற்றது!' என்று வியக்கும்படியும் அமைந்திருக்கையாலே இவருடைய ஸர்வதோமுகமான பாண்டித்யம் வேறெங்கும் காணக் கிடைக்காததொன்று. "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்" என்கிற திருமங்கையாழ்வாரருளிச்செயலுக்கு முக்கிய இலக்காகவிளங்கினவர் கடல்சூழ்ந்த இம்மண்ணுலகில் இந்த வ்யக்தி விசேஷமொன்றே யென்னத்தட்டில்லை.

ஸ்வாமி திருவரங்கம் பெரிய கோயில் சென்று சேர்தல்.

இங்ஙனம் கச்சிப்பதியிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து அடியார்களை வாழ்வித்தருளி மீண்டும் திருவரங்கம் பெரிய கோயிலில் சென்று சேர்ந்து அவ்விடத்திலே *பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமேயாள்கின்ற வெம்பெருமானை செங்கோலுடைய திருவரங்கச் செல்வனருடைய விசேஷ கடாக்ஷத்திற்கு இலக்காகி *வன்பெரு வானகமுய்ய அமருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந் தொண்டர் வாழ அர்த்த விசேஷங்களை அடியவர்களுக்கு அநுக்ரஹித்தருளா நின்றுகொண்டு "இருமுப்பொழுதேத்தி யெல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்" என்கிற வ்யபதேச விபூஷிதராய் * வைகுந்தமாகும் தம்மூரெல்லாம் * என்கிறபடியே லீலாவிபூதியை நித்ய விபூதியாக்கிக்கொண்டு விளங்கி வந்தார்.

ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளல்.

அக்காலத்தில், ஸ்வாமிக்கு ஜ்ஞாதிகள் பலரிருந்தமையால் அடிக்கடி ஆசௌச ப்ரஸங்கம் நேர்ந்து க்ரந்த காலக்ஷேபத்திற்கும் பெருமாளுடைய மங்களாசாஸனத்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திற்கும் இடையூறு விளைந்துவந்தது கண்டு க்ருஹஸ்தாச்ரமத்திலே வெறுப்புண்டாகி உத்தமாச்ரமஸ்வீகாரம் செய்தருளத் திருவுள்ளமாய், அப்போது கோயிலிலே ஸ்ரீசடகோப ஜீயரென்று ப்ரஸித்தராய் ஞானமனுட்டான மிவை நன்றாகவே யுடையராயிருந்த மஹநீயர் பக்கலிலே துரீயாச்ரமம் ஸ்வீகரித்து நம் பெருமாளை மங்களாசாஸனம் செய்யச்சென்று நின்றவளவிலே, பெருமாளும் இவரை ஆதரித்தருளித் தம்முடைய திருநாமத்தையே இவர்க்கு ப்ரஸாதித்தருளி [அழகிய மணவாள மாமுனிகள் என்றிட்டு] ஸகல மரியாதைகளையும் சிறப்பித்து *யாவச்சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ* என்று எம்பெருமானார்க்குப் போலே நியமனம் தந்தருளி, பல்லவராயன் மடத்தையும் ஸ்வாமிக்குப் பரிசாக ப்ரஸாதித்து அனைத்துக் கொத்துப் பரிகரங்களுடனே போகவிட்டருள, அழகிய மணவாள மாமுனிகளான நாயனார் பெருமாளுடைய திருவருள் நிரம்பிய நியமனத்தைச் சிரஸாவஹித்து மடமேற எழுந்தருளி அழகிய மணவாளனுடைய அருட்பெருக்குக்கு அதிமாத்ரம் உகந்து போந்தார். அக்காலத்திலே மாமுனிகளின் அப்ரதிமவைபவம் தேசமெல்லாம் பரந்துதிகழ, உலகம்நிறைந்த புகழாளரான மாமுனிகளின் திருவடி வாரத்திலே பலதிசைகளில் நின்றும் பலர் வந்து ஆச்ரயித்து, ஸ்ரீமந் நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான பூருவாசாரியர்களை ஸேவிக்கப் பெறாத குறைதீர அவ்வாசிரியர்களனைவரும் இங்ஙனே ஒரு திருக்கோலமாக வடிவெடுத்து ஸேவை தந்தருள்வதாக அறுதியிட்டு க்ருதார்த்தர்களாய் வாழ்ந்து வந்தார்கள்.

திருமலையாழ்வார் திருமண்டபம் அமைத்தல்.

மாமுனிகள், தம்முடைய மடத்தில் ஒரு பகுதியை ஸ்வாசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையின் திருநாமத்தினால் காலக்ஷேப கூடமாக அமைத்தருளி, அதில், "முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம்" என்று (ஆர்த்தியில்) தாமே அருளிச்செய்தபடி பூர்வாசார்ய திவ்ய ஸ்ரீஸூக்திகளை சிஷ்யவர்க்கங்களுக்கு ப்ரவசனம் செய்தருளி வந்தார். *அத ஸ்ரீசைல நாதார்ய நாம்நி ஸ்ரீமதி மண்டபே* என்று தொடங்கி எறும்பியப்பாவாலும் தினசர்யையில் இது அநுஸந்திக்கப்பட்டது.

இங்ஙனம் திருவாய்மொழிப் பிள்ளை திருநாமத்தாலே திருமலையாழ்வாரென்று அமைந்த திருமண்டபத்திலே, பிள்ளை லோகாசார்யர் திருமாளிகையில் நின்றும் 'ரஹஸ்யம் விளைந்த மண்' என்று விலக்ஷணமான சிறப்புப் பெற்ற திருமண்ணைக் கொணர்ந்து காலக்ஷேப ஸ்தலத்திற்குக் காப்பிடுவித்து அவ்விடத்தை குருகுல வாஸமாகவே எண்ணி எழுந்தருளியிருந்து முமுக்ஷுக்களுக்கு அருமருந்தானவற்றை அடிபணிந்தவர்களுக்கு அருளிச்செய்யா நின்றுகொண்டு எண்டிசையும் புகழோங்க வாழ்ந்து வந்தார்.

பட்டர்பிரான் ஜீயர் வந்து ஸ்வாமி திருவடிகளிலே ஆச்ரயித்தல்.

இப்படி நடந்து போருங்காலத்திலே 'கோவிந்த தாஸரப்பன்' என்று திருநாமமுடைய பட்டர்பிரான் ஜீயர் வந்து மாமுனிகளின் திருவடிகளிலே ஆச்ரயித்து எம்பெருமானார் திறத்தில் எம்பார்போலே இறையுமகல கில்லாதே பாதச்சாயை போலே யிருந்து பிரியாவடிமை செய்துவந்தார். அடியார்கட்குச் சேமவைப்பாக மாமுனிகள் அருளிச் செய்யும் அர்த்த விசேஷங்கள் அனைத்துலகும் பரவ, நாடோறும் பலபல மஹான்கள் வந்து திருவடி ஸம்பந்தம் பெற்று, உபய விபூதியிலும் ஒத்தாரும் மிக்காருமில்லாத மஹாசார்யர் இவரொருவரே யென்று அறுதியிட்டு அநுஸந்தித்துப் போந்தார்கள்.

ஸ்வாமி திருவடிகளிலே கோயில் கந்தாடையண்ணன் ஆச்ரயித்தல்.

கோயிலில் ஆசார்ய புருஷர்களில் ஒருவராக விளங்கி நின்ற கந்தாடையண்ணனும் மாமுனிகளின் திருவடி ஸம்பந்தமே தமக்கு ஸர்வஸ்வம் என்று நிச்ச

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யித்துப் பெரிய பெருமாளுடைய நியமனத்தையும் பெற்று ஸபரிகரராய் வந்த "காதம்பலவும் திரிந்துழன்றேற்கு அங்கோர் நிழலில்லை நீருமில்லை, உன்பாத நிழலல்லாமல் மற்றோருயிர்ப்பிடம் நானெங்கும் காண்கின்றிலேன்" என்று அநு ஸந்தித்துத் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து மாமுனிகளின் பரிபூர்ண மான திருவருளைப் பெற்று, அந்நாள் தொடங்கி அவரது திருவடித் தாமரைகளையே பழுக்க ஸேவித்துக்கொண்டு அங்குத்தைக்கு அந்தரங்கராய்த் தேவமற்றறியாதே யிருந்து வந்தார்.

ஸ்வாமி பிரதிவாதி பயங்கரம் *அண்ணனைத் திருவுள்ளம் பற்றுதல்.

மாமுனிகள் தர்சன நிர்வாஹத்திற்கு உரியாரைத் தேடி 'இனி இதுக்கு ஆவாரார்?' என்று விசாரியா நிற்கையில், பிரதிவாதி பயங்கரம் அண்ணனைப் பற்றிக் கேள்விப்பட்டு, மஹாஸமர்த்தராய் ஆத்மகுண ஸம்பந்நராய்த் திருமலையில் திருவேங்கட முடையானுக்கு வழுவிலாவடிமை செய்துகொண்டு ஸகுடும்பமாக எழுந் தருளி யிருக்கிறாரென்பதை உணர்ந்தருளி 'ஆம் முதல்வனிவன்' என்று திருவுள் ளத்திலே கனக்கக் கடாக்ஷித்து அவரைக் கோவிலுக்கு அழைத்து வருமாறு இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை ஸ்ரீ முகத்துடன் திருமலைக்குப் போக விட்டார்.

பிரதிவாதிபயங்கரம் அண்ணனுடைய செய்தி

ஸ்ரீ காஞ்சீபுரியில் நயனவரதாசார்யர் ஸ்வாமி பக்கலிலே வாழ்ந்திருந்து வேதாந்த ச்ரவணம் பண்ணி 'ப்ரதிவாதி பயங்கரர்' என்கிற விருதையும் பெற்று விக்யாதராய் விளங்கி நின்ற அண்ணன், சிலகாலம் திருவேங்கடமலையில் வாழ்ந்த அப்பனுக்குத் தொண்டுபூண்டமுதமுண்ண வேணுமென்று கருதி அங்கே சென்று நாடோறும் ஆகாச கங்கையிலிருந்து திருவாராதனத்துக்கும் திருமஞ்சனத்துக்கும் தீர்த்தம் கொணர்ந்து ஸமர்ப்பிக்கிற கைங்கரியத்தில் ஊன்றியிருந்தார்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் கோயிலில் நின்றும் மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தியானவொரு பரமபாகவதர் திருமலைக்கு எழுந்தருள, அண்ணன் அவரை மிகவும் உபசரித்துப் பெருமாள் ஸேவை முதலானவைகளைப் பண்ணி வைத்துத் தமது திருமாளிகையிலேயிருத்தி வார்த்தைகள் சொல்லிக் கொண்டிருக் கையில், அவர் மணவாள மாமுனிகளின் வைபவ விசேஷங்களை எடுத்துரைக்க அவற்றைச் செவிமடுத்த அண்ணன் பரம பக்தியுக்தராய், 'இன்னஞ் சொல்லாய் சீமானே!' என்று மேன் மேலும் அந்த திவ்ய வைபவங்களைச் சொல்லுமாறுவேண்டி அவருடனே ஸல்லாபங்கள் செய்து கொண்டே மறுநாள் மாலையில் ஆகாச கங் கைகு நித்தியம் போல் எழுந்தருளி நித்யாநுஷ்டானங்களை நிறைவேற்றித் திரு வேங்கட முடையான் திருவாராதனத்துக்காகத் தீர்த்தத்தைக் கும்பத்தில் பூரித் தெடுத்துக் கொண்டு திருமாளிகைக்கெழுந்தருளி மணவாள மாமுனிகளின் வைபவ ச்ரவணத்தில் பரவச ஹ்ருதயராய்த் திருமஞ்சன கைங்கரியத்தில் த்வரையின்றிக்கே ஸாவகாசராய் இருந்துகொண்டு பரிமள த்ரவ்யங்களால் தீர்த்தத்தை ஸம்ஸ்கரிக்க யத்னித்துக் கொண்டிருக்கையில் திருவேங்கட முடையான் ஸன்னிதியில் நின்றும் அர்ச்சகர் தாமே விரைந்தோடிவந்து "திருவாராதன காலம் கடந்ததும் தெரியாமே இப்படி அந்யபரராய் விளம்பித் திருப்பது வெகு நன்றாயிருக்கிறது! தீர்த்தக் குடத்தை இப்படி கொடும்" என்று நிஷ்டுரமாகப் பேசி அந்தத் தீர்த்த கும்பத்தைப் பரிமள ஸம்ஸ்காரமின்றியே பலாத்காரமாக வாங்கி யெடுத்துக் கொண்டு சடக்கெனக் கோயிலுக்குப் போய்விட்டார்.

---

* இவர்க்கு அண்ணன் என்றே திருநாமமாயினும் ஏற்கெனவே ஆச்ரயித்திருந்த கோயி லண்ணனிற் காட்டில் இவர்க்குத் திருநாமவாசி தோற்ற 'அண்ணா' என்று வ்யவஹரித்து வந்தார் கள். அது பற்றியே 'ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா' என்றே நாளைக்கும் வ்யபதேசம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அநவ்தானத்தால் இன்று இப்படி அபசாரப்பட நேர்ந்ததே! என்று அண்ணன் அநுதபித்துக் கொண்டே பரிமளத்ரவ்யங்களை யெடுத்துக்கொண்டு மிகவும் விரைந்து ஸந்நிதிக்கு எழுந்தருள்வதற்குள்ளே திருவாராதனம் உபக்ரமித்து நடந்து கொண்டிருப்பதறிந்து அஞ்சி நடுங்கி வினயத்துடனே உள்ளே சென்று அந்தப் பரிமள த்ரவ்யங்களை அர்ச்சகரிடத்தில் கொடுத்துவிட்டு வெள்கி வெளியே நிற்கையில், அநுதப்தராயிருக்குமிவரைத் தேற்றுவிக்கத் திருவுள்ளங் கொண்ட திருவேங்கடமுடையான் 'வாரீர் அண்ணனே! இன்று நீர் கொணர்ந்த தீர்த்தம் பரம போக்யமாயிராநின்றது; இத்தனை நாளும் போலன்றிக்கே இன்றைத் தீர்த்தத்தில் ருசியும் பரிமளமும் விலக்ஷணமாயிரா நின்றது காணும்; உம்முடைய சிறந்த பக்திக்கு நாம் உகந்திருக்க, இங்ஙனே நீர் வருந்தக் கடவீரல்லீர்' என்று அர்ச்சகமுகேந அருளிச் செய்ய, அந்த திவ்ய ஸூக்தியைக் கேட்டவாறே அண்ணன் பரம விஸ்மிதராய், 'பரிமளத்ரவ்யமொன்றும் சேராதிருக்கவும் இன்று திருமலைமால் இங்ஙனே திருவுள்ளமுகந்து அருளிச் செய்யக் காரணமென்னோ!' என்று விமர்சித்து மணவாள மாமுனிகளுடைய வைபவங்களைச் செவியேற்றுக்கொண்டே இன்று இந்தத் தீர்த்தம் பூரித்தோமாகையால் அந்த உத்தமாசார்ய வைபவச்ரவணமே இத்தனை அதிசயத்துக்கு அடியாக வேணுமென்று அறுதியிட்டு அது முதலாகவே மாமுனிகளை விரைவில் ஸேவிக்கப் பெற வேணுமென்று குதூஹலம் அதிகரிக்கப்பெற்று இரவும் பகலும் அதுவே சிந்தையாயிருந்து வந்தார். இந்த மநோரதத்துடனே சிலநாள் சென்றவாறே திருமலையப்பனிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு, மணவாள மாமுனிகளின் திருவடிகளிலே ஆச்ரயித்து உய்வதாக அங்கு நின்றும் புறப்பட்டு மார்க்க க்ரமத்திலே பெருமாள் கோயிலிலே வந்து சேர்ந்து பேரருளாளனைத் திருவடி தொழுது ஒன்றிரண்டு நாள் அங்கே தங்கிக் களித்திருந்தார்.

ஏற்கெனவே மாமுனிகளின் திருமுகத்துடன் புறப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் பயணகதியிலே பெருமாள் கோயிலைச்சென்று சேர்ந்தார்கள். யாத்ருச்சிகமாக அண்ணன் அவ்விடத்திலே எழுந்தருளி யிருக்கிற செய்தியறிந்து பெருமகிழ்ச்சி கொண்டு அவரைக் கண்டு ஸேவித்து மாமுனிகளின் திருமுகத்தைத் தந்தார்கள். அண்ணனும் அதனை ஆதரவுடன் பெற்று வாசித்துப் பரம ஸந்தோஷ பரவசராய் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி "வாரீகோள்! இன்று அடியேனுடைய பாக்ய பரிபாகம் என்னே! மாமுனிகளை ஸேவிக்க நெடுநாளாக விரும்பித் திருமலையில் நின்றும் கோயிலுக்குப் பயணப்பட்டு இங்கேற விடைகொண்ட அடியேனுக்கு இன்று இந்தத் திருவாணைத் திருமுகம் கிடைத்ததானது *கோரமாதவஞ் செய்தனன் கொலறியேன்* *விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்* *நானே தவமுடையேன்* இத்யாதி அநுஸந்தானங்களைச் செய்விக்கின்றது; மாமுனிகளின் நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு இலக்காகப் பெற்ற அடியேனுக்கு ஆரும் நிகரில்லை; நல்லது; நெடுந்தூரம் வந்த நீங்கள் போர விடாய்த்திகோளாதலால் சிறிது இங்கே விச்ரமித்தல் நன்று; பேரருளாளனுடைய நியமனம் பெற்றுப் புறப்படுவோம்" என்று சொல்லி அவர்களை மிக உபசரித்து விச்ரமிக்கச் செய்து தாம் மநோரத ப்ரவாஹங்களைப் பெருக்கிக் கொண்டிருந்தார்.

அண்ணன் மறுநாள் காலையில் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பேரருளாளனைத் திருவடிதொழுது நியமனம் பெற்றுக்கொண்டு அன்றே ஸகுடும்பமாய்ப் புறப்பட்டுப் பயணகதியிலே திருவரங்கம் பெரிய கோயிலைச்சென்று கிட்டி நித்யாநுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு மாமுனிகளின் திருவடிவாரத்திற் சென்று சேர்ந்தார். *தாய்நாடு கன்றேபோல் ஆர்வம் பெருக வந்துசேர்ந்து வேரற்ற மரம் போலே விழுந்து எழுந்திருக்க மாட்டாதே முசித்துக்கிடக்க மாமுனிகள் வாரியெடுத்தணைத்து யோகக்ஷேம விசாரணை செய்தருளிப் போரவும் உபலாளித்தார்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அப்போது திருவாய்மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படியில் *ஒன்றுந் தேவு ப்ரவேசம் காலக்ஷேபம் நடந்துகொண்டிருந்த ஸமயமாதலால் மாமுனிகள் தம்முடைய ஸகல சாஸ்த்ர ப்ராவீண்யமும் செவ்விதாக விளங்க கங்காப்ரவாஹம்போல் உபந்யஸித்தருளக் கேட்ட அண்ணன் "ஆழ்வார்கள் பதின்மரும் ஸ்ரீமந் நாதயாமுநயதிவராதிகளான ஆசார்யர்களனைவரும் ஒருங்கே திரண்டு அவதரித்தபடியே இது!" என்று அறுதியிட்டு *ப்ரத்யக்ஷ குரவঃ ஸ்துத்யா: * என்கிற கணக்கிலே வாயாரத் துதித்து எழுந்து தெண்டனிட்டு "அடியேனையும் ஆட்கொண்டருளவேணும்" என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, அதற்கு மாமுனிகள் சாடுக்தியாக "நீர் ப்ரதிவாதிபயங்கரர்; நாம் ஸாது; எங்ஙனே கூடுவது?" என்று புன்முறுவலோடே யருளிச்செய்ய, உடனே அண்ணன் ஐயோவென்று அலமந்து தெண்டன் ஸமர்ப்பித்து *ப்ரஸித்தঃ பரகோஷ்டீஷு பரவாதி பயங்கர:, ஸ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டீஷு தத்தாஸ இதி விச்ருத:* என்று விண்ணப்பஞ் செய்து, 'இத் திருவடி ஸம்பந்தமல்லது பாவியேனுக்கு உய்வுபாயம் மற்றொன்றில்லை' என்று கண்ணீர் பெருக நின்று ப்ரார்த்திக்க, மாமுனிகளும் இவருடைய ஆத்மகுண ஸம்பத்திக்கு அதிசயித்து இவருடைய பிரார்த்தனைக்குத் திருவுள்ளமுகந்து ஸகுடும்பரான விவர்க்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்தருளி, ஸ்ரீவைஷ்ணவ தாஸன் என்று விலக்ஷணமான தாஸ்ய நாமத்தையும் ப்ரசாரப்படுத்தியருள அண்ணன் க்ருதார்த்தராய்,

"போதச்சிவந்து பரிமளம் வீசிப் புதுக்கணித்த
சீதக்கமலத்தை நீரேறவோட்டிச் சிறந்தடியேன்
ஏதத்தைமாற்று மணவாளயோகி யினிமைதரும்
பாதக்கமலங்கள் கண்டேனெனக்குப் பயமில்லையே"

என்று விண்ணப்பஞ்செய்து இப்பாசுரத்தையே முதலாகக்கொண்ட 'அமலனாதிபிரான்' என்கிற பிரபந்தத்தையும் வரவரமுநி சதகத்தையும் விஜ்ஞாபித்து அன்று முதல் மாமுனிகளின் திருவடிகட்கு அந்தரங்கராய் வர்த்தித்து ஸகல திவ்யப்ரபந்த ரஹஸ்ய வியாக்யானங்களையும் அதிகரித்துக்கொண்டு க்ருதார்த்தராயிருந்தார்.

மாமுனிகளின் திவ்ய தேசயாத்திரை.

ஆழ்வார் திருநகரி முதலான திவ்யதேசங்களேற வெழுந்தருளி மங்களாசாஸனம் செய்து வரவேணுமென்று அபிநிவேசங்கொண்ட மணவாளமாமுனிகள் நம்பெருமாள் திருவடிகளிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டுப் பயணகதியிலே ஆழ்வார் திருநகரியிற் சென்று சேர்ந்து அங்கே சிலகாலம் எழுந்தருளியிருந்து அடிபணிந்தார்க்கு அரும்பெரும் பொருள்களை அருளிச் செய்துகொண்டு வாழ்ந்து பாண்டிநாட்டுத் திருப்பதிகளையெல்லாம் அடைவே மங்களாசாஸனம் செய்தருளி மீண்டும் கோயில் சேர்ந்தாயிற்று.

ஸ்வாமி திருவடிகளிலே எறும்பியப்பா வந்து பணிதல்.

திருக்கடிகைக்கு அருகிலுள்ள எறும்பியென்னும் அக்ரஹாரத்திலே தோன்றி எறும்பியப்பா என்று ப்ரஸித்தராய் வித்வானாயிருந்த தேவராஜாசார்யர் கோயிலில் நம்பெருமாளை ஸேவிக்க விடைகொண்டு அங்கே அண்ணன் திருமாளிகையில் தங்கியிருக்கையில் அவ்வண்ணனோடுகூட மாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலும் அந்வயிக்கப் பாக்யம் பெற்றார். அப்போது மாமுனிகளின் ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞா விசேஷத்தைக் கண்டு களித்தும் அவர் திருவடிகளில் ஆச்ரயிக்க பாக்யபரிபாகம் விளையாமையாலே மாமுனிகள் பாடே தீர்த்த ப்ரஸாதங்களும் பெறாமலே தம்முடைய வூருக்குத் திரும்பிவிட்டார்.

அங்கே நித்யகர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு பெருமாளுக்குத் திருவாராதனம் கண்டருளப்பண்ணப் புகுந்து தம் திருவாராதனமான

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சக்ரவர்த்தி திருமகன் ஸந்நிதியிலே தெண்டன் ஸமர்ப்பித்து *கௌஸல்யா ஸுப்ரஜாராம! * என்று அநுஸந்தித்துக்கொண்டே கோயிலாழ்வார் திருக்காப்பு நீக்கப் புகத் திருக்காப்பு திறக்கப் பெற்றதில்லை; பின்பு பலவாறு உபாயங்கள் செய்து பார்த்தும் ஒருபடியாலும் திறக்கப்போகாமையாலே பரம துக்க பர்யாகுலராய் அமுது செய்யாமலே 'இது என்ன அபசார பலனோ!' என்று மனம் நொந்து முசித்துக்கிடந்தார். அன்றிரவில் அவருடைய கனவில் சக்ரவர்த்தி திருமகன் ஸேவை தந்தருளி "நமக்கு ஆருயிராய் உலகுக்கு ஒருயிரான மணவாள மாமுனிகளின் திருவடிகளிலே ஆச்ரயியாதே மீண்டு வந்தீராகையாலே உமக்கு நாம் கதவு திறந்திலோம்; திருவனந்தாழ்வான்றானே அவராக வந்து அவதரித்தமை அறிவீராக. அவர் திருவடிகளில் சென்று ஆச்ரயித்துத் தூய்மை பெற்று வந்தாலன்றி உமது கையில் நாம் திருவாராதனம் கொள்ளக்கடவோமல்லோம்; சடக்கெனப் போகீர்" என்று நியமித்தருள, அப்பாவும் துயிலெழுந்து விஸ்மிதராய் இவ்வதிசயத்தை அன்பர்களுக்கு அறிவித்து அப்போதே புறப்பட்டுப் பயணகதியிலே நம்பெருமாள் ஸந்நிதி சென்று சேர்ந்தார்.

அப்போது மணவாளமாமுனிகள், ஸந்நிதியில் மங்களாசாஸனம் செய்தருளப் புறப்படும் அவஸரமாயிருந்தது. அப்பாவும் அவ்விடத்திலே மாமுனிகளைத் திருவடி தொழுது அவருடைய விசேஷகடாக்ஷத்திற்குப் பாத்ரபூதராகி, க்ரமேண தம்முடைய இல்லத்தில் நடந்த செய்திகளையெல்லாம் விண்ணப்பஞ் செய்து, வேரற்ற மரம்போலே திருவடிகளிலே விழுந்து அபராத க்ஷாமணம் செய்துகொண்டு 'இனி அடியேனுக்கு இத்திருவடி நிழலொழியப் புகலிடம் வேறொன்றில்லை; *நெறிகாட்டி நீக்கப்பாராதே அத்தாணிச் சேவகத்திற்கு ஆட்படுத்திக் கொண்டருள வேணும்' என்று மிகவும் ப்ரார்த்தித்து மாமுனிகளின் நிரவக்ரஹமான அநுக்ரஹத்தைப் பெற்றுத் திருவிலச்சினையும் பெற்று, அன்று தொடங்கி ஸகலார்த்தங்களும் நன்கு சிக்ஷிக்கப்பெற்றுக் க்ருதார்த்தரானார்.

இவர் பரமபக்தி பரிவாஹரூபமாக மணவாள மாமுனிகள் விஷயமான காவ்ய நாடக சம்பூ ஸ்தோத்ரங்கள் முதலியன பலவும் பணித்தார். நாளடைவில் இங்ஙனே பலபல மஹான்கள் அடிபணிந்து அறியாதன வறிவிக்கப் பெற்று க்ருதார்த்தராய் உஜ்ஜீவித்துப் போருவார்களாயிருந்தனர்.

அரங்கேசன் திருமுன்பே ஸ்வாமி ஈடு அருளிச்செய்தல்.

மணவாளமாமுனிகள் இங்ஙனம் அப்ரதிமவைபவம் பொலிய சிஷ்ய ஸம்பத்துடனே வாழ்ந்தருளுங் காலத்திலே ஒருநாள் ஸ்ரீரங்கநாதன் மாமுனிகளுக்கு அருளப்பாடிட்டு 'ஜீயரே! நாளை முதலாக நம்முடைய பெரிய திருமண்டபத்திலே நம்மாழ்வாருடைய திருவாய் மொழியை ஈடு முப்பத்தாறாயிரம் முதலான வியாக்கியானங்களுடனே ப்ரவசனம் செய்து போரீர்' என்று நியமனம் ஸாதிக்க, மாமுனிகள் மஹாப்ரஸாதமென்று உகந்து அப்படியே மறுநாள் தொடங்கி, 'கங்காப்ரவாஹமோ? அல்லது கங்கையிற் புனிதமாய காவிரிப் பெருக்கோ?' என்னலாம்படியாக மிக அற்புதமாய்த் தம்முடைய விசதவாக்சிகாமணித்வத்தை நன்கு நிலைநாட்டிக்கொண்டு ப்ரவசனம் செய்தருளத் தொடங்கினார்.

அப்போது பெருமாளும் நாச்சிமாருடனே கூட திவ்ய ஸிம்ஹாஸனத்தி
ஸமர்ந்து. அச்சேர்த்தியை அநுபவிக்கிற அயர்வறுமமரர்களான திருவனந்தாழ்
வான், பெரிய திருவடி, ஸ்ரீ ஸேனைபதியாழ்வானென்கிற நித்யஸூரிகளோடும்,
வைகுந்தத்து முனிவரான நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் பதின்மரோடும்,
*அணியரங்கன் திருமுற்றத்தடியாரோடுங் கூடப் பேரோலக்கமாக விருந்து *ரங்கே
வத்ஸரமேகமேவம் அச்ருணோத்" என்னும்படியே ஒரு ஸம்வத்ஸரமளவும் ப்ரஹ்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மோத்ஸவாதிகளுள்பட ஸகலோத்ஸவங்களையும் நிறுத்தித் திருச்செவி சார்த்தும்படியாயிற்று.

இங்ஙனம் ஒரு ஸம்வத்ஸரகாலம் இடையூறொன்றுமின்றி இனிதாக நடைபெற்றுக் காலக்ஷேபம் தலைக்கட்டியருளும் நாளொன்று நேர்ந்தது. அன்று அழகிய மணவாளன் திருவுள்ளத்திலே ஒரு தோற்றம் பிறந்தது. அதாவது: 'நாம் விபவாவதாரங்களிலே சில பெரியோர்களிடத்தில் பணிந்திருக்கப்பெற்றும் அங்கே ஆசார்ய குணபூர்த்தி யில்லாமையாலே நெஞ்சு குறையுற்றுத் தளும்பியே கிடக்க நேர்ந்தது; அக்குறையெல்லாம் தீர இப்போது இந்த ஸதாசார்யப் பேறு நமக்கு வாய்த்தது மஹத்தான விசேஷமே. இங்ஙனம் நமக்கு நேர்ந்த மஹாபாக்யம் நீடூழிகாலம் இந்நிலவுலகத்தில் நிலவும்படி இந்த ஸதாசார்ய விஷயத்திலே ஒரு கிஞ்சித்காரம் செய்யப் பெற்றோமாக வேணும்; இந்த ஆசார்ய சிகாமணிக்கு ஒரு சிறந்த தனியனிட்டு அதைத் திருவோலக்கத்திலே விண்ணப்பஞ் செய்து அதுதனக்கு உலகம் நிறைந்த புகழுண்டாம்படி செய்வோம்' என்கிற திருவுள்ளம் உண்டாயிற்று.

வஸ்துத: *பத்யம் அங்குளிவிச்சேத:* இத்யாதி ப்ரமாண கதியின்படி தனியன் அநுஸந்திக்கை சிஷ்யக்ருத்யங்களில் தலையானதாகையாலும், ஸ்ரீரங்கநாதன் மாமுனிகள்பாடே தான்வஹித்த சிஷ்யபாவத்தைத் தேசமெல்லாமறியச் செய்ய விரும்பினபடியாலும் இங்ஙனே திருவுள்ளம் தோன்றியது சாலப்பொருந்தும்.

ஸ்ரீசைலேசத் திருமந்த்ரம் திருவவதரித்தல்

அன்றைக் காலக்ஷேப கோஷ்டியில் "அவாவிலந்தாதி யிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே" என்னுமளவாக வ்யாக்யானத்தை நிர்வஹித்தருளி, மேலே சீரும் சிறப்பும் நடைபெறுத்த வேண்டிய அவஸரம் ப்ராப்தமாகையில்

அழகிய மணவாளன் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக குமாரனை கோலம் பூண்டு கனவேகமாகக் கோஷ்டியிடையிலே வந்து, அவரவர்கள் விலக்கினதையும் லக்ஷியம் பண்ணாமே புகுந்து கைகூப்பி நின்று

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம், யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் என்கிற தனியனை விண்ணப்பஞ்செய்து மறைய, இவ்வதிசயத்தை நோக்கி அனைவரும் வியந்தனர்.

இங்ஙனம் தெய்வவாக்காகத் திருவவதரித்ததாய் சிறந்த மந்திரமென்று போற்றப் படுமதான இத்தனியனை பகவதாஜ்ஞையின்படி சிஷ்யவர்க்கங்கள் பட்டோலை கொண்டு மஞ்சட்காப்பு சாத்தி *அரவணைத் துயிலும் கடல் நிறக்கடவுளெந்தையின் திருவடிவாரத்திலே ஸமர்ப்பித்தெடுத்துத் தட்டிலே வைத்துச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். வேதத்திற்கு ப்ரணவம் போலே த்ராவிடவேதாநுஸந்தானத்திற்கு இத்திரு மந்திரமே முதலும் முடிவுமாகக் கடவதென்று பெருமாளுடைய நியமனமும் பாங்காக வாய்த்தது.

பின்பு சிஷ்யர்களால் *வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால் வாழும்* என்று தொடங்கி வாழித் திருநாமம் அரங்கநாதனுடையின்படி பலிக்கப்பட்டு, இதை யநுஸந்தித்தே எங்கும் அருளிச்செயல் ஸேவை தலைக்கட்டுகவென்று நியமனமும் அவதரித்ததாயிற்று.

பிறகு மாமுனிகளை அழகிய மணவாளன் அருகிலழைத்து அநவதிகமான சிறப்புகளைத் தந்தருளி, கோயிலைனத்துக் கொத்தும் ஸகல வரிசைகளுடனும் திருவீதி வலமாக (மாமுனிகளை) மடத்திலே எழுந்தருளப் பண்ணுவித்து *க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ* என்கிற கணக்கிலே உள்ளம் பூரித்து க்ருதார்த்தனாய் விளங்கினன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மாமுனிகள் திவ்யஸூக்திகளருளிச் செய்தல்

ஆர்த்திப் பிரபந்தத்தில் (28) *பண்டுபல வாரியரும் பாருலகோருய்யப் பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மைக், கண்டதெல்லா மெழுதியவை கற்றறிந்தும் பிறர்க்குக் காதலுடன் கற்பித்துங் காலத்தைக் கழித்தேன்* என்று ஸ்வாமி தாமேயருளிச்செய்தபடி. ஏற்கெனவே அவதரித்துள்ள பூர்வாசார்ய திவ்ய ஸூக்திகளை ப்ரவசனம் செய்தருள்வதிலேயே மிகுந்த அபிநிவேச முடையராய் ஸ்வதந்த்ரமாகச் சில க்ரந்தங்கள் இட்டருளத் திருவுள்ளமுடையவ ரல்லரேயானாலும் இவ்வுலகின் பாக்யபரிபாக மடியாக சிஷ்யர்களின் பிரார்த்தனைக்கிணங்கியும் பகவந் நியமனத்தை முன்னிட்டும் *தேனே பாலே கன்னலே யமுதேயான பல திவ்யக்ரந்தங்களையும் அருளிச் செய்தருளும்படியாயிற்று. அவற்றின் விவரணம் வருமாறு:—பிள்ளை லோகாசார்ய ரருளிச்செய்த ரஹஸ்யங்களில் ஸ்ரீவசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கிறமூன்று ரஹஸ்யக்ரந்தங்கள் மிகச் சிறந்தவைகளும் ப்ரதானங்களுமாகையாலே அம்மூன்றுக்கும் வியாக்கியானமிட்டருளினர். பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் அருளிச் செய்த ஆசார்ய ஹ்ருதயமென்னும் ரஹஸ்ய ரத்னத்திற்கு வியாக்கியானமிட்டருளினர். பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்திற்கும் பூர்த்தியாக வியாக்கியான மருளிச் செய்திருந்தும் அதில் பெரியாழ்வார் திருமொழி முதற்பாசுரம் தொடங்கி "வாக்குத் தூய்மை யிலாமையினாலே மாதவாவுன்னை" (5—1—1) என்கிற வளவும் வியாக்கியானம் கரையானுக்கு இரையாகி துர்லபமாய் விட்டபடியாலே அவ்வளவுக்குத் தாம் வியாக்கியானமிட்டருளினர். அந்த வியாக்கியானத்தை மஹான்கள் ஸேவித்து "அந்தோ! நாலாயிர வியாக்கியானமும் கரையானுக்கு இரையாகி யிருந்தால் நலமாயிருக்குமே; இங்ஙனே தேனும் பாலுமமுது மன்ன வியாக்கியானத்தை மாமுனிகள் பூர்த்தியாக இட்டருளும்படியான பாக்கியம் நேர்ந்திருக்குமே" என்று பரஸ்பரம் வியந்து உவந்து பேசிக்கொண்டார்கள். இராமாநுச நூற்றந்தாதிக்குச் சுருக்கமான உரை செய்தருளினர். அருளாளப்பெருமா ளெம்பெருமானாருளிச் செய்த ஞானசாரப் பிரமேயசாரங்களுக்குப் பொருத்தமான புராண சுலோகங்களைச் சேர்த்தருளினர். கீதைக்குத் தாத்பர்யதீபமென்றொரு வியாக்கியானம் இட்டருளினர். (இது லுப்தம்.) ஈடு முப்பத்தாறாயிரப்படிக்கும் தாமருளிய ரஹஸ்ய வ்யாக்கியானங்களுக்கும் பிரமாணத்திரட்டுகள் ஸங்க்ரஹித்தருளினர். திருவாராதன ப்ரயோகமொன்று திருவாய்மலர்ந்தருளினர். உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி என மூன்று தமிழ்ப் பிரபந்தங்களருளிச் செய்தார். [தேவராஜ மங்களமும் யதிராஜ விம்சதியுமருளிச் செய்தமை கீழே நிரூபிக்கப்பட்டது.] மற்றும் ஸ்ரீஸூக்தி விசேஷங்களுண்டாகில் கண்டுகொள்வது.

மாமுனிகளின் ஸ்ரீஸூக்திப் பெருமை

உலகில் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர்கள் பல ஆசார்யர்களுமுண்டு, எனினும், மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யமும் காம்பீர்யமும் அர்த்தபுஷ்டியும் ரஸபுஷ்டியும் அநிதர ஸாதாரண மாகவே யிருக்கும். *நாமூலம் லிக்யதே கிஞ்சித் நாநபேக்ஷித முச்யதே* என்னும்படி யமைந்த வியாக்கியானம் மாமுனிகளுடையதேயாம். வேறு எந்த ஆசிரியரும் இங்ஙனே வியாக்கியானம் அமைக்கக் கற்றிலர் என்றால் இது அதிசயோக்தியேயாகாது. தத்வத்ரய வ்யாக்யானதிகளிலே பல மதாந்தரங்களைக் கண்டித்து எழுதினாலுங்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும், வ்யர்த்த தூஷண பரிஹாஸங்களைச் சிறிதும் புகவிடாதபடிக்கும், எந்த இடத்தை யெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள் கனியாகும் படிக்கும் 'ஸகல சாஸ்த்ர ஸாகர பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாக

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முக்க்ய விஷயக் கண்ணாடி.

மணவாளமாமுனிகளின் அர்த்தநிஷ்கர்ஷங்களுக்கு மூலமான பிள்ளை லோகாசார்ய ஸ்ரீஸூக்திகளும், அவற்றை யடியொற்றின ஸ்ரீமந்நிகமாந்த குரு ஸூக்திகளும்.

பிள்ளைலோகாசார்ய ஸ்ரீஸூக்திகள்.

1. "இவன் அவனைப்பெற நினைக்கும் போது ப்ரபத்தியும் உபாயமன்று; அவன் இவனைப்பெற நினைக்கும் போது பாதகமும் விலக்கன்று" (ஸ்ரீவசநபூஷணம்)

2. ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணினக்ருஷிபலம்"

3. "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" (ஸ்ரீவச)

4. "தன்னுடைய அநுவ்ருத்தியால் ஈச்வரனுக்குப் பிறக்கும் ஹர்ஷமேயிறே சேதநனுக்கு ப்ராப்யம்"

5. "அவனை இவன் பற்றும் பற்று அஹங்கார கர்ப்பம், அவத்யகரம்; அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்."

6. ஜன்ம பரம்பரைகளிலே யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்று சில ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்து". (ஸ்ரீவசநபூ.)

7. "பெரிய பிராட்டியாராலே பேறுகை யாவது - இவள் புருஷகாரமாகு லல்லது ஈச்வரன் கார்யம் செய்யானென்கை.

8. அதிஸூக்ஷ்மமாயிருந்த அசித்வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கிற சித்வஸ்துக்களிலும் ஸ்தூல்மான அண்டத்தில் வியாபித்தாற் போலே அநாயாஸத்தாலே அஸங்குசிதனாய்"

9. மத்ப்ராப்த்யநு குண உபாஸந விபாகம் தத்விரோதி நிரஸநம் அத்யர்த்த மத்ப்ரிய த்வாதிகஞ்ச அஹமேவ ததாமி" (கீதாபாஷ்யே)

10. காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ. ஸா ச த்வ யைவ கமலா ரமணேர்த்திதாயத் க்ஷேமஸ் ஸ ஏவஹி யதீந்த்ர! பவச்ச்ரிதாநாம்.

நிகமாந்த மஹாகுரு ஸ்ரீஸூக்திகள்.

"ஸ்வயம் ஸ்வாதுத்வாத், க்ஷணிகஸ்ய காலாந்தரபாவி பலஸாதநத்வாநுபபத்தி தர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயத்வ புத்திரபி ஸ்யாத்."
(கீதார்த்தஸங்க்ரஹரக்ஷாயாம்)

"நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:" ரஹஸ்யத்ரயஸாரே 9.

"யாவதாத்ம நியதத்வத் பாரதந்த்ர் யோசிதா"......ந்யாஸதிலகே.

"த்வத்தாஸ பூதஸ்ய மே த்வத்ப்ரஹர்ஷ ஏவ ப்ரதாநம் ப்ரயோஜநமிதி பாவ:"
(ஸ்தோத்ரபாஷ்யே.)

"ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஸ்வலாபம் மத்வா ப்ரவர்த்ததே பகவாந்"–கீதா தாத்பர்யச.

"அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்யபுத்தி மூல ஸுக்ருத விசேஷங்களை வியாஜமாகக் கொண்டு விசேஷ கடாக்ஷம் பண்ணி" பரமபதஸோபாநே.

"மோக்ஷப்ரதே, பகவதி முமுக்ஷூணும் கடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வ ஸம்மதம்." (சதுச்ச்லோகீபாஷ்யே.)

"ச்ருதேஸ்து சப்த மூலத் வாத் யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ பகவாந்."
"அந்யத்ர வித்யமாநஸ்ய அந்யத்ர பூர்ணத்வம் நஸ்யாதிதிசேத்...."
(ந்யாய ஸித்தாஞ்ஜநே)

"உக்தஸ்ய அதிவாத மாத்ர த்வசங்காவ்யுதாஸாய ச்ருதி மூலதாமாஹ யமேவேதி."
(தாத்பர்யசந்த்ரிகா.)

"உக்த்யாதநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம் ததநுபந்த மதாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத!

பொய்யிலாத மணவாள மாமுனி புந்திவாழி
புகழ்வாழி வாழியே,

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

P. B. A. புத்தக விளம்பரத்தின் அநுபந்தம்

P. B. A. பதிப்பு நூல்கள் சில ஸௌகரியங்களைக் கருதி 12 தொகுதிகளாக பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றன. அத்தொகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள நூல்கள் இன்னின்னவையென்று தெரிந்துகொள்வதற்கு விளக்கம் காட்டப்படுகின்றது. சில நூல்கள் 2 or 3 தொகுதிகளிலும் சேர்க்கப்பட்டிருப்பது பயிண்டரின் கவனக்குறைவினால்

P. B. A. பதிப்புநூல் தொகுதி நெ. 1

இதில் சேர்த்து ஒரே ஸம்புடமாக பயிண்டுசெய்யப்பட்டவை

1. பரந்தரஹஸ்யம், மாணிக்கமாலை. 2. ஆச்சான்பிள்ளை யாறுரஹஸ்யம்.
3. ஆச்சான்பிள்ளை யஷ்டாத்யாயி
4. ஸ்ரீ ராமாயணஸௌரபம். (நாலாயிர வியாக்கியானங்களில் ஸ்ரீ ராமாயணசுலோகங்களுக்குப் பூருவாசாரியர்களருளிய விசேஷவுரை கொண்டது.)
5. ஐதிஹ்யநிர்வாஹ ரத்தினமாலை. (நாலாயிர வியாக்கியானங்களிலுள்ள ஐதிஹ்யங்களும் நிர்வாஹங்களும்.) 6. முமுக்ஷுப்படி ஸாரார்த்ததீபிகை.
7. ஸ்ரீவசநபூஷண தாத்பரியஸாரம் 8. ஆசார்ய ஹ்ருதயப் பதவுரை
9. தக்ஷிணோத்தரயாத்ராவிசேஷம். (தென்னாடும் வடநாடும் யாத்திரை செய்ய விரும்புமவர்களுக்கு மிகவும் ஸௌகரியமளிக்கும் நூல்.)
10. நைச்யாநுஸந்தானம். (மூன்றுதத்துக்குப்பிழைத்த அருவினைநோயித்யாதி ஆசார்ய ஹ்ருதயஸூக்தி விவரணபரமானது.)
11. நப்பின்னையவதார ரஹஸ்யம்
12. ஞானஸார ப்ரமேயஸார ஸப்தகாதை யுரைகள்.
13. நரஸிம்ஹாவதாரஹேது நிர்ணயம், விபவாவதார சோகதத்வம்.
14. முப்பத்திரண்டு மொழிமாலை. ஸாதுஸாத்விக ஸம்வாதம். மாமுனிவன் மேற்கோள் விளக்கு. (இம்மூன்றும் ஸ்ரீவைஷ்ணவமஹாநிதி.)
15. அங்கண்மாஞாலத்தமுது ஆக 15 நூல்கள்கொண்ட ஒருஸம்புடத்தின்விலை ரூ.12

[இவை தனித்தனியாகவும் கிடைக்கும்.]

P. B. A. பதிப்புநூல் தொகுதி நெ. 2

1. பூர்வாசார்ய வைபவம். (ஸ்ரீமந்நாதமுனிகள் தொடங்கி வேதாந்த தேசிகன் மணவாளமாமுனிகள் வரையிலுள்ள ஸகலாசார்யர்களுடையவும் வைபவம்.)
2. வரதன்ஸன்னிதி வரலாறு. (தேவப்பெருமாள் ஸந்நிதியைப்பற்றி நவீனர் எழுதிய தப்பான விஷயங்களை ப்ரமாணபுரஸ்ஸரமாகக் கண்டித்தெழுதிய 16 அத்யாயங்கள் கொண்டது. அபூர்வமான விஷயங்களடங்கியது.
3. ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதி. (தென்னாசார்ய ஸம்பிரதாயத்தின் ஸகலார்த்தங்களையும் திருமண்காப்பு ஆகாரங்களையும் விரிவாக விளக்குவது.)
4. ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரன். (பிரதிபக்ஷிகளின் பல துர்வாதங்களை 116 பாராக்களால் கண்டித்தது. (D. T. T. க்குமறுப்பு.)
5. பன்னிரு திங்களநுபவம். (பன்னிரண்டு மாதங்களிலும் அவதரித்த ஆழ்வாராசாரியர்களைப் பற்றின விசேஷார்த்த சிந்தனைகள்.)
6. அறுபத்திரண்டு உபந்யாஸமாலை. 7. அறுபத்துமூன்று உபந்யாஸமாலை.
8. எம்பெருமானா ரறுபத்திரண்டு. சாரீரகமீமாம்ஸை யறுபத்திரண்டு. பகவத்கீதை யறுபத்திரண்டு
9. சக்ரவர்த்தி திருமகனறுபத்துநான்கு, அறுபத்துநான்கு நன்மொழிகள், அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்.
10. நான்கண்ட நல்லது, திவ்யார்த்ததீபிகைச்சிறப்பு ஆக 10 நூல்கள் விலை ரூ 13

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

P. B. A. புத்தக விளம்பரத்தின் அநுபந்தம்

P. B. A. பதிப்புநூல் தொகுதி 3

1. முகுந்தமாலை உரை
2. ஸ்தோத்ரரத்ன சதுச்லோகிகளின் [உரை
3. ஸ்ரீதேசிகஜயந்தி மலர்.
4. ஐப்பசித்திருமூலமலர்
5. ராமாநுஜதயாபாத்ர சரித்திரம்
6. ஷெ ஸம்ஸ்க்ருத பாஷை நாகரலிபி
7. ஜகதாசார்யஸூக்திஸுதா நிதி
8. விஜயகோபால ஸம்பாஷணை
9. வேதாந்தவாரியரும், அண்ணங்கராரியரும்
10. பத பாட பரித்ராணம். (வேதவிசார பரமான வடமொழி நூல்)

ஆக பப்பத்து நூல்களுங்கொண்ட ஒரு ஸம்புடத்தின் விலை ரூ. 6-75
வைதிக லௌகிக மஹநீயமண்டலி 100 பெரியார்கள் படங்கொண்டது ரூ. 2

P. B. A. நூல் தொகுதி 4 ரூ. 20

1. வரதன் ஸன்னிதி வரலாறு
2. கச்சியத்திகிரிவைபவம்
3. ஸ்ரீமஹாவிஷ்ணு ஸாம்ராஜ்யம்
4. அர்ச்சாவதார வைபவம்.
5. சோபக்ருதாண்டு மார்கழி விருந்து
6. ஸதுபந்யாஸரத்னவளி
7. அத்புதோபந்யாஸமாலை
8. திருவல்லிக்கேணி யுபந்யாஸமாலை
9. ஆழ்வார்களின் அவதாரகாலநிர்ணயம்
10. ஸர்வஜ்ஞலோககுருக்தி ஸர்வஸ்வம்
11. த்ரமிடோபநிஷத்ப்ரபாவ ஸர்வஸ்வம்
12. சதபூஷணீ வஜ்ரகுடாரம்
13. ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதி
14. சிங்கப்பெருமாள் திருவாக்குவெற்றி
15. கண்ணனும் கலியனும்
16. ஸ்வாபதேச பரமார்த்தம்
17. கோதைதமிழ்ச்சுவையமுதம்
18. சிறுஸஞ்சாரச் செய்தி
19. ஸ்ரீரங்கநாத பாதுகாஸமீக்ஷா (அல்லது விமர்சபரீக்ஷா விமர்சனம்)
20. உள்ளுறை பொருள்விளக்கு
21. பெரியாழ்வார் திருமகள்
22. அத்ருஷ்டார்த்த பரமார்த்தம்
23. "பணியவிசைவில்திசைமுகன்"
24. ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரன்
25. எம்பெருமானர் அறுபத்திரண்டு
26. பகவத்கீதை யறுபத்திரண்டு
27. சாரீரகமீமாம்ஸையறுபத்திரண்டு
28. அறுபத்திரண்டு வார்த்தாமாலை (ஸ்ரீபாஷ்யஸாரம்)
29. அறுபத்திரண்டு உபந்யாஸமாலை
30. அறுபத்துமூன்று உபந்யாஸமாலை
31. முப்பத்திரண்டு மொழிமாலை
32. ஸாதுஸாத்விக ஸம்வாதம்
33. மாமுனிவன் மேற்கோள்விளக்கு
34. ஸ்ரீவேங்கடார்ய சதகம் (உரையுடன்)
35. நப்பின்னையவதார ரஹஸ்யம்
36. நரஸிம்ஹாவதாரஹேதுநிர்ணயம்
37. விபவாவதார சோகதத்வ நிரூபணம்

P. B. A. நூல் தொகுதி 5 ரூ. 10

1. தக்ஷிணோத்தர யாத்ராவிசேஷம்
2. மலைநாட்டுத் திருப்பதியாத்திரை
3. மணவாளமாமுனிகளின் வாத்ஸல்ய [விவரணம்
4. சக்கரவர்த்திதிருமகனறுபத்துநான்கு
5. அறுபத்துநான்கு நன்மொழிகள்
6. அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்
7. ஸ்ரீராமாநுஜர் வைபவம்
8. மநோஹர ஸுபாஷிதங்கள் 11 to 17
9. ஸ்ரீஜயந்தியநுபவம்
10. ஸ்ரீஜயந்திவைபவம்
11. கலிவைரிகுருதசகம் (உரையுடன்)
12. ஸ்ரீலோகாசார்யஸ்துதி ,,
13. ஸ்ரீவரவரமுனிவைபவஸ்தோத்ரம் ,,
14. வரவரமுனிதண்டகம் (உரையுடன்)
15. ஸ்ரீரங்கஸ்ரீர் நித்யஸ்ரீः
16. அருளிச்செயல் பாகவதம்
17. டில்லிக் குதூஹலவிழா
18. உபந்யாஸவிம்சதி (மெய்ஞ்ஞான மேன்மை விளக்கம்)
19. திண்டாமை தொலையாமை
20. ஸத்யவாதி ஸமாச்வாஸம்
21. அங்கண்மாஞாலத்தமுது
22. திவ்யப்ரபந்தத்திருநாமமாலை
23. விஷ்ணுகோயில்களும் விசேஷ தர்மபரிபாலனமும்
24. மநோஹரஸுபாஷிதம் 1 to 10
25. வேதபாஷ்ய விமர்சனம் (தமிழுரை)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

P. B, A. நூல் தொகுதி 6 ரூ. 12

1. வைசாகோத்ஸவ உபந்யாஸமாலை
2. சதபூஷணீ வஜ்ரகுடார ஸாரம்
3. சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை (ஸஞ்சிகை)
4. ஸர்வார்த்த ஸித்தாஞ்சனம்
5. அங்கண்மாஞாலத்தமுது
6. ஆழ்வார்களுகந்த இராமன்
7. ஆழ்வார்கள் புகழ்ந்த கண்ணன்
8 உபந்யாஸ ஸப்தகம்
9. பதின்மர் பாடும் பெருமாள்
10. தேசிகஸஹஸ்ர நாமவிமர்சம்
11. மதுரோபந்யாஸமாலை
12. சார்வரி மார்கழி நிகழ்ச்சிகள்
13. எழுபது நல்வார்த்தைத்திரள்
14. தென்கலை வடகலைத் தெளிவு
15. விசிஷ்டாத்வைத ஸர்வஸ்வம்
16. பெரும்பூதூர் மாமுனிவன் பெருமை
17. பெரும்பூதூர்மாமுனிக்குப்பின்னானுள்
18. எம்பெருமானாரும் திருக்கோட்டியூரும்
19. மார்கழிநீராட்டமும் எம்பெருமானாரும்
20. ஆச்சான்பிள்ளையஷ்டாத்யாயீ
21. உபந்யாஸவிம்சதி
22. மெய்ஞ்ஞான மேன்மை விளக்கம்
23. தேசிகப்ரபந்தவுரையாராய்ச்சி
24. ராமசாமி ராமாயணம்
25. ஸ்ரீசைலேசமந்த்ர ப்ரபாவம்
26. நான்கண்ட நல்லது
27. "யுஷ்மத்பாதாரவிந்தயுகளம்"
28. ஸம்வாத ஸம்மார்ஜனீ
29. தத்வப்ரகாச பராமர்சம்
30. தத்வதீபிகா விமர்சம்
31. பாதுகாஸஹஸ்ர விசாரம்
32. ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷணம்

P. B. A. நூல் தொகுதி 7 ரூ. 8

1. சிரோமணி சேகரம்
2. தேசிகஸூக்தி பரிமளம்
3. பாத்ரதத்வ பரமார்த்தம்
4. ராமா பாத்ர வர்ணமாலை
5. ஸ்ரீராமாயண ஸாரம்
6. உபதேச ரஸாயந ஸாரம்
7. சாஸ்த்ரஜ்ஞான சாண பலகம்
8. சேட்லூர் தாண்டவ கண்டனம்
9. பேரருளாளன் பெருமை விளக்கம்
10. தேசிக ப்ரபாவ பரிஷ்காரம்
11. சேட்லூரர் மாய மயக்கம் (மன்னிப்புக் கடிதங்கொண்டது)
12. தடஸ்த பரிசீலனம்
13. அதிர்ஷ்டார்த்த ஸர்வஸ்வம்
14. ரத்ன பரீக்ஷா
15. அர்ச்சாவதாரத் திருமண்காப்பு
16. ஸ்மஸ்யமாந ஸௌஷ்டவ விமர்சம்
17. எம்பெருமானார் தரிசனம்
18. பிள்ளை லோகாசார்யர் பெருமை
19. ஆராய்ச்சி மணிமாலை
20. வைராக்ய பஞ்சக உரை
21. தேசிக ஸூக்தி ஜயத்வஜமாலா
22. பரதுக்க துக்கித்வ பரமார்த்தரக்ஷா
23. சேட்லூரார் நூலாராய்ச்சி
24. ஸத்ஸம்ப்ரதாயப்படி அண்ணா [வைபவம்

P. B. A. நூல் தொகுதி 8 ரூ. 7

1. வாதி பீகர விஜயம்
2. பிழைதிருத்தப் பேரின்பம்
3. பாத்ரதத்வ விஜயத்வஜம்
4. தேவப்பெருமாள் ஸன்னிதி விமர்சம் (சம்பந்த முதலியாருக்கு)
5. அத்யமேச்லோகார்த்த நூல்கள்
6. பாதுகாஸஹஸ்ராவதார தத்வம்
7. வ்யாமோஹ ப்ரசமௌஷதம் (பாதுகாஸஹஸ்ராவதாரதத்வப்ரதிஷ்டா)
8. தேசிகாவதார வர்ஷவிமர்சம்
9. ஸ்தோத்ர வ்யாக்யான சோதனம்
10. சேஷாவதாரச் சிறப்பு
11. வாக்பஞ்ஞ நினைவுமலர்
12. ரத்ந பரீக்ஷா
13. ஸ்ரீமத் வேங்கடநாதகுரு ஸ்தோத்ரம்
14. ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யம்
15. ஸ்ரீமத் க்ருஷ்ணகுருஸ்துதி
16. கூரத்தாழ்வான் வைபவம்
17. ராமாநுஜபதபாத்ரதத்வம்
18. சதுர்விம்சதிப்ரச்னமாலை
19. வித்வத்விபோதினீ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

P. B. A. நூல் தொகுதி 9 ரூ. 9

1. ஆசார்யஹ்ருதயபாட பரிஷ்காரம் (மூலத்துடன்)
2. அழகியமணவாளன் (ஸஞ்சிகைகள்)
3. அவிவேகநிராஸகல்பவல்லீ
4. "தன்னடியார் திறத்தகத்து"
5. டீடதாதோக்தி கண்டனம்
6. ஈட்டு விமர்ச பராமர்சம்
7. நஞ்சீயரும் ஸ்ரீஸூக்த பாஷ்யமும்
8. ப்ரபந்தரக்ஷையின் பரிசீலனம்
9. ஸித்த்ஸாமீமாம்ஸா
10. ப்ராமாணிகத்வபரீக்ஷா
11. ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதி
12. ஆழ்வார்களின் உபகார விவரணம்
13. ஆசாரியர்களின் உபகார விவரணம்
14. நூற்றெட்டுத் திருப்பதி யட்டவணை
15. பேயாழ்வார் திருமஞ்சனக்கட்டியம்
16. பக்தன் மூவிதமாராய்ச்சி
17. ஐப்பசித் திருமூலநன்னாட்சிறப்பு
18. கம்பர் கண்ட கண்டீரவம்
19. கண்டீரவாவதார காரணநிருபணம்
20. துர்க்கந்த தூரீகரணம்
21. திருப்பாவைஜீயர்
22. சாடுச்லோக சதகம் (உரையுடன்)
23. ஸ்ரீராமாநுஜஜயந்திமலர்

P. B. A. நூல் தொகுதி 10 ரூ. 10

1. ஒருமிதுனமே உத்தேச்யம்
2. உபந்யாஸரத்னமாலை
3. உபந்யாஸத்ரயம் (1) கோதாஸ்துதி யநுபவம் (2) பக்ஷீச சாகாநிலய: (3) அஞ்சிலே யொன்றுபெற்றான்
4. மடவித்வத் விபூஷணம்
5. ஸ்ரீஸுந்தரபாஹு ஸுப்ரபாதம்
6. ஸ்ரீஸுந்தரபாஹு ஸ்துதி
7. ஸ்ரீஸுந்தரபாஹுமங்களாசாஸனம்
8. ஸ்ரீஸுந்தரபாஹு ப்ரபத்தி
9. ஸ்ரீவைஷ்ணவ ஸௌபாக்யம்
10. மணவாளமாமுனிகள் வைபவம்
11. காஞ்சீ ஹஸ்திகிரி வைபவம் (க்ரந்தலிபி வடமொழி)
12. பவித்ரயாத்ரா பரமானந்தம்
13. க்ஷேத்ரதீர்த்த யாத்திரை விளக்கு
14. உபந்யாஸரத்னமாலை மலர் 7
    (1) நாச்சியார் திருமொழியநுபவம்
    (2) சரணாகதிஸாம்ராஜ்யம்
15. உபந்யாஸரத்னமாலை மலர் 8
16. உபந்யாஸரத்னமாலை—(1) ஸ்ரீராமாயண ரஸ்ய ரஹஸ்யம் (2) பகவத்கீதா ஸர்வஸ்வம் (3) அழுகையும் அழச்செய்கையும் (4) தொழுகையும் தொழச்செய்கையும்

P. B. A. நூல் தொகுதி 11 ரூ. 6

1 ஸ்ரீரங்கச் செய்திகள்
2. உத்யான ஸம்வாதம்
3. நற்போதுபோக்கு
4. அத்புதசக்தி
5. விசேஷார்த்த ரத்ன நிதி
6. மெய்ப்பொருள் வாழ்ச்சி
7. வித்வத்வைதிகபூஷணம்
8. தத்வஹிதோபதேசம்
9. மாமுனிவனருள்விளக்கு
10. விசிஷ்டாத்வைத தரிசனம்
11. ஆசார்ய சிஷ்ய ஸம்வாத கண்டனம்
1 . பூர்வாசார்யப்ரபாவம் (மலர் 2)

P. B. A. நூல் தொகுதி 12 தேசிகஸ்தோத்ரவுரைகள் ரூ. 6

1. ஸ்ரீஹயக்ரீவ ஸ்தோத்ரம்
2. வேதாந்த தேசிக மங்களம்
3. பரமார்த்த ஸ்துதி
4. வைராக்ய பஞ்சகம்
5. கோதாஸ்துதி
6. ந்யாஸதசகம்
7. பகவத்த்யான ஸோபாநம்
8. தசாவதாரஸ்தோத்ரம்
9. ஸ்ரீமத் வேங்கடநாதார்ய வைபவம்
10. ஸ்ரீயதோக்தகாரிஸ்தோத்ரம்
11. அஷ்டபுஜாஷ்டகம்
12. காமாஸிகாஷ்டகம்
13. சரணாகதி தீபிகா
14. வரதராஜபஞ்சாசத்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ உ.வே. P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி யெழுதிய வியாக்கியான நூல்கள், சுதந்திர நூல்கள், உபந்யாஸ வியாஸங்கள், பரமத நிரஸன நூல்கள் ஆகிய இவை எல்லாவற்றுக்கும் அகராதிவரிசையில் அமைந்த அட்டவணை. முன்னம் விவரித்த தொகுதிகளில் சேர்க்கப்பட்ட நூல்களுக்கு மட்டும் (தொ. 1) (தொ. 2) என்று அடையாளம்.

ஸ்ரீ என்னு மெழுத்தை முதலிற்கொண்ட நூல்கள் முன்னம் குறிக்கப்படுகின்றன

1 ஸ்ரீக்ருஷ்ண குணாநுபவம்
2 ஸ்ரீகுணரத்நகோச வியாக்கியானம்
3 ஸ்ரீசைலேசதயாபாத்ரவியாக்கியானம்
4 ஸ்ரீசைலேச மந்த்ரப்ரபாவம் (தொ-6)
5 ஸ்ரீஜயந்தியநுபவம் (தொ-5)
6 ஸ்ரீஜயந்தி வைபவம் (தொ-5)
7 ஸ்ரீபாகவத விமர்சம்
8 ஸ்ரீபாஷ்யஸாரஸர்வஸ்வம்
9 ஸ்ரீபெரும்பூதூர் தீர்ப்பின் ஸாரம்
10 ஸ்ரீமட ஸௌபாக்யம்
11 ஸ்ரீக்ருஷ்ணகுருஸ்துதி-உரை (தொ-8)
12 ஸ்ரீமத் கலிவைரி தசகம்-உரையுடன்
13 ஸ்ரீமத்வரவரமுனிதண்டக உரை (5)
14 ஸ்ரீமத்வரவரமுனிஸ்தோத்ரம்உரை (5)
15 ஸ்ரீமத்வேங்கடநாத குருஸ்தோத்ரம்-உரையுடன் (தொ-7)
16 ஸ்ரீமஹாவிஷ்ணு நக்ஷத்ரம்
17 ஸ்ரீமஹாவிஷ்ணு ஸாம்ராஜ்யம் (தொ-4)
18 ஸ்ரீரங்ககத்ய வியாக்கியானம்
19 ஸ்ரீரங்கச் செய்திகள் (தொ-11)
20 ஸ்ரீரங்கதேவஸ்தானவ்யவஹாரஸாரம்
21 ஸ்ரீரங்கராஜஸ்தவவியாக்கியானம் 1, 2
22 ஸ்ரீரங்கஸ்ரீ:
23 ஸ்ரீரங்கஸ்ரீர் நித்யஸ்ரீ: (தொ-5)
24 ஸ்ரீரங்கநாத பாதுகாஸமீக்ஷா (தொ-4)
25 ஸ்ரீரங்கநாதஸ்தோத்ர வியாக்கியானம்
26 ஸ்ரீராம குணாநுபவம் (தொ-11)
27 ஸ்ரீராமஸீதாவயோ நிர்ணயம்
28 ஸ்ரீராமாநுஜகுணாநுபவம் (தொ-11)
29 ஸ்ரீராமாநுஜ பூஷணம்
30 ஸ்ரீராமாநுஜன்-மாதப் பத்ரிகை
31 ஸ்ரீராமாநுஜ ஜயந்திமலர் (தொ-9)
32 ஸ்ரீராமாயண-அபூர்வ விஷயம்
33 ஸ்ரீராமாயண கௌஸ்துபம்
34 ஸ்ரீராமாயண ரஸ்யரஹஸ்யம் (தொ-10)
35 ஸ்ரீராமாயணஸாரம் (தொ-7)
36 ஸ்ரீராமாயண ஸௌரபம் (பூர்வாசார்ய வியாக்கியானத் திரட்டு) (தொ-1)
37 ஸ்ரீலோகாசார்யஸ்துதி-உரையுடன் (5)
38 ஸ்ரீவசநபூஷணதாத்பர்யஸாரம் (தொ-1)
* ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமவுரை
39 ஸ்ரீவேங்கடார்ய சதகம்-உரை (தொ-4)
40 ஸ்ரீவேங்கடேசஸ்தோத்ரவுரை
41 ஸ்ரீவைகுண்டகத்ய வியாக்கியானம்
42 ஸ்ரீவைகுண்டஸ்தவ வியாக்கியானம்
43 ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதி (தொ. 9)
44 ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்
45 ஸ்ரீவைஷ்ணவ விருந்து
46 ஸ்ரீவைஷ்ணவ ஸமாராதனம்
47 ஸ்ரீவைஷ்ணவஸௌபாக்யம்-உரை
* ஸ்ரீஸ்தவவியாக்யானம் [(தொ. 10)

அ

48 அகிலபுவன ச்லோக உரை (தொ. 11)
49 அங்கண்மாஞாலத்தமுது (தொ. 5)
50 அசித்ஸம்பந்தம் அநாதியா
51 அஞ்சிலேயொன்றுபெற்றான் (10)
52 அண்ணங்கராசாரிய சபதம்
53 அண்ணாவைபவம் (தொ. 7)
54 அண்ணாவின் காலநிர்ணயம்
55 அத்திகிரி வைபவம்
56 அத்தியூரர்கழலிணைக்கீழ் அன்பு
57 அத்புதசக்தி (தொ. 11)
58 அத்புதபக்தகதை
59 அத்புதோபந்யாஸமாலை (தொ.4)
60 அத்யாபக ஹஸ்தபூஷணம்
61 அதிமாநுஷஸ்தவ உரை
62 அத்யமேச்லோகவிளக்கம் (தொ. 8)
63 அத்யமேபத்யார்த்த ஸஞ்சிகைகள்
64 "அத்ராஸ்தி பஹு அஸாமஞ்ஜஸ்யம்"
65 அத்ருஷ்டார்த்த தத்வம்
66 அத்ருஷ்டார்த்த பரமார்த்தம் (தொ. 4)
67 அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வம் (தொ. 7)
68 அந்யாபதேசஸ்வாபதேச சப்தார்த்தம்
69 அபத்தங்களில் ஒரு ஆச்சரியம்
70 அபயப்ரதானத்தில் அபயப்ரதானம்
71 அபயப்ரதானஸாரஸாரம் (தொ. 11)
72 அபூர்வராமாயணம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

73 அமலனாதிபிரான் தீபிகை
74 அமுதமொழிகள்
75 அர்ச்சாவதாரத்திருமண்காப்பு (தொ. 7)
76 அர்ச்சாவதாரவைபவம் (தொ. 4)
77 அருளாளனருளிச்செயல்வ்யாமோஹம்
78 அருளிச்செயல் பாகவதம் (தொ. 5)
79 அவிவேக நிராஸ கல்பவல்லீ (தொ. 9)
80 அழகியசிங்கர் ப்ரபாவம்
81 அழகுநிகழ்ந்திடுமைப்பசியில் திருமூலம் (தொ. 9)
82 அழகிய மணவாளன் ஸஞ்சிகைகள் ,,
83 அழுகையும்அழச்செய்கையும் (10)
84 அஷ்டபுஜாஷ்டக வுரை (தொ. 12)
85 அஷ்டவித புஷ்பங்கள்
86 அஸங்கதோக்தி நிரஸனம்
87 அஸூயா பரமௌஷதம்
88 அஹோபிலாசார்யருடைய அழுகை
89 அறுகாலசிறுவண்டு விசேஷார்த்தம்
90 அறுபத்திரண்டுபந்யாஸமாலை (தொ-4)
91 அறுபத்திரண்டு வார்த்தாமாலை ,,
92 அறுபத்து நான்கு உபந்யாஸமாலை ,,
93 அறுபத்துநான்கு நல்வார்த்தைகள் (5)
94 அறுபத்துநான்கு நன்மொழிகள் (5)
95 அறுபத்துமூன்று உபந்யாஸமாலை (4)
96 அறையர்களின் அதிசயங்கள்
97 அன்னம், சாதகம், சகோரம் அன்றில் [அசுணமா

ஆ

98 ஆச்சான்பிள்ளையஷ்டாத்யாயீ (தொ-6)
99 ஆச்சான்பிள்ளை விமர்சம் ,,
100 ஆசாரமும் பக்தியும்
101 ஆசாரியர்களின் மஹோபகாரம் (9)
102 ஆசார்ய சம்பு அபிநந்தனஸாரம்
103 ஆசார்ய சம்பு விஷய ஸங்க்ரஹம்
104 ஆசார்ய சிஷ்ய ஸம்வாத கண்டனம் (தொ-11)
105 ஆசார்யஹ்ருதயப் பதவுரை (தொ. 1)
106 ஆசார்யஹ்ருதயப்பெருமையநுபவம்
107 ஆசார்யஹ்ருதய பாடபரிஷ்காரம் (மூலத்துடன்) (தொ. 9)
108 ஆசார்யஹ்ருதயஸாரம்
109 ஆண்டாள் திருநாமமும் பெண்ணைப் பெயரும்
110 ஆண்டாளும் திருமங்கை மன்னனும்
111 ஆத்மகுணங்களின் ஆவச்யகதை
112 ஆதிசங்கராசார்யோக்தி பரிசீலனம்
113 ஆர்த்திப்ரபந்த உரை
114 ஆராய்ச்சிமணிமாலை (தொ. 7)
115 ஆராவமுதனுபவம்
116 ஆழ்வார்கள் உகந்த ராமன் (தொ. 6)
117 ஆழ்வார்கள் புகழ்ந்த கண்ணன் ,,
118 ஆழ்வார்கள் வைபவம்
119 ஆழ்வார்களின் மஹோபகாரம் (9)
120 ஆழ்வார்களின்காலஆராய்ச்சிமறுப்பு
121 ஆழ்வார்களின் அவதாரகால நிர்ணயம் (தொ. 4)
122 ஆழ்வான் தனியன் பெருமை
123 ஆழ்வான் ஸ்ரீஸூக்தி பரிஷ்காரம்
124 ஆழ்வானுடைய உக்தி சாதுர்யம்
125 ஆழ்வானுடைய நல்வார்த்தை
126 ஆளவந்தார் ஸ்தோத்ரவ்யாக்யானம்
127 ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி பரிஷ்காரம்

இ

128 இரண்டாந் திருவந்தாதி தீபிகை
129 இராமாநுசநூற்றந்தாதி தீபிகை
130 இராமாநுசநூற்றந்தாதி விமர்சம்
131 இராவணனுடைய ஆசாரியர்கள்
132 இருமுப்பொழுதேத்தும் தொண்டர்
133 "இஹஸந்தோ நவாஸந்தி"
134 இளையபெருமாள் அஸத்யவாதியா?

ஈ

135 ஈட்டுவிமர்ச பராமர்சம் (தொ. 9)
136 ஈடும் மடமும் (தொ. 6)
137 ஈச்வரன்சாஸ்த்ரைகவேத்யன்
138 ஈஹதாது விமர்சனம்

உ

139 உகாரார்த்தரஹஸ்ய விவரணம்
140 உத்தமக்ராமஜோபதேசம்
141 உத்தமாதிகாரிலக்ஷணம்
142 உத்தரதினசர்யா வ்யாக்யானம்
143 உத்தர ஸ்ரீராமாயணவிசாரம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

144 உத்யானசிக்ஷா
145 உத்யானஸம்வாதம் (தொ. 11)
146 உபதேசரத்தினமாலையுரை
147 உபதேசரஸாயனஸாரம் (தொ. 7)
148 உபதேசவிம்சதி
149 உபந்யாஸத்ரயம் (தொ. 10)
150 உபந்யாஸரத்னமாலை (தொ. 10)
151 உபந்யாஸவிம்சதி (தொ. 6)
152 உபந்யாஸஸப்தகம் (தொ. 6)
153 "உபமாகாளிதாஸஸ்ய"
154 உபயவேதாந்த மணித்திரள்
155 உபயஸம்பாஷணை
156 உபாயாந்தரஸ்வரூபசோதனம்
157 உள்ளுறை பொருள்விளக்கு (தொ. 4)

எ

158 "எத்திறமுரலினோடு"
159 எந்தவடிவு சிறந்தது?
160 எம்பெருமான் அல்பஸந்துஷ்டன்
161 எம்பெருமானளிக்கும் ஸர்வஸ்வதா [னம்
162 எம்பெருமானிருக்குமிடங்கள்
163 எம்பெருமானெங்குள்ளான்?
164 எம்பெருமானார்தரிசனம் (தொ. 7)
165 எம்பெருமானார் வைபவம்
166 எம்பெருமானாரநுபத்திரண்டு (தொ. 4)
167 எம்பெருமானாருடைய திவ்யஸூக்தி
168 எம்பெருமானாரும் எம்பாரும்
169 எம்பெருமானாரும் கண்ணபிரானும்
170 எம்பெருமானாரும்காளியமர்த்தனமும்
171 எம்பெருமானாரும் திருக்கோட்டியூரும் (தொ. 6)
172 எம்பெருமானாரும் திவ்யப்ரபந்தமும்
173 எம்பெருமானாரும் யாதவப்ரகாசரும்
* எழுபது நல்வார்த்தை (தொ. 6)

ஏ

174 ஏதத்துக்தம் பவதியின் பொருள்
175 ஏகாதசிச்ராத்தவிசாரம்
176 "ஏதுக்கிதுவென் இதுவென்னிது வென்னோ"
177 "ஏழைகடுக்காய்"

ஐ

178 ஐகமத்யரஸம்
179 ஐதிஹ்யங்களுக்கு ஆதரவு காட்டுதல் (1)
180 ஐதிஹ்யசிர்வாஹரத்னமாலை
181 ஐந்துசிஷ்யர்களின் இதிஹாஸம்
182 ஐப்பசித் திருமூலமலர் (தொ. 3)
183 ஐப்பசித்திருமூல நன்னாட்சிறப்பு (9)

ஒ

184 ஒரு மிதுனமே உத்தேச்யம் (தொ. 10)

ஓ

185 ஓடும்புள்ளேறியாராய்ச்சி

க

186 கஜேந்திரமோக்ஷம்
187 கடகமன்று, கற்கடகம்
188 "கடல்வண்ணன்" விசேஷார்த்தம்
189 கண்டீரவாவதார காரண நிரூபணம் (தொ. 9)
190 கண்ணனும் திருப்பாணாழ்வாரும்
191 கண்ணனும் ராதையும்
192 கண்ணனும் விதுரனும்
193 கண்ணபிரானனுபவம்
194 கண்ணபிரானும் குசேலமுனிவரும்
195 கண்ணிநுண் சிறுத்தாம்பு தீபிகை
196 கப்யாஸச்ருதி விசாரம்
197 கம்பர் கண்ட கண்டீரவம் (தொ. 9)
198 கம்பர் கூறிய விசேஷம்
199 கம்பரின்பக் கவித்திரட்டு
200 கர்மானுஷ்டான விமர்சம்
201 கருப்பேந்திரப்பொருள் (தொ. 11)
202 கருமாறிபாய்ந்தும் (தொ. 11)
203 கலியனும் கண்ணனும் (தொ. 4)
204 கலிவைரி குருதசகம் உரை (தொ. 5)
205 களிறு விசேஷார்த்தம் (தொ. 4)
206 காகம்பெற்ற பேறு
207 காசினிவேந்தா, காய்சின வேந்தா?
208 காமாஸிகாஷ்டகவுரை
209 காஞ்சீ ஹஸ்திகிரிவைபவம் (தொ.10)
210 காதல், அன்பு, வேட்கை. அவா
211 "கிரீட மகுட சூடாவதம்ஸம்"
212 கிருஷ்ணாவதாரகதாரஹஸ்யம்
213 கிளி விசேஷார்த்தம் (தொ. 4)
214 கீதாசாஸ்த்ர நுட்பங்கள்
215 கீதாபாஷ்யமும், தாத்பர்யசந்த்ரிகை
216 கீதாஸப்தமாத்யாயரஸாநுபவம் [யும்
217 கீதோபந்யாஸ ஸாரம்
218 குயில் விசேஷார்த்தம்
219 குருகு,கொக்கு,நாரைவிசேஷார்த் (4)
220 கூரத்தாழ்வானும், சோழராஜனும்
221 கூரத்தாழ்வான் வைபவம் (தொ. 8)
222 கூனியின் கதை (மந்தரை)
223 கேள்விகளின் கருத்து
224 கைவல்ய மோக்ஷ தத்வம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

225 "கோங்கலரும்பொழில்" விளக்கம்
226 கோதாஸ்துதி யின நுபவம் (தொ. 10)
* கோதாஸ்துதியுரை (தொ. 12)
227 கோதைதமிழ்ச்சுவையமுதம் (தொ. 1)
228 கோதைபோலுமாராய்ச்சி
229 கோவிந்த ராஜீய விமர்சம்
230 க்ஷேத்ரதீர்த்தயாத்ரை விளக்கு (10)

ச

231 சக்ரவர்த்தித் திருமகன நுபத்து நான்கு (தொ. 5)
232 "சக்ரவர்த்தியைப்போலேஇழக்கைக் குறுப்பு"
233 சங்கத் தமிழ்மாலை முப்பது
234 சததூஷணீ பூஷணஸாரம்
235 சதபூஷணீ வஜ்ர குடாரம் (தொ. 4)
236 ஷை வஜ்ரகுடார ஸாரம் (6)
237 சதுச்ச்லோகி உரை
238 சதுர்விம்சதிப்ரச்நமாலை
239 சரமச்லோகார்த்த ஸாரம்
240 சரணாகதி கத்ய உரை
241 சரணாகதி தீபிகை வியாக்கியானம் (12
242 சரணாகதி ஸாம்ராஜ்யம் (தொ. 10)
243 சாடுச்லோக சதகம் உரை (தொ. 9)
244 சார்வரிமார்கழித்திங்கள் நிகழ்ச்சி (6)
245 சாரீரகமீமாம்ஸைய நுபத்திரண்டு (4)
246 சாஸ்த்ரஜ்ஞானசாணபலகம் (தொ. 7)
247 சாஸ்த்ராநுபந்த ஸமீக்ஷா
248 சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை (தொ. 6)
249 சாஸ்த்ரார்த்த தத்வ ஸமந்வயம்
* சிகித்ஸாமீமாம்ஸா (தொ. 9)
250 சிங்கப்பெருமாள் திருவாக்கு வெற்றி 6 மலர்கள் (தொ. 4)
251 "சிரீவர மங்கலம் வரகுணமங்கை"
252 சிரோமணி சிரோபூஷா (தொ. 7)
253 சிரோமணிசேகரம் (தொ. 7)
254 சிறு ஸஞ்சாரச் செய்தி (தொ. 4)
255 "சீதக்கடலுள்ளமுதன்ன தேவகி"
256 செந்தமிழாராய்ச்சி
257 செல்வநம்பி
258 சேட்லூர் தாண்டவ கண்டனம் (தொ. 7)
259 சேட்லூரர் நூலாராய்ச்சிகள் ,,
260 சேட்லூரர் மாயமயக்கம் ,,
261 சேதனலாபம் ஈச்வரனுக்கே
262 சேஷாவதாரச் சிறப்பு (தொ. 8)
263 சோபக்ருதாண்டு மார்கழிவிருந்து (தொ. 4)

ஜ

264 "ஜகதப்யுதயைகமூலம்" (தொ. 3)
265 ஜகதாசார்யஸூக்திஸுதாநிதி

ஞ

266 ஞானபக்திகளின் மருமம்
267 ஞானஸார உரை

ட

268 டாக்டர் ராசமாணிக்கனாராராய்ச்சி யாராய்தல்
269 டில்லிக் குதூகல விழா (தொ. 5)
270 டீடதாதோக்தி கண்டனம் (தொ. 9)

த

271 தக்ஷிணோத்தர யாத்திரை விசேஷம் (தொ. 5)
272 தசரதரின் ஸத்ய வாதித்வம்
273 தசாவதார ஸ்தோத்ர உரை (தொ. 12
274 தடஸ்த பரிசீலனம் (தொ. 7)
275 தத்வத்ரய ஸாரம்
276 தத்வதீபிகா விமர்சம் (தொ. 6)
277 தத்வ நிவேதனம்
278 தத்வ ப்ரகாச பராமர்சம் (தொ. 6)
279 தத்வ ஹிதோபதேசம் (தொ. 11)
280 தத்வார்த்த பூஷணம்
281 தமிழ்மொழி மரியாதை
282 தவறான ஐதிஹ்யமொன்று
283 தற்கால ஸ்திதி
284 தற்புகழ்ச்சியின் தகுதியும்தகாமையும்
285 தாடபஞ்சக வ்யாக்யானம்
286 தானேயெழுதிய தன்சரிதை
287 திருக்கச்சிநம்பி ஆறுவார்த்தை
288 திருச்சந்தவிருத்தம் தீபிகை
289 திருக்குடந்தையெம்பெருமான்
290 திருக்குறுந்தாண்டகம் தீபிகை
291 திருநறையூர்ச் செய்திவிசாரம்
292 திருநாராயணபுர வ்யவஹாரஸாரம்
293 திருநெடுந்தாண்டகம் தீபிகை
294 திருப்பல்லாண்டு தீபிகை
295 திருப்பள்ளியெழுச்சி தீபிகை
296 திருப்பாவைஜீயர்
297 திருப்பாவையும் திருக்கோயிலும்
298 திருப்பாவைதீபிகை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

299 திருப்பாவை ராமாயணம்
300 திருப்பாவை விசேஷார்த்தஉரை
301 திருப்பாவை ஸ்வாபதேச உரை
302 திருப்புட்குழிஸ்வாமிவைபவ பரிஷ்
303 ஷ்டி பரிசிஷ்டம் [காரம்
304 திருமண்காப்பு விசாரம்
305 திருமந்த்ர ப்ரபாவம்
306 திருமந்த்ரார்த்தஸாரம்
307 திருமாலை தீபிகை
308 திருவல்லிக்கேணி யுபந்யாஸமாலை (தொ. 4)
309 திருவள்ளூரின் பழைய நிலைமை
310 திருவாசிரியம் தீபிகை
311 திருவாய்மொழி நூற்றந்தாதி உரை
312 திருவாய்மொழியாயிரம் தீபிகை
313 திருவாய்மொழியின் தசாவதாரம்
314 திருவிருத்தம் தீபிகை
315 திருவெழுகூற்றிருக்கை தீபிகை
316 திருவேங்கடசித்ர கவித்வம்
317 திருவேங்கடமாலையுரை
318 திவ்யப்ரபந்தக் கண்ணாடி
319 திவ்யதேசத் திருநாமத் திருத்தங்கள்
320 திவ்யப்ரபந்தத்திருநாமமாலை (தொ.5)
321 திவ்யப்ரபந்த பகவத்கதாம்ருதம்
322 திவ்யப்ரபந்த ஸாரத்திரட்டு
323 திவ்யப்ரபந்த ஸாராம்ருதம்
324 திவ்யஸூரிசரித காலநிர்ணயம்
325 "தீக்குறளை சென்றோதோம்"
326 தீண்டாமை தொலையாமை (தொ. 5)
327 தீபப்ரகாசனும் தேசிகனும்
828 தீபிகைச் சிறப்பு
329 துர்க்கந்த தூரீகரணம்
330 துவரைப்பிரான் திருவருள்
331 " துஷ்யந்திச ரமந்திச "
332 துறை வேறிடுவித்தது
333 தெய்வச்செயலின் சிறப்பு
334 தன்னடியார் திறந்தகத்து (தொ. 9)
335 தென்னாசார்ய ஸம்ப்ரதாயம்
336 தென்கலை வடகலைத்தெளிவு (தொ. 6)
337 தென்மொழியும் வடமொழியும்
338 தேசிக சரித்திர பரிசீலனம்
339 தேசிக ப்ரபந்தவுரையாராய்ச்சி (தொ. 6)
340 தேசிகப்ரபாவ பரிஷ்காரம் (தொ. 7)
341 தேசிக மங்கள உரை (தொ. 12)
342 தேசிக ஸஹஸ்ரநாம விமர்சனம் அல்லது, விமர்சபரீக்ஷாவிமர்சனம் (தொ. 6)
343 தேசிகஸூக்தி ஜயத்வஜமாலா
344 தேசிகஸூக்தி பரிமளம் (தொ. 7)
345 தேசிகஸூக்தி ஸித்தாஞ்சனம்
346 தேசிகஸ்வரூப நிரூபணம்
347 தேசிக ஹ்ருதயம்
348 தேசிகனும் பெரியவாச்சான் பிள்ளையும்
349 தேசிகாவதாரவர்ஷவிமர்சம் (தொ. 8)
350 தேவப்பெருமாள் ஸந்நிதி விமர்சனம் (தொ. 8)
351 தேவப்பெருமாள் ஸுப்ரபாதம்
352 தேவராஜ மங்கள உரை
353 தேவாலயங்களும் ஸத்ஸம்ப்ரதாயமும்
354 தைவ வண்டு விசேஷார்த்தம்
355 தொழுகையும் தொழச்செய்கையும் (தொ. 10)
356 த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வம் (தொ. 4)
357 த்ராவிடாத்ரேய தர்சனவிமர்சம்
358 த்வம்மேஹம்மே வ்யாக்யானம் (தொ. 7)
359 த்வயார்த்தஸாரம்
360 த்ரௌபதியும் கஜேந்திராழ்வானும்
361 த்ரௌபதி ரக்ஷணம்

ந

362 நஞ்சீயர் வைபவம் (தொ. 11)
363 நமஸ்கார தத்வம்
364 நமஸ்கார தத்வ விஜயத்வஜம்
365 நம் ஆசார்யர்கள்
366 நம்பி பிம்பியென்று விசாரம்
367 நம்பிள்ளை வைபவம் (தொ. 11)
368 நம்பெருமாள் திருமஞ்சனமும், பட்டர் ஈடுபாடும்
369 நம்மாழ்வார் தூது
370 நம்மாழ்வார் பெருமை
271 நப்பின்னையவதார ரஹஸ்யம் (தொ.4)
372 நப்பின்னை நிஷ்கர்ஷம்
373 நரஸிம்ஹாவதாரஹேதுநிர்ணயம் (தொ. 4)
374 நரஸிம்ஹாஷ்டக வ்யாக்கியானம்
375 நர்மதா ஸமுத்ர ஸம்வாதம்
376 நல்வார்த்தை நானூறு
377 நற்பொருள் விளக்கம்
378 நற்போது போக்கு (தொ-11)
379 " நன்று செய்தாரென்பர் போலும் "
380 நாச்சியார் திருமொழி தீபிகை
381 நாச்சியார் திருமொழி யனுபவம் (தொ- 10)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

382 நாஸ்திகனும் ஆஸ்திகனுனது
383 நான் கண்ட நல்லது (தொ. 6)
384 நான்கு தூதுகளின் மருமம்
385 நான்முகன் திருவந்தாதி தீபிகை
386 நிகண்டுகளின் கோளாறுகள்
287 நிகம பரிமளத்தின் உண்மை
388 நிதிவிசேஷார்த்தம்
389 நித்யவிபூதி லீலாவிபூதிஸம்வாதங்கள்
390 நித்யாநுஷ்டான பத்ததி
391 நித்தியாநுஸந்தான உரை
392 நீர்வண்ணன் விஷேஷார்த்தம் (தொ. 4)
393 நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி உரை
394 நைச்சியாநு ஸந்தானம் (தொ. 1)
395 நோற்ற நோன்பின் விசேஷார்த்தம்
396 ந்யாஸதசக வ்யாக்யானம் (தொ. 12)
397 ந்ருஸிம்ஹப்ரியா நிரீக்ஷணம் (தொ. 6)
398 ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்ஜீவினி
399 ந்ருஸிம்ஹப்ரியா ஸமீக்ஷா

ப

400 பகவத்கடாக்ஷ வீக்ஷண மகிமை
401 பகவத் கீதார்த்தவிசேஷம் (தொ. 11)
402 பகவத் கீதா ஸர்வஸ்வம் (தொ-10)
403 பகவத் கீதை யறுபத்திரண்டு (தொ. 4)
404 பகவத் குணதர்ப்பணப் பெருமை
405 பகவத் குண விசேஷ விமர்சம் (11)
406 பகவத் க்ருதஜ்ஞதை
407 பகவத் குணாநுபவம் (தொ. 11)
408 பகவத் க்ருபாநிர்ஹேதுகத்வம்
409 பகவச் சாஸ்த்ர தத்வம்
410 பகவத்த்யான ஸோபான உரை (12)
411 பக்தன் மூவிதழாராய்ச்சி (தொ. 9)
412 பக்தாம்ருதம்
413 பக்திக் கதைகள்
414 பக்தியின் தத்துவம்
415 "பங்கீச சாகா நிலயঃ" (தொ. 10)
416 "பங்க திக்தஸ்து ஜடிலঃ"
417 பஞ்சகால பராயணர்கள்
418 பஞ்சாம்ருதம்
419 பட்டர் வைபவம் (தொ. 11)
420 பணத்திற்குப் பங்காளிகள்
421 "பணிய விசைவில் திசைமுகன்" (4)
422 பதின்மர் பாடும் பெருமாள் (தொ. 6)
423 பன்னிரு திங்களனுபவம் (தொ. 2)
* ப்ராமாணிகத்வபரீக்ஷா (தொ. 9)
424 பரதுக்க துக்கித்வ பரமார்த்த ரக்ஷா (தொ. 7)
425 பரதனும் குகனும்
426 பரந்த ரஹஸ்யம் பிறந்த ரஹஸ்யம்
427 பரமார்த்தஸ்துதி வியாக்கியானம் (தொ. 12)
428 பரஸ்வரூப நிருபணம்
429 பவித்ரயாத்ராபரமானந்தம் (தொ. 10)
430 பறவை விசேஷார்த்தம்
431 பாகவத சேஷத்வ மஹிமை
432 பாதுகா ஸஹஸ்ராவதாரதத்துவம் (8)
433 பாதுகா ஸஹஸ்ராவதாரவிசாரம் (6)
434 பாதுகா ஸஹஸ்ர வுரையாராய்ச்சி
335 பாத்ரதத்வ ஜயத்வஜம் (தொ. 8)
436 பாத்ரதத்வ பரமார்த்தம் (தொ. 7)
437 பாரிஜாதாபஹரணம்
438 பார்த்தஸாரதியின் ப்ரபாவம்
* பிரபந்தரக்ஷா பரிசீலனம் (தொ. 9)
439 பிராட்டி புருஷகாராவச்யகதை
440 பிராட்டி விசார சோதனம்
441 பிழைதிருத்தப் பேரின்பம் (தொ. 8)
442 புண்டரீக சப்தார்த்த நிஷ்கர்ஷம்
443 புரட்டாசித் திருவோணமலர்
444 புனர்வஸு பரீக்ஷணம்
445 "பூயிஷ்டாம்தேநமஉக்திம்" (தொ. 11)
446 பூர்வாசார்ய வைபவம் (தொ. 2)
447 பூர்வ ஜன்மசர்யா
448 பூதிகந்தி புஷ்பப்ரஞ்சனம் (To D.T.T)
449 பூதிகந்தி புஷ்பப்ரஹார ஸப்ததி „
450 பெரியதிருமடல் தீபிகை
451 பெரிய திருமொழியாயிரம் தீபிகை
452 பெரிய திருவந்தாதி தீபிகை
453 பெரியவாச்சான்பிள்ளை வைபவம் (தொ. 11)
454 பெரியவாச்சான்பிள்ளைஸ்தோத்திரம்
455 பெரியாழ்வாருடைய அனுபவம்
456 பெரியாழ்வார் திருமகள் (தொ. 4)
457 பெரியாழ்வாரும் பரகாலனும்
458 பெரியாழ்வார் திருமொழி தீபிகை
459 பெருமாள்திருமொழி தீபிகை
460 "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னா னான் வாழியே!" (தொ. 6)
461 பெரும்பூதூர் மாமுனிவன் பெருமையனுபவம் (தொ. 6)
462 பேயாழ்வார் திருமஞ்சனக் கட்டியம் (தொ. 9)
463 பேருளாளன் பாடல் விளக்கம்
464 பேருளாளன் பெருமை விளக்கம் (தொ. 7)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

465 பேரருளாளன் ஸஞ்சிகைகள்
466 பொன்னப்பன் விசேஷார்த்தம் (4)
467 பொறுமையின் பெருமை
468 பொய்கையாழ்வார் அஷ்டோத்தரம்
469 ப்ரணவாதிகார தத்துவம்
470 ப்ரபத்தியின் அபராதகோடிப்ரவேசம்
471 ப்ரபத்த்யநுபாயத்வம்
472 ப்ரபந்தஸாரதத்வப்ரதிஷ்டா
473 ப்ரபந்தஸார தத்வஸாரம்
474 ப்ரபந்தஸாராஸ்வாதினீ ப்ரஹரணம்
475 ப்ரமேயஸார உரை
476 "ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்குகப்பானுமவனே"
477 ப்ரமாணத் திரட்டாராய்ச்சி
478 ப்ராம்மண ப்ரசம்ஸை

ம

479 மகாபலி வாமன ஸம்வாதம்
480 மடவித்வத் விபூஷணம் (தொ. 10)
481 மடாதிபதிகளும் தர்மபரிபாலனமும்
482 மணவாளமாமுனிகளின் திருமஞ்சனக்கட்டியம் (தொ. 3)
483 மணவாளமாமுனிகளின் வாத்ஸல்ய விவரணம் (தொ. 5)
484 மணவாளமாமுனிகளின் வைபவம் (தொ. 10)
485 மணிவண்ணன் விசேஷார்த்தம் (4)
486 "மண்ணுளென்னைப் பெற்றால்"
487 மதியும் விதியும்
488 மதிரேக்ஷணார்த்த விளக்கம்
489 மதுரோக்தி மஞ்சரி
490 மதுரோபந்யாஸமாலே (தொ. 6)
491 மந்த்ரஜப விமர்சம்
492 மநோஹர ஸுபாஷிதங்கள் (தொ.5)
493 மயில் விசேஷார்த்தம் (தொ. 4)
494 "மரணாந்தாநி வைராணி"
495 மலைநாட்டுத் திருப்பதி யாத்திரை (தொ.5)
496 மாமுனிவனருள்விளக்கு (தொ. 11)
497 மாமுனிவன் மேற்கோள் விளக்கு (4)
498 மாரீசனுக்கு மதிப்பு
499 மார்கழிநீராட்டும் எம்பெருமானும் (தொ. 6)
500 முகில்வண்ணன் பொருள் (தொ. 4)
501 முகுந்தமாலை உரை (தொ. 3)
502 "முசுகுவாலெடுத்தாற்போலே" (11)
503 முப்பத்திரண்டு மொழிமாலை (தொ. 4)
504 முமுக்ஷுப்படியின் ஏற்றம்
505 முமுக்ஷுப்படி ஸாரார்த்த தீபிகை (1)
506 மு. ராகவையங்காருடைய மருள்
507 மூன்றாம் திருவந்தாதி தீபிகை
508 மூன்று திவ்வியங்களின் அனுபவம்
509 மெய்ப்பொருள் வாழ்ச்சி (தொ. 11)
510 மெய்ஞ்ஞான மேன்மை விளக்கு (6)
511 மேகமும் ஆசாரியர்களும்
512 மேகவிடுதூதின் விசேஷார்த்தம்
513 மேகவிசேஷார்த்தம்

ய

514 யசோதையும் கோபிகளும் கண்ணனும்
515 யதிராஜவிம்சதி வ்யாக்யானம்
516 யதிராஜஸப்ததியும் எம்பெருமானாரும்
517 "யுஷ்மத்பாதாரவிந்தயுகளம்" (தொ.6)
518 யுஷ்மத்ஸூக்தி ஸௌரபம்

ர

519 ரக்ஷாவிமர்சசிக்ஷா
520 ரங்கராமாநுஜஸ்வாமியினுக்திவிமர்சம்
521 "ரங்காஸ்தானே ரஸிகமஹிதே" (7)
522 ரத்னபரீக்ஷா
523 ரஸிக புதரஞ்சனம்
524 ராசமாணிக்கனார்க்கு நல்கும் நற்றெளிவு
525 ராமசாமி ராமாயணம் (தொ. 6)
526 ராமபத்ரபத்ர ப்ரணசனம் (தொ. 11)
527 ராமானந்திய வைணவர்கள்
528 ராமாநுஜதயாபாத்ர தத்வம் (தொ. 8)
529 ராமாநுஜதயாபாத்ர பத்ய சரித்ரம்
530 ராமாநுஜரின் டில்லி யாத்திரை விமர்சம்
531 ராமாநுஜ ஜயந்தி மலர்
532 ராமாயணாதிகளில் பாடப்பிறழ்வுகள்
* ரோதஸீதத்வபோதிநீ
533 ரோமச மகரிஷியின் சரிதை

ல

534 லோகாசார்ய ஸித்தாந்த தத்வம்
535 லோகவ்யவஹாரசிக்ஷா
* லோகாசார்யர் பெருமை (தொ. 7)

வ

536 வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம் (தொ. 11)
537 வடநாட்டினரின் பாதசாரம்
538 வடமொழி மர்யாதை
539 வம்பவிழ்கோதை தத்துவம்
540 வர்ணமாலை (தொ. 7)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

541 வரதராஜஸ்தவவிபுல வ்யாக்யானம்
* வரதன் ஸன்னிதி வரலாறு (தொ. 4)
542 வ்ருஷப விசேஷார்த்தம் (,, 4)
543 வ்யாமோஹப்ரச மௌஷதம் (தொ.8)
544 வாக்யஜ்ஞமலர் (தொ. 8)
545 வாத்ஸல்யார்த்த நிரூபணம்
546 வாத்ஸல்யார்த்த விவரணம்
547 வாத்ஸல்யார்த்த விஜயத்வஜம்
548 வாதி பீகர விஜயம் (தொ. 8)
549 வானமாமலைச் செய்தி
550 வானமாமலை வித்வத்விபோதினி (8)
551 வால்மீகிராமாயண வசனம் 1 to 7 கா.
552 விசதவாக்சிகாமணி வாக்வைசத்யம்
553 விசிஷ்டாத்வைததர்சனம் (தொ. 11)
554 விசிஷ்டாத்வைத ஸர்வஸ்வம் (6)
555 விசேஷார்த்த ரத்னநிதி (தொ. 11)
556 வித்வத் விபூஷணி
557 வித்வத் விநோதினி (தொ. 8)
558 வித்வத் வைதிக பூஷணம் (தொ. 11)
559 விதவா வபன விசாரம்
560 "விதுராங்காநி புபுஜே"
561 விஷ்ணு கோயில்களும் விசேஷ தர்ம பரிபாலனமும் (தொ. 5)
562 விஹித விஷய நிவ்ருத்தி விமர்சம்
563 வேங்கடார்ய சதகம் உரையுடன்
564 வேதங்களின் அநந்தத்வம்
565 வேதபாஷ்ய விமர்சம் (தொ. 5)
566 வேதாந்ததத்வமருமம்
567 வேதாந்ததேசிக சரித்ரம்
568 வேதாந்தார்ய வைபவம்
569 வைகாசித் திருவிசாகமலர்
570 வைசாகோத்ஸவஉபந்யாஸமாலை (6)
571 வைசாகோத்ஸவ வாஹனக்ரமங்கள்
572 வைதிக லௌகிக மஹநீயமண்டலி
573 வைதிகவித்வதாபரணம்
574 வைராக்ய பஞ்சக வ்யாக்யானம் (7)
575 வைஷ்ணவமஹாநிதி

ஸ

576 ஸக்ருத்ப்ரணம ஸாதுத்வம்
577 ஸத்புருஷ ஸமாராதனம்
578 ஸத்யநாராயணஸ்த்ரம்
579 ஸத்யநாராயணஸ்த்ர ஸத்யப்ரதாபம்
580 ஸத்யவாதி ஸமாச்வாஸம் (தொ. 5)
581 ஸத்ஸம்ப்ரதாய பரிசுத்தி
582 ஸத்ஸம்ப்ரதாய பரித்ராணம்
583 ஸத்ஸம்ப்ரதாய பாஸ்கரன் (5) (4)
584 ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதி (தொ. 4)
585 ஸதாசார்ய ஸூக்திரக்ஷா
586 ஸ்தோத்ரவ்யாக்யானசோதனம் (தொ. 8)
587 ஸதுபந்யாஸரத்னமாலை
588 ஸதுபந்யாஸ ரத்னாவளி (தொ. 4)
589 ஸப்தகாதை உரை
590 ஸம்ப்ரதாய ஸங்கேத விவரணம்
591 ஸம்பவாம்யாத்மமாயயாம்
592 ஸம்வாத ஸம்மார்ஜனீ (தொ. 6)
593 ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சம் (உரையுடன்) (தொ. 7)
594 ச்ருதப்ரகாசிகையும் தத்வடீகையும்
595 ஸர்வஜ்ஞலோககுருஸூக்தி ஸர்வஸ்வம் (தொ. 4)
596 ஸர்வார்த்தஸித்தாஞ்சனம் (தொ. 6)
597 ஸ்வகதஸ்வீகார பரகதஸ்வீகாரங்கள்
598 ஸ்வாபதேசார்த்த ஆவச்யகதை
599 ஸ்வாபதேச பரமார்த்தம் (தொ. 4)
600 ஸ்வாபதேசபத ஸௌஷ்டவம்
601 ஸாதுஸாத்விக ஸம்வாதம் (தொ. 4)
602 ஸாமிநாதய்யர் பாராட்டு
603 ஸாவித்திரி சரித்திரம்
604 ஸுதர்சன சதக வ்யாக்யானம்
605 ஸுந்தரபாஹு ப்ரபத்தி (தொ. 10)
606 ஸுந்தரபாஹு மங்களாசாஸனம் (தொ. 10)
607 ஸுந்தரபாஹு ஸுப்ரபாதம் (10)
608 ஸுந்தரபாஹுஸ்துதி (தொ.10)
609 ஸுந்தரபாஹுஸ்தவ வ்யாக்யானம்
610 ஸூக்திஜயத்வஜமாலா (தொ. 7)
611 ஸௌபரியின் கதைச்சுருக்கம்
612 ஸௌஜந்யஸௌரபம்

ஹ

613 ஹம்ஸவிசேஷார்த்தம் (தொ. 4)
614 ஹயக்ரீவ ஸ்தோத்ரவுரை (தொ. 12)
615 ஹாஸ்யக்கதைகள்

இந்த அகராதி தொகுத்தது ஸ்ரீ ஸ்வாமியின் தௌஹித்ரிகளான M. ஜெயமணியும், T. A. ப்ரேமாவதியும்.

1—10—64.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விசேஷ விஜ்ஞாபனம் P. B. A.

அடியேனுடைய பரமாப்தர்களில் ஸ்ரீ உ. வே. எஸ். ஸத்திய மூர்த்தி (*Gwoliar*) ஐயங்காரும், திருவல்லிக்கேணியில் வாழும் *Dr. V. V.* ராமாநுஜம் *M. A. Phd* ஐயங்காரும் சில மாதங்களுக்கு முன் அடியேனிடத்துள்ள பரமப் ரீதியினால் ஆங்கில வியாஸங்களிரண் டெழுதியனுப்பி ஸ்ரீ ராமாநுஜனில் வெளியிட நியமித்திருந்தார்கள். சென்ற ஏப்ரல் மாதத்தில் நெ. 184-ல் அவைபிரண்டும் வெளியிடப் பட்டன. ஆனால் அவை பூர்த்தியாக ஆங்கிலத்திலிருந்தபடியால் ஆங்கில மறியாத பல வாசகர்கள் தமிழ் மொழி பெயர்ப்பும் வெளியிட வேணு மென்று வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். இது நிற்க.

சென்ற சித்திரை மாதத்தில் ஸ்வாமி யெம்பெருமானாருத்ஸவம் ஸேவிக்க ஸ்ரீபெரும்பூதூர் விடை கொண்டிருந்தபோது ஒரு ஆங்கில கடிதம் மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. அதற்கு யாரைப் பிரார்த் திக்கலாமென்று ஆலோசித் திருக்கையில் அவ்விடத்து ஸம்ஸ்க்ருத காலேஜில் ப்ரொபஸராயிருந்து விச்ராந்தராயிருக்கின்ற பிரஹ்மஸ்ரீ T. ராமசந்திரசாஸ்திரியார் அவர்களைப் பிரார்த்திக்கலாமென்று சிலர் கூறினர். அவர் பிரபல ஸம்ஸ்க்ருத பண்டிதர் என்பதை மட்டும் நான் அறிந்திருந்தேனேயன்றி, அவர்க்கு ஆங்கில பாண்டித்ய முண்டென்று அறிந்திலேன். ஆனாலும் ஆப்தர்களின் வார்த்தைக்கிணங்கி அந்த சாஸ்திரியாரைப் பிரார்த்தித்தேன். அவர் பத்தே நிமிஷத்தில் வெகு அற்புதமாக மொழி பெயர்த்துக் கொடுத்தார். உண்மையில் வெகு வியப்படைந்தேன். மேலே ப்ரஸ்தாவித்த இரண்டு ஆங்கில வியாஸங் களையும் அவரைக் கொண்டே மொழி பெயர்ப்பிக்க வேணுமென்று ஆசை தோன்றி அவர்க்குத் தெரிவித்தேன். இரண்டு மூன்று நாட்களிலேயே கோரிக்கையை நிறைவேற்றிவிட்டார். அவற்றுள் ஒரு வியாஸத்தின் மொழி பெயர்ப்பே இப்போது வெளியிடப்படுகிறது. இதில் அடியேனைப் பற்றின புகழுரைகள் மலிந்திருந்தாலும் ஸ்ரீ சாஸ்த்ரிகளின் மொழி பெயர்ப்பு நடை உண்மையில் என்னை ப்பரவசமாக்கியதனால் இந்த நடை யழகை நண்பர்கள் அநுபவிக்கட்டுமென்றே இது வெளியிடப்படுகிறது.

இதற்கு மூலமான ஆங்கில வியாஸம் ஸ்ரீ ராமாநுஜனில் வெளி வந்ததுமன்றி, சென்னையிலிருந்து வெளிவரும் *Free India* என்னும் *Weekly Journal*லும் வெளி வந்துள்ளது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ. உப. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின்

வாழ்க்கையும், ஸாதனைகளும்

(டாக்டர் வி. வி. ராமானுஜம், எம்.ஏ., எம்.எஸ்ஸி, பிஎச்.டி.

எழுதிய ஆங்கில வ்யாஸத்தின் தமிழாக்கம்)

ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி மஹாவித்வான் ஸ்ரீ. உப. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி, மதாபிமானிகள் அனைவரும் நன்கறிந்த உத்தம புருஷர்; அவரே ஒரு ஸ்தாபனம். ஆதலால் அவரைப்பற்றி அறிமுகம் செய்விக்கத் தேவையில்லை. ஆத்ம விசாரபரர்களின் நடுவில் நிகரில்லாத முக்யஸ்தானம் வஹிக்கும் இமயம் போன்ற வ்யக்தியாவர். தெலுங்கு ஹிந்தி இரண்டு பாஷையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பதுடன் வடமொழி தென்மொழி இரண்டிலுமுள்ள சாஸ்திரங்கள் காவ்ய நாடகங்கள் முதலிய எல்லா நூல்களிலும் ஆழ்ந்த ஞானமுடைய மஹாவித்வான். ஏனையோரிடம் எளிதில் காணமுடியாத அபூர்வ சக்திகள் ஒன்று கூடிய ஓர் அதிசய வ்யக்தி. வேதத்தை நன்கு அத்யயனம் செய்து அதன் பாஷ்யங்களிலும் கருத்துக்களிலும் ஆராய்ச்சி பூர்வமான ஞானத்தைப் பெற்றவர். திவ்யப்ரபந்தங்களை ஓதியுணர்ந்தவர். பூர்வாசார்ய ரஹஸ்ய கிரந்தங்களிலும் வ்யாக்யானங்களிலும் கரை கண்டவர். வெண்கல நாதத்துடன் இனிமையாக ப்ரவஹிக்கும் கேட்போரனைவரையும் வசீகரிக்கும் திறமை மிக்க சொற்பொழிவாளர். சிறிதும் பெரிதுமான சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றிய வன்மை மிக்க எழுத்தாளர். வேதங்கள் திவ்விய ப்ரபந்தங்கள் ஓதும் கோஷ்டியில் கலந்து திவ்விய தேசங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பரந்தாமனை பக்தியுடன் தொழுபவர். ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தைப் பரப்புவதற்காகவும், ஆங்காங்குள்ள திவ்ய க்ஷேத்ரஸேவைக்காகவும் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை அனைத்திந்தியாவிலும் யாத்திரை செய்தவர். இந்த மஹானுடைய காலத்தில் வாழ நாம் பேரதிர்ஷ்டம் செய்துள்ளோம். வருங்காலத்தில் ஸ்வாமியினுடைய சிறந்த கிரந்தங்களால் பயன் பெறுவோர் பலர். அவருடன்கூட இருந்து, அமிருத தாரையென ப்ரவஹிக்கும், கேட்போர் உளங்குளிர ஆனந்தபாஷ்பம் பெருக செவிமடுக்கும், ஸ்வபாவ மதுரமான இன்னிசையை யொத்து கூடார்த்தங்களைத் தெளிவுபடுத்தும் காலக்ஷேபங்களைக் கேட்கும் நல்லதிர்ஷ்டம் பெற்றவர்கள் நாம்.

ஸ்ரீராமானுஜரால் எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்ட சிஷ்யர் ஸ்ரீ முடும்பைநம்பி. அஷ்டாதசரஹஸ்யங்களை யருளிச் செய்த ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் முடும்பை நம்பி வம்சத்தி லவதரித்தவர். இதே வம்சத்தில், பிரசித்திபெற்ற ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸ்வாமியும் பிள்ளைலோகாசார்யரின் சிறிய தகப்பனுருக்குப் பேரனாக அவதாரம் செய்தார். ஸ்ரீ மணவாள மாமுனிகளால் நியமிக்கப்பட்ட அஷ்டதிக்கஜங்களில் ஸ்ரீ அண்ணன் ஸ்வாமியும் ஒருவர். வேதாந்த தேசிகரின் திருக்குமாரரான நைனாராசாரியரிடம் ஸ்ரீ அண்ணன் ஸ்வாமி இளமையில் காஞ்சியில் கல்வி பயின்றார்.

அண்ணன் ஸ்வாமி வம்சத்தில் ஏராளமான வித்வான்களும் ஆசார்யர்களும் பிறந்துள்ளனர். சென்ற நூற்றாண்டையலங்கரித்த ஜகத் ப்ரஸித்த வித்வான் புஷ்கரம் அநந்தாசார்ய ஸ்வாமியும், அவருடைய பேரனான ஸ்ரீஜகத்குரு காதி அநந்தாசார்ய ஸ்வாமியும் ஸ்மரிக்கத் தக்கவர்கள். இந்த இரு மஹாபுருஷர்களும் ராமானுஜஸித்தாந்தத்தை ப்ரசாரம் செய்யப் பல தடவை வடநாட்டில் யாத்திரை செய்து லக்ஷக்கணக்கான சிஷ்யர்களைச் சம்பாதித்தனர், இதே வம்சத்தில் நம் ஸ்வாமி 1889-ம் ஆண்டு விக்ருதி ஸூ பங்குனி மாதம் விசாகா நக்ஷத்ரத்தில் ஸ்ரீ ப்ர. ப. அண்ணாரங்காசார்யர் ஸ்வாமியின் திருப் புதல்வராக ஜனித்தார். மஹாவித்வான் ஸ்ரீ அண்ணாரங்காசார்யார் ஸ்வாமி காஞ்சீ ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தில் ப்ரதான பண்டிதராகப் பணியாற்றினார். அவருடைய ஒரே புதல்வரான நம் ஸ்வாமிக்கு 14 வயது நடக்கும்போது தம்முடைய 43 வது வயதில் திருநாட்டை யலங்கரித்தார். இந்த பதினான்கு வயது நிரம்பாத குறுகிய காலத்திலேயே ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிர

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

காயத்தில் திளைத்த ஆஸ்திகராயும் ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தி நிரம்பினவராயு மாகும்படி தம்
புதல்வனுக்கு வித்யை புகட்டினார். பிறகு ஜகத்குரு ஸ்ரீ காதி அனந்தாசார்யார் ஸ்வாமி,
கர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா, வேதாந்த சாஸ்திரங்களை அப்யாஸம் செய்வித்தார். தவிர
காஞ்சி ஸ்ரீ இளங்காடு ரங்காசாரியார் ஸ்வாமி, இளையவில்லி ஸ்ரீராமானுஜாசாரியார் ஸ்வாமி,
மத்வவித்வான்களான ஸ்ரீராமசந்த்ராசார், ஸ்ரீ வித்யாசார் முதலான வித்வான்களிடத்திலும்
ஸ்வாமி சாஸ்த்ராப்யாஸம் செய்திருக்கிறார்.

ஸ்வாமி ஜனிப்பதற்கு முன்பே ஸ்வாமியின் மாதாமஹர் ஸன்யாஸம் பெற்று ஷஷ்டி
ஜீயர் ஸ்வாமி என்ற பெயருடன் அழகிய மணவாள ஜீயர் பீடத்தை அலங்கரித்திருந்தார்.
ஜீயர் ஸ்வாமி தமிழிலும் நல்ல புலமை வாய்ந்தவர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய விஷயங்களை
நன்கு கற்றுணர்ந்தவர். நமது ஸ்வாமி கல்விகற்று முன்னேறுவதைக் காண்பதில் ஜீயர்
ஸ்வாமி சிரத்தை கொண்டிருந்தார். தாமும் சிறப்பாகக் கற்பித்தார். சிறந்த தமிழறிஞரான
ஸ்ரீ வை. மு. சடகோபராமானுஜாசாரியார் சிலமாதங்கள் காஞ்சீபுரத்தில் தங்கியிருந்த
போது அவரிடமும் நம் ஸ்வாமி தென்மொழி யாப்பிலக்கணம் பயின்றார்.

ஸ்வாமி இளைஞராயிருக்கும்போது தென் தேசத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் நடுவே
'ஜீயர் பேரன்' என்ற திருநாமத்துடன் அனைவருடைய அபிமானத்திற்கும் ஆதரவிற்கும்
பாத்திரமாயிருந்தார். வாசகர்கள் களிப்படையும்படி வாலிபப் பருவத்திலேயே அந்தக் காலத்
தில் பிரசாரத்திலிருந்த ஸம்ஸ்கிருத பத்திரிகைகளில் கத்ய—பத்யரூபமான லேகனங்கள்
வெளியிட்டுள்ளா .

இருபத்திரண்டு வயதிற்குள் ஸ்வாமி தனது வித்யாப்யாஸத்தைப் பூர்த்தி செய்தார்
அந்த ஸமயத்தில் யஜுர் வேதத்தை அத்யயனம் செய்து பாஷ்யத்துடன் கற்றுணர ஆவல்
கொண்டார். இதற்காக ஸ்ரீ உ, வே. மாம்பள்ளம் தி. வி. ஸுதர்சனாசாரியார் ஸ்வாமி காஞ்சி
புரம் எழுந்தருளி அத்யாபனம் செய்விக்கும்படி பிரார்த்தித்துக் கொள்ளப்பட்டார். தாராள
மனது படைத்த தார்மிக சிரேஷ்டர்களுடைய உதவியைக் கொண்டு 1913-ம் ஆண்டில் "வேத
வேதாந்த வைஜயந்தி" என்ற பாடசாலை துவக்கப்பட்டு ஸ்ரீ ஸுதர்சனாசார்ய ஸ்வாமியிடம்
ஸ்ரீ ஸ்வாமி முதலாக பல வித்யார்த்திகள் அத்யயனம் செய்ய ஆரம்பித்தனர்.

இங்ஙனம் துவக்கப்பட்ட பாடசாலையானது முதலில் ஜீயர் ஸ்வாமி மடத்திலும், பிறகு
ஒவ்வொரு கட்டிடமாக சில இடங்களுக்குமாறி தற்போதுள்ள இடத்தில் ரூ. 20,000 செலவில்
ஹாஸ்டலுள்பட விஸ்தாரமாகக் கட்டப்பட்ட சொந்தக் கட்டிடத்தில் ஸ்ரீ ஸ்வாமியினால் ஸ்தா
பிக்கப்பட்டது. தற்காலம் ஸ்ரீ ஸ்வாமியைப் பிரின்ஸிபாலாகக் கொண்ட இப் பாடசாலை,
சென்னை வாஸிகளான பிரபல வ்யாபாரிகளடங்கிய ஒரு கமிட்டியின் நிர்வாஹத்தில்
செம்மையாக நடந்து வருகிறது.

வேதங்களைப் பயின்று, அதனுள் செய்த ஆராய்ச்சியின் பயனாக ஸ்வாமி வைதிக
வ்யாகரணக்ரந்தமான 'வேதாத்யயன ஸர்வஸ்வம்' முதலான நூல்களை எழுதி வெளியிட்டார்.
காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய ஸ்ரீகபிஸ்தலம் தேசிகாசாரியார் ஸ்வாமி, ஸ்ரீலக்ஷ்மீபுரம்
ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி போன்ற மஹாவித்வான்களால் சிறந்த நூல்களென்று இவை
கொண்டாடப்பட்டன.

ஸ்வாமி 16 வயது பாலனாக இருக்கும்போதே ஸ்ரீகாதி ஸ்வாமி தலைமையில், ஹைதரா
பாத் வஸிதாராம்பாக் கோயிலில் 'எம்பெருமானார் வைபவம்' என்ற விஷயத்தை முதல்
முதலாக உபன்யஸித்து 'தாம் ஒரு நல்ல உபன்யாஸகர்" என்று அரங்கேற்றினார்: அது
முதற் கொண்டு நம் தாய்நாடெங்கிலும், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, தமிழ் தெலுங்கு மொழி
களில் எண்ணிறந்த உபன்யாஸங்களைச் செய்து வருகிறார். இருபது வயது நிரம்பு முன்னரே,
வைஷ்ணவ சமுதாயத்தில் வெகு காலமாக காலக்ஷேபம் சாதித்துவந்த ஸ்ரீ உ. வே. திருக்
கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமிகளின் நட்பையும் பெற்று சென்னையில் அவ்வப்போது

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உபன்யாஸங்கள் செய்து வந்தார். ஸ்வாமி சென்னையிலேயே நிரந்தர வாஸம் செய்த தொண்டு
உபந்யாஸங்கள் செய்வதன் மூலமும், கரந்த லேகனங்கள் வாயிலினாலும் நமது ஸம்ப்ரதாயத்
திற்குத் தொண்டு செய்யவேண்டும் என்று பலர் பிரார்த்தித்ததுண்டு. 1931-ம் ஆண்டு
வரை இது நிறைவேற வில்லை. அவ்வாண்டில் 'பகவத் கதாப்ரஸங்க ஸபா' என்னும் கால
க்ஷேபஸபை நிறுவப்பட்டு வாராவாரம் ஸ்வாமி காலக்ஷேபத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.
ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிப்பதற்கென்றே சமீபத்தில் அட்வகேட் ஸ்ரீ V. ராஜகோபாலாச்
சாரியார் போன்ற பிரமுகர்களால் 'ஸத் காலக்ஷேப ஸபா' என்ற ஸபை நிறுவப்பட்டது.
இந்த ஸபைகளின் ஆதரவில் ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீ பாகவதம், ஸ்ரீ பிள்ளை லோகாசார்ய
ருடைய ரஹஸ்ய க்ரந்தங்கள், பகவத்விஷயம் முதலியவை 3000க்கு அதிகமான காலக்ஷேபங்
களில் ஸ்வாமியால் உபந்யஸிக்கப்பட்டுள்ளன. திருமலை ஸ்ரீநிவாஸன் பெருமையைக் கூறும்
'உலக முண்ட பெருவாயா' என்ற திருவாய்மொழியின் சாற்று முறையைத் திருமலையிலும்,
ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமான் புகழ் பற்றிய "கங்குலும் பகலும்" என்ற திருவாய்மொழி
சாற்று முறையை ஸ்ரீரங்கத்திலும் சிறப்பாக நடத்தியது குறிப்பிடத்தக்கவை. இந்த சந்தர்ப்
பங்களில் சென்னை ஸதஸ்யர்கள் அனைவரும் திரண்டெழுந்து திருமலைக்கும், திருவரங்கத்திற்
கும் சென்றிருந்தனர். 1931 டிசம்பர் மாதத்தில் B. K. P. சபாவின் ஆதரவில் திருப்
பாவை காலக்ஷேபம் தொடங்கப்பட்டு பிரதிவருஷமும் நமது ஸ்வாமியால் தவறாமல் நடத்தப்
பட்டுவருகிறது. சென்ற சில ஆண்டுகளாக, மார்கழித் திங்களில், ஜ்யார்ஜ் டவுனிலுள்ள S. K.
சபையில் ஒருதரமும், இரண்டு ஆண்டுகள் தியாகராய நகரிலும், ஓராண்டு மட்டும் திருவல்லிக்
கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கோயிலில் ஒரு தரமுமாக இரண்டு வேளை காலக்ஷேபம்
சாதித்துவந்தார். ஸ்வாமியின் உபன்யாசத்தை ஆர்வத்துடன் கேட்க ஏராளமான கூட்டம்
சேருவது யாவருமறிந்ததே. எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும், ஸரளமாய் பிரவ
ஹிக்கும் தன் சொற்பொழிவின் மூலம் அவையினரை மந்திரத்தால் கட்டுண்டவர்போல்
ஸ்வாமி செய்து விடுவார். அவர் உபன்யாசத்தைக் கேட்பதே ஒரு விருந்து. அதைக் கேட்
டனுபவிக்கும்படி அவர் காலத்தில் வாழும் நாமனைவரும் பேரதிர்ஷ்டம் வாய்ந்தவர்கள்.
இந்த மாபெரும் தேசத்தில் எல்லா மூலை முடுக்குகளிலும் ஸ்வாமி எண்ணிறந்த உபன்யா
சங்கள் ஆற்றியுள்ளார்.

அவருடைய பத்தொன்பதாவது வயதில், திவ்யப்ரபந்தங்களையும் ரஹஸ்ய க்ரந்தங்களை
யும் வ்யாக்யானத்துடன் அத்யயனம் செய்து முடித்தவுடன், திருவல்லிக்கேணி வேதவேதாந்த
வர்த்தினி ஆண்டு விழாவின்போது "சூர்க்கத்திப் பரீக்ஷை" கொடுக்க முன் வந்தார் இந்த
க்ரந்தங்களில் கேட்கப்படும் எல்லா வினாக்களுக்கும் விடை கொடுக்கவும், தவறினால் கூரிய
கத்தியினால் தன் நாக்கை அறுத்துக் கொள்ளவு முடன்பட்டு முன் வந்தார். இந்தப் பரீக்ஷை
யில் பூர்ண வெற்றியைப் பெற்று சிரிய சன்மானத்தைப் பெற்றார். ஸ்வாமியின் திறமைக்
கேற்ற கேள்விகளைத் தேர்ந்தெடுப்பதே பரீக்ஷகர்களுக்குக் கடினமாகிவிட்டது. இதே சமயத்
தில்தான் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ கூரத்தாழ்வான், இவர்களருளிச் செய்த ஸ்தோத்ரங்களுக்கு
வ்யாக்யானங்களை எழுதினார். இந்த சந்தர்ப்பத்திலேயே நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கு
உரை யெழுதவும் ஆரம்பம் செய்தார். இவை "திவ்யார்த்த தீபிகை" என்ற சஞ்சிகை மூல
மாக வெளிவந்தன. முதன்முதலாக 'ராமானுஜ நூற்றந்தாதி' வ்யாக்யானம் வெளிவந்து,
பிறகு ஸ்வாமி நாற்பதாவது வயதை எட்டிப் பிடிக்கு முன்பே—அதாவது 1930 ஆண்டிற்
குள்ளாகவே திருவாய்மொழி தவிர்த்த ஏனைய பிரபந்த வ்யாக்யானங்களும் முற்றுப்பெற்றன.
திருவாய் மொழி வ்யாக்யானம் பிறகு எழுதி வெளி வந்தது. இவை அனைத்தும் பலமுறை
பதிப்பிக்கப்பட்டுவிட்டன. ஆசாரியர்களுடைய கடினமான மணிப்ரவாள நடையில் அமைந்
துள்ள வ்யாக்யானங்களை ஆதாரமாய்க் கொண்டு, எளிய தமிழ் நடையிலெழுதப்பட்ட இந்த
ஸரளவ்யாக்யானங்களில், பூர்வாசார்யர்களுடைய திவ்யக்ரந்தங்களிலும் ஸ்ரீஸூக்திகளிலும்
புதைந்து கிடக்கும் பொக்கிஷங்களை வெளிக் கொணர்ந்து நம்மை அனுக்ரஹித்ததன் மூலம்
நாம் அனைவரும் கடன்பட்டவராகின்றோம். விசிஷ்டாத் வைத வேதாந்தத்தை ப்ரசாரம்
செய்யும் மஹநீயர்களில் நாயகஸ்தானத்தில் விளங்கும் நமது ஸ்வாமி, தன் சிறுவயதிலிருந்தே
உபயவேதாந்தப்ரசாரகராக விளங்கி வருகிறார். வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள்,
ஸ்ரீ ராமாயணம், மஹாபாரதம், திவ்யப்ரபந்தங்கள் ரஹஸ்ய க்ரந்தங்கள் அனைத்தும் திரண்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

டோருருக் கொண்டவரே நமது ஸ்வாமி என (*Late*) ஸ்ரீ எஸ். கோபால ஸ்வாமி அய்யங்கார் கூறுவதுண்டு. அவரது அபிப்ராயப்படி, "பேசுவது ஸ்வாமி ஒருவரல்ல, ஒரு தொகுப்பு; சர்ச்சை செய்து முடிவிற்கு வந்தபலதரப்பட்ட ஆராய்ச்சிகள் அடங்கிய கருத்தரங்கு. நமது முன்னோரான அறிவாளிகளின் வாரிசு. வ்யாசர், பராசரர், வால்மீகி போன்ற மகர்ஷிகள் ஸ்வாமி மூலம் பேசுகின்றனர். நம்மாழ்வார் தொடங்கிய ஆழ்வார்கள் தமது திவ்யதர்சனத்தை ஸ்வாமி வாயிலால் வெளியிடுகின்றனர். நமது மதிப்பிற்குரிய ஸ்ரீமன் நாதமுனிகள், ஆளவந்தார், இராமானுஜர், பட்டர், நம்பிள்ளை, லோகாசார்யர் வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள் என்ற ஆசார்யர்கள் ஒன்று கூடியே தங்கள் ஞானம்ருதத்தை ஸ்வாமி திருவாக்கின் வழியே வழங்குகின்றனர். உத்ஸாஹாவஹமான அனுபவத்தாலனுக்ரஹிக்கப்படுகிறோம். இந்த அபூர்வ வ்யக்தி வாழ்க, வாழ்க. க்ஷணநேரத்திலேயே ஸ்வாமி திரையை விலக்கி நம்மை ஸ்வர்க்கலோகத்தின் மேற் பரப்பிற்கு சரீரத்துடனழைத்துச் சென்று தனது தெவிட்டாத அம்ருததாராவர்ஷத்தின் ஆனந்தத்தில் திளைக்க வைக்கிறார். இரண்டு மணி நேரமாயினும் சரி நான்கு மணி நேரமாயினும் சரி, ஹிமாலயத்திலிருந்து ப்ரவஹிக்கும் பாகீரதியைப் போன்ற ஒரே சீரான ஜாஜ்வல்யமானதன் உபன்யாசத்தில் இங்கு ஒரு அபூர்வ மேற்கோளும், அங்கு ஒரு பாசுரமும், அடுத்த க்ஷணம் வயிறு குலுங்கச் சிரிக்கும்படியான நகைச்சுவை மிக்க ஸ்ருதாரணமும், கன்மனத்தினரையும் கரைக்கக் கூடிய ஒரு சில உருக்கமான ஐதிஹ்யமும் இப்படியாக நிமிஷந்தோறும் அனுபவிக்கலாம். இத்தகைய கம்பீரமான அனுபவத்தின் மூலம் உயர்ந்த பயனை வேறு யாரிடமிருந்து நாமடையக்கூடும்? ஆயிரம் மைல்கள் பிரயாணம் செய்து பலமணி நேரங் காத்திருந்தும் அனுபவிக்கத்தக்கது இது.

தனது கிரந்தங்களில் வரைவதைவிட ஆழ்ந்தும் விஸ்தாரமாயும் விஷயங்களை கால
க்ஷேபங்களில் விளக்குவது, ஸ்வாமியின் ஸ்வபாவம். அடிக்கடி ஆர்வத்துடனும், ஆசையுட
னும், இவருடைய உபன்யாச ச்ரவணம் செய்தவர்களில் முக்கியமாக டாக்டர் உ. வே.
ஸ்வாமிநாதய்யர் ஸ்ரீ எஸ். வரதாசாரியார், ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஜஸ்டிஸ் பதஞ்ஜலி
சாஸ்திரி, ஸ்ரீ *T. S.* நடேச சாஸ்திரி போன்ற பெரியோர்களைக் குறிப்பிடலாம்.

நமது ஸ்வாமி, ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி என்ற இந்த நான்கு பாஷை
களிலும் கிரந்தங்களை எழுதி வெளியிட்டு வருவதுடன், அநுஸ்யூதமாக 'வைதிக மனோஹரா',
'ஸ்ரீராமானுஜன்' போன்ற மாத ஸஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகிறார். ஸ்தோத்ரக்ரந்தங்
கள், ரஹஸ்யங்கள், திவ்யப்ரபந்தங்கள் இவைகளுடைய தமிழ் வ்யாக்யானங்களைப் பற்றி முன்பே
குறிப்பிட்டோம். ஸ்ரீ ராமானுஜர், நம்பிள்ளை, வேதாந்த தேசிகர், மணவாள மாமுனிகள்
இவர்களருளிச் செய்த க்ரந்தங்களைத் தொகுத்து அழகிய ஒரே ஸ்ரீகோசமாக 'க்ரந்தமாலா'
என்ற பெயருடன் வெளியிட்டதையும் நாமறிவோம். ஏராளமான வித்வான்கள் ஒன்று கூடி
பரிச்ரமப்பட்டு மிகுந்த திறமையுடன் செய்யவேண்டிய மகத்தான காரியமிது. ஸ்வாமி
இயற்றியருளிய கிரந்தங்களில் விசேஷமாக—வேதவேதாந்த ஆராய்ச்சியின் பயனாக வெளி
வந்த 'வேதாத்யயன ஸர்வஸ்வம்', ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஸாரத் தொகுப்பான
'வேதாந்தஸர்வஸ்வம்', கடின தர்க்க சாஸ்திரத்தைப்பற்றிய 'தர்க்க சாஸ்த்ரஸர்வஸ்வம்'
ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ பாஷ்யத்திலும் கீதாபாஷ்யத்திலும் பலவிடங்களில் நம்மாழ்வார்
ஸ்ரீஸூக்திகளை நெஞ்சில்கொண்டே பல நிருபணங்களைச் செய்துள்ளார் என்று காட்டும்
"த்ரமிடோப நிஷத்ப்ரபாவஸர்வஸ்வம்' என்பன மிகமிக முக்கியமானவை. திவ்யப்ரபந்தங்கள்
நாலாயிரத்தையும், முமுக்ஷுப்படியையும், ஸ்ரீவசன பூஷணத்தையும் ரமணீயமான
ஸம்ஸ்க்ருத ச்லோகங்கள் மூலம் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார். ஸ்வாமி மஹாகவி
களில் ஒருவராகக் கணிக்கப்பட வேண்டியவர் என்பது 'ஸ்ரீராமாயண தண்டகம்''
'ஸ்ரீராமபத்ர கர்ணாம்ருதம்', 'கோவிந்த கீதாம்ருதம்', 'கோபால பக்தாம்ருதம்',
மணவாள மாமுனிகளின் மகிமையை வர்ணிக்கும் விலைமதிப்பற்ற பிரஸித்தி வாய்ந்த 'ஸ்ரீசை
லேச பாதுகா ஸஹஸ்ரம்' போன்ற க்ருதிகளிலிருந்து ஸ்பஷ்டமாய் விளங்கும். ஸ்ரீ வால்மீகி
ராமாயணத்தை ஸர்கம்ஸர்கமாக சுருக்கிய நடையில் எளியதமிழில் அனுவாதம் செய்து பிரச
ரித்துள்ளார். கடுமையாகவும் தீவ்ர த்வேஷத்துடனும் எதிர்ப்பவர்களால் சூழப்பட்ட நிலை
யில், அநேக பண்டிதர்கள் சேர்ந்து ஒருதலைமுறையில் வெளியிடக்கூடிய அளவுக்கு ஸர்வ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விஷய சம்பந்தியான ஏராள வடமொழி தென்மொழி நூல்களை தன்னந் தனியாக இயற்றியிருக்கிறார். ஏதோ ஒரு வ்யாஜத்தைக் கைக்கொண்டு அஸூயை, த்வேஷம் இவைகளால் உந்தப்பட்டு நமதுஸ்வாமியை தூஷிக்கப் பலர்முயன்று தாம் பரிபவமடைந்துள்ளனர். ஸ்வாமி கூடஸ்தருக் கேற்பட்ட 'ப்ரதிவாதி பயங்கரம்' என்ற பிருது ஸ்வாமிக்கு மிகப் பொருத்தமாயமைந்தது. அநேக வாதக்ரந்தங்கள் ஸ்வாமி வாயிலாக வெளிவந்துள்ளன. இவைகள் வேதங்களுடையவும் வேதபாஷ்யங்களுடையவும் தவறான வ்யாக்யானங்களையும், ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தமான விசிஷ்டாத்வைத வேதாந்த கண்டனங்களையும் ஸ்ரீ வைஷ்ணவ பூர்வாசார்ய ஸூக்திகளைத் திரித்துக் கூறி தூஷிப்பதையும் ஆராய்ந்து, திருத்தி, கண்டனம் செய்து தத்வத்தை உறுதிப்படுத்துவதற்காக எழுதப்பட்டவை.

பிறரை ஹேளனம் செய்வதற்காக ஸ்வாமி இவைகளை வெளியிடவில்லை. மிகவும் அவச்யம என்று கருதினாலொழிய இவைகளை எழுத முன் வருவதில்லை. உண்மையிலுள்ள விச்வாஸத்தினால், மனதிற்குப் பிடித்த மில்லாதிருப்பினும் அவச்ய நிர்வர்த்தநீயமானதால் பல்பஜமான துர்வாதங்களை எடுத்துக் காட்ட இவைகளை எழுதியுள்ளார். நமது ஆசார்யர்களுடைய ஹார்தமான ஆசயங்களுக்கு விருத்தமான வாதங்களை நிர்ப்பயமாய் ப்ரயோஜநாநபேக்ஷராய் அந்யதாவாதம் அபவ்யாக்யானம் என நிரூபிக்கும் வகையில் கண்டனம் செய்வதே தன் பவித்ரகடமையாக ஸ்வாமி கருதுகிறார், பிடிவாதமாய் தான் சொன்னதே சரி என்று வாதிகள் நிலைநாட்டவிரும்பும்போது வாதப்ரதிவாதங்கள் அபிவிருத்தி யடைவது ஸ்வபாவம் தானே. இத்தகைய சந்தர்ப்பங்களில் வாதிகளுடைய தாக்குதல்களுக்கு அஞ்சாமலும் தனது அசைக்க முடியாத வாதங்களால் தீவிரமாய்த் திருப்பித் தாக்கத் தயங்காமலும் ஸ்வாமி கட்சியே நியாயம் என்று வித்வான்கள் கொண்டாடும் வகையில் ஜயசீலராய் விளங்குகிறார். ஸ்வபாவத்திலேயே ஆசார்ய நிந்தனையைப் பொறுக்கமாட்டார். பொருத்தமாயும், விசதமாயும், ஆதரணீயமாயும் ப்ரமாணக்ரந்தங்களுக் கனுஸரணையாயுமுள்ள வாதங்களால் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளுடைய ப்ரதிஷ்டிதமான பாரம்யத்தை பல நூல்களில் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

நமது ஆசார்யர்களுடைய மஹிமையையும் அவர்களது ஸ்ரீஸூக்திகளின் பெருமையையும் ஸ்தாபிக்கும் பரமோத்தேசத்துடன் விருப்பு வெறுப்பின்றி ஸ்வாமி வாதங்களைச் செய்து வென்றாரென்பது பாரபக்ஷமில்லாத விமர்சகர்களுக்குடன்பாடு. இந்த விமர்சனங்களில் ஸ்வாமியினுடைய த்ருஷ்டி மஹத்தான க்ரந்தங்களுடைய கம்பீரபாவங்களிலும் நிராக்ஷேபமானஸித்தாந்தங்களில் மட்டுமே லயித்திருந்தது.

இந்த க்ரந்தங்களை மேல் பார்வையாக நோக்குங்கால் ஸ்வாமி எல்லை மீறிய மதாபிமானமுள்ள ஆக்ரஹியாகத் தோன்றலாம். சுயநலமிகள் இங்ஙனமே துஷ்ப்ரசாரம் செய்தும் வருகின்றனர். ஆனால் இது உண்மைக்கு முற்றிலும் மாறானது. சாந்திப்ரதானரான நம் ஸ்வாமி ஒற்றுமையை மிக விரும்புகிறார். ஹிந்து மதாபிமானிகளிலும் கலாந்தராவலம்பிகளிலும் எண்ணற்ற ஸுஹ்ருத்துகளையும் அபிமானிகளையும் ஸ்வாமி பெற்றுள்ளார். இந்த விமர்சன க்ரந்தங்களில் கடினமான ஆராய்ச்சிகளும் துரூஹமான விஷயங்களும் எளிதில் யாவருமுணரத்தக்க வகையில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. கடினமான பாகங்கள் தெளிந்த நேர்மையான வ்யாக்யானங்கள் மூலம் ஸம்சய லேசத்திற்கும் விஷயமன்றிக்கே தீர்மானிக்கப்பட்டு கரதலாமலகமாக விளக்கப்பட்டுள்ளன. ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயத்தைச் சேர்ந்த தென்கலை சம்ப்ராதயத்துக்கு ப்ரமாணபூதராகக் கொள்ளப்பட்டுள்ள பிள்ளை லோகாசாரியருடையவும் வடகலை ஸம்ப்ரதாயத்துக்கு ப்ரவர்த்தகர் என்று சிலர் போற்றும் வேதாந்த தேசிகருடையவும் கருத்துகள் மாறுபட்டவையல்ல என்பதை ஸ்தாபித்துப் பல நூல்களை எழுதியுள்ளார்.

"ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி நூற்றுக்கணக்கான க்ரந்தங்களை எழுதியிருக்கிறார். ஒரு விஷயத்தை எடுத்து விமர்சிப்பதில் ஸ்வாமியை மிஞ்சுபவர் எவருமிலர். அவர் விமர்சனத்திற்குட்பட்ட விஷயங்கள் பலவிதப்பட்டவை. யுக்தி பூர்வமான விவகாரம் செய்வதில் ஸ்வாமியின் உற்சாகம் கரைபுரண்டது. எதிர் வாதம் புரியும் ப்ரதிபக்ஷிகள் பலர் விஷயத்தைவிட்டு வ்யக்தியை லக்ஷ்யமாகக் கொள்வதுண்டு. இந்த வாதங்களனைத்திலும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்வாமியினுடைய பேச்சே முடிவானதாயிருக்
ஸ்வாமி ஒரு சமயமும் பின் வாங்கியவரல்ல. ஸ்வாமியினுடைய விஷயத்தை விடாது. எளிதில்
கும். இங்ஙனம் ஒன்றல்ல பலவுண்டு. விமர்சிக்கப் புகுந்த விஷயத்தை விடாது. எளிதில்
புரியும் விளக்கமானது தெளிவாய் வெட்டொன்று துண்டிரண்டு என்று தேங்காய் உடைத்
தாற்போல் காணப்படும்'' இவ்விதம் சென்னை மாநகரைச் சேர்ந்த ப்ரஸித்திபெற்ற ஒரு அட்வ
கேட்டு (D. R.) எழுதியுள்ளார். பக்ஷபாதமில்லாத தடஸ்தர்கள் எல்லோரும் பல தடவை
ஸ்வாமியை இவ்வாறே புகழ்ந்துள்ளனர்.

திவ்யஸ்தலங்களிலுள்ள அர்ச்சா
ஆழ்வாராசார்யர்கள் மங்களாசாஸனம் செய்துள்ள திவ்யஸ்தலங்களிலுள்ள அர்ச்சா இந்தியா முழுவதிலும் பல தடவை
மூர்த்திகளிடத்தில் நம் ஸ்வாமி தீவ்ரபக்தி பூண்டவர். இந்தியா முழுவதிலும் பல தடவை
யாத்திரை செய்துள்ளார். வேத - அத்யாபக கோஷ்டியுடன் பத்ரீநாராயணன்ஸன்னிதிக்கு
மும்முறையும், ரிஷீகேசம் ஹரித்வாரம் வரை வ்யாபித்துள்ள வடதேச திவ்ய க்ஷேத்ரங்களுக்கு
இருபது தடவையும் யாத்திரை சென்றிருக்கிறார். தென் தேசத்திலுள்ள மங்களாசாஸனம்
பெற்ற திருப்பதிகளின் யாத்திரைகள் கணக்கிலடங்கா இருப்பினும் காஞ்சி பேரருளாளனை
ஸ்ரீ தேவராஜனிடமே ஸ்வாமிக்கு அதிக பக்ஷபாதம். யாத்திரை சென்ற ஸமயம் தவிர மற்ற
காலங்களிலெல்லாம் காஞ்சியிலேயே வாஸம் செய்து வருகின்றனர். வரதராஜப் பெருமாள்
அல்லது மற்றும் காஞ்சி எம்பெருமான்கள் திருவீதி புறப்பாட்டின்போது வேத கோஷ்டி
பிரபந்த கோஷ்டிகளில் அன்வயிக்காமல் இருப்பதில்லை. ஸ்வாமி இல்லாத எந்த கோஷ்டி
யும் காஞ்சிவாஸிகளுக்கு சந்திரனில்லாவானம் போல சூன்யமாகவே காட்சியளிக்கும்.
(டென்மார்க் இளவரசனில்லாத—ஹாம்லெட்—நடிக்கப்பட்டதுபோன்று களையிழந்தது).

காஞ்சிபுரத்தில் பிரதிதினம் வேத பாராயணம் செய்து கொண்டு வீதிப்ரதக்ஷிணம்
வரும் ''நித்யப்ரதக்ஷிண கோஷ்டி''யை ஸ்வாமி 1919-ம் ஆண்டில் ஆரம்பித்தார். இன்று
வரை இந்த ஏற்பாடானது எந்த சீதோஷ்ண நிலையிலும் ஒருநாள்கூட தடைபடாது நிறை
வேறி வந்துள்ளது. தொடர்ந்து நடைபெறுகின்றது. ஆத்மோந்நதிக்கு ஏதுவான எம்பெரு
மான் திருவுள்ளத்திற்கிசைந்த வாசிக கைங்கரியமிது.

வரதராஜ ஸ்வாமி திருக்கோயிலின் அருகில் ஸ்வாமி நம்பிள்ளை ஸன்னிதியைக் கட்டி
முடித்து பூர்வாசார்யர்களில் மஹநீயர்களான நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை,
பெரியவாச்சான் பிள்ளை என்ற மூன்று மஹாசார்யர்களுடைய மூர்த்திகளைப் பிரதிஷ்டை
செய்துள்ளார். இந்த மஹாசார்யர்கள், திவ்யப்ரபந்தங்களுக்கு வியாக்யானங்கள் அருளிச்
செய்து வைஷ்ணவ சமுதாயத்தை உஜ்ஜீவிக்கச் செய்த மஹாபுருஷர்கள். இவர்களுடைய
வ்யாக்யானங்கள் தோன்றாமலிருப்பின் 'பகவத் விஷயம்' என்றழைக்கப்படும் திவ்யஜ்ஞான
மானது என்றோ மறைந்து போயிருக்கும். இந்த சன்னிதி 1939-ல் நிர்மாணிக்கப்பட்டது
இங்கு சாச்வதமாய் திருவாராதனங்கள் நடப்பதற்கென்று மூலதனம் சேமிக்கப்பட்டுள்ளது.

இந்த மஹாவித்வானுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி பல நாட்கள் உயரிய முறையில்
சிறப்பாக. காஞ்சீபுரம், சென்னை, திருமலை திருப்பதி, ஷோலாபூர், டில்லி இந்த இடங்களில்
1951ல் கொண்டாடப்பட்டது. வேறெந்த வித்வானுக்கும் வாய்த்திராத ரீதியில் மஹா
ஜனங்கள் நமது ஸ்வாமியை கௌரவித்தனர். டெல்லி ப்ரமுகர்களும், யூனியன் மந்திரிகளும்,
ஸுப்ரீம் கோட்டு ஜட்ஜுகளும், உயர்ந்த உத்யோகஸ்தர்களும் ஏராளமான பொது ஜனங்
களும் கலந்து கூட்டம்கூடி கௌரவித்தது ஒரு தேசீய திருவிழாவாகவே காணப்பட்டது.

தனக்குக் கல்வி புகட்டியவர்களும், நல்லுபதேசம் செய்தவர்களுமான ப்ரஸித்த
வித்வான்களுடைய படங்களுடன் தம்ஸுயசரிதையை 1956-ம் ஆண்டில் ஸ்வாமி எழுதி
வெளியிட்டார். ஸுஹ்ருத்துக்களுடையவும், அபிமானிகளுடையவும் படங்கள் இதில்
காணப்படும். ஸ்வாமி வெளியிட்ட எல்லா நூல்களின் அட்டவணையு மிதிலடங்கியுள்ளது.
ஸ்வாமியினுடைய பால்யத்தில் தழைத்திருந்த ப்ராசீன பண்டிதர்களின் திவ்ய சரித்திர
வாழ்க்கைக் குறிப்புகளுடன், தன் ஜீவிதத்தைப் பற்றிய விஸ்தாரமான வர்ணனையும் இதில்
வெளியிட்டிருக்கிறார்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருவடிராயபுரம் என்கிற சுரோத்ரியக் கிராமமானது பரம்பரை ஸொத்தாக ஸ்வாமிக்கு கிடைத்திருந்தது. ஆனால் இனாம் ஒழிப்புச் சட்டத்தினால் அதை இழக்கவேண்டியதாகிவிட்டது. தனது வெளியீடுகளாலும், காலக்ஷேப மூலமாகவும் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பாகத்தை தன்னால் ஸ்தாபிக்கப்பட்ட வேத வேதாந்த பாடசாலையை நிர்வஹிப்பதிலும் ஏழை ஸ்ரீ வைஷ்ணவ வித்யார்த்திகளுக்கு யதாசக்தி உபகரிப்பதிலுமாகச் செலவிட்டு வருகின்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்வாமி தன் வாழ்க்கைத் துணைவியை இழந்தார் ஸ்வாமிக்கு இரு புதல்விகளும் பெண் வயிற்றுப் பேரன் பேத்திகளுமிருக்கின்றனர். செல்வ மணி என்று செல்லமாய் அழைக்கப்படும் தன் தௌஹித்ரன் ஸ்ரீ ப்ர. ப. ரங்கநாதாசாரியரைப் புதல்வனாக ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். ஸ்வாமி மூத்த மாப்பிள்ளை, மேல்கோட்டை ஸ்ரீ உ. வே தி. அ. அ. சம்பத்குமாராசர்ய ஸ்வாமி எம். ஏ. ஹிந்தி, ஸம்ஸ்க்ருதம், ஸம்ப்ரதாய மிவைகளில் நிபுணராதலின் ஸ்வாமி க்ரந்தங்கள் ப்ரசுரிக்கப்படுவதில் தாராளமாய் உதவிபுரிந்து வருகிறார். பாடசாலையை நிர்வாகம் செய்வதில் ஸ்வாமியுடைய இளையமாப்பிள்ளை ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ உ. வே. மணவாள திரு மலாசார்யார் ஸ்வாமி உதவி புரிந்து வருகிறார்.

இந்த சுருக்கமான வ்யாஸத்தில் ஸ்வாமியினுடைய ஸர்வதோமுகமான கௌசலங்களையும், இடையறாத ஸம்ப்ரதாய கைங்கர்யங்களையும், வியக்கத்தக்க செழிப்பான க்ரந்த நிர்மாணங்களையும் பூர்ணவிமர்சனம் செய்வது ஸாத்யமல்ல. விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்திற்கு மார்க்கப்ரதர்சகராக ப்ரகாசிக்கும் ஸ்வாமி நம் மத்தியில் உலவி வருவது நமது மஹத்தான பாகதேயமாகும். அவருடைய க்ரந்தங்களை ஸாவதானமாய்ப் படித்து, அவரது உபந்யாசங்களைச் செம்மையுற உணர்ந்து ஆதர்ச ஸ்ரீ வைஷ்ணவர்களாக வாழ முயல்வதே நாம் ஸ்வாமியை கௌரவிக்கும் சிறந்த மார்க்கமாகும். நமது மாபெரும் தேசத்தின் ஆன்மீக உயர்விற்காகவும், ஸ்ரீ ராமானுஜஸித்தாந்தத்தின் ப்ரசாரத்திற்காகவும், ஸ்வாமிக்கு தீர்க்க ஆயுளையும், ஆரோக்யத்தையும் அருளி அனுக்ரஹிக்கும்படி ஸர்வேச்வரனைத் தாழ்மையுடன் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
டாக்டர் V. V. ராமானுஜம். M. A. Phd.
திருவல்லிக்கேணி.

மொழிபெயர்ப்பாளர்,

பிரஹ்மஸ்ரீ *T.* ராமச்சந்திர சாஸ்திரிகள்
ஸ்ரீபெரும்பூதூர் (1-7-64)

சுடர் பிரிண்டர்ஸ், சென்னை-1.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.